இரண்டே நாள்!

(துப்பறியும் நவீனம்)

எழுதியவர் :

ஏ. எம். மீரான்

லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர் :: சென்னை-17

பிரசுரித்தது

முதற் பதிப்பு: நவம்பர், 1956
பதிப்புரிமை பெற்றது

விலை ரூ. 1—0—0

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

சென்னையில் லிப்கோ ஏஜெண்டுகள்
எம். தாமோதரம் & கம்பெனி
அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை-1

முன்னுரை

'லிப்கோ' முத்திரையிட்டு என் முதல் நாவலான 'அபாயச் சீட்டு' வெளிவந்தது. வாசகப் பெருமக்களின் ஆதரவும், பத்திரிகைகளின் ஒருமுகமான பாராட்டுதலும் எனக்கு அதிக ஊக்கத்தை அளித்தன. தொடர்ந்து நான் எழுதிய நாவல்களும் நன்மதிப்பைப் பெற்றிருப்பதாக பிரசுரகர்த்தர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்கு என் நன்றி.

என்னுடைய நாவல்கள் ஒவ்வொன்றிலும், கதை சொல்லும் முறையில் ஒவ்வொரு புதுப் பாணியைக் கையாண்டிருக்கிறேன். இந்த நாவலிலும் அம் மாதிரியே நூதனமான ஒரு புதுப் பாணியைப் புகுத்தியிருக்கிறேன். இது நிச்சயம் வாசகர்களின் மனதை மகிழ்விக்கும் என்று துணிந்து சொல்லலாம்.

சென்னையில் கிட்டத்தட்ட ஏழு லட்சம் பெண்கள் இருக்கிறார்கள். இவர்களில் யாரோ ஒரு பெண்ணுக்கு ஆபத்து என்று சாகுந் தறுவாயிலிருக்கும் ஒருவன் சொல்லுகிறான். யாரென்று தெரியா ஒருவன் சொன்னதை வைத்துக்கொண்டு, அடையாளம் தெரியா ஒரு பெண்ணை சென்னை மாநகர் முழுதும் தேட ஆரம்பிக்கிறார் துப்பறியும் பீதாம்பரம். இப்பொழுது நீங்கள் படிக்க ஆரம்பிக்கலாம்....

— ஏ. எம். மீரான்.

அத்தியாயங்கள் :

1. "ஆபத்து; ஒரு பெண்ணுக்கு!"
2. கொலையா? தற்கொலையா?
3. கொடு சூலியா? படு நீலியா?
4. "நான் செத்தது பொய்!"
5. சூழ்ச்சிக்காரர்களின் விருந்து!
6. ஜாலக்காரி!
7. வாழக்கூடாதவர்கள்

ஏ. எம். மீரான் எழுதிய இதர
துப்பறியும் நாவல்கள் :

1. அபாயச் சீட்டு
2. மர்ம மாளிகை
3. இவனைத் தெரிகிறதா?
4. மர்மக் கடிதம்
5. மர்மக் குரல்
6. இருளில் ஓர் உருவம்!
7. இதயமற்றவன்

பஜெ ... தி. க. ...

1

“ஆபத்து; ஒரு பெண்ணுக்கு!”

துப்பறியும் நவீனம் ஒன்றை வெகு ரசனையுடன் படித்துக் கொண்டிருந்தார் துப்பறியும் நிபுணர் பீதாம்பரம். அந் நேரத்தில் அவர் தம் கவனத்தைத் திருப்ப மாட்டார் என்பதை உணர்ந்திருந்த சுகுமாரன் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். அவனும் துப்பறியும் பீதாம்பரமும் அப்போதுதான் மிகப் பெரிய வழக்கு ஒன்றுக்காகப் பதினைந்து நாட்கள் படாதபாடு பட்டுவிட்டு ஓய்ந்திருந்தனர். இந்த இடைக்காலத்தில் பத்திரிகைகளில், அந்த வழக்கையும் துப்பறியும் நிபுணர்கள் இருவரின் திறமையையும் பற்றி எழுதியிருந்த பகுதிகளைக் கத்தரித்துச் சேகரிக்க முனைந்தான் சுகுமாரன்.

நீண்ட தூரம் வெயிலில் நடந்துவிட்டு நிழலுக்கு வந்தவுடன், தாகம் தணிக்கத் தண்ணீரை நாடுவதுபோல துப்பறியும் பீதாம்பரம் கடுமையாக உழைத்துவிட்டு ஓய்வு கிடைக்கும் நேரங்களில் துப்பறியும் நவீனங்களைப் படிப்பார். இது அவருக்குப் பழக்கமாகிவிட்டது.

கதையின் ரசமான ஒரு கட்டம்; அதில் தம்மை மறந்து மூழ்கியிருந்தார். பக்கத்து அறையில் அப்போதுதான் டெலிபோன் மணி அடித்தது. ஆனால் துப்பறியும் பீதாம்பரம் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. சுகுமாரன் விறுவிறு வென்று அடுத்த அறைக்குள் சென்றவன் சிறிது நேரத்தில் பீதாம்பரத்திடம் வந்தான். அப்போதும் அவர் நிமிர்ந்து பார்க்கவில்லை.

சுகுமாரன் ஒருமுறை கனைத்துவிட்டுக் கொண்டான். திடுக்கிட்டு நோக்கிய பீதாம்பரத்தின் முகம் பொறுமையற்றுக் காணப்பட்டது. அந்த நேரத்தில் அவரைத் தொந்தரவு படுத்தியதற்காக சுகுமாரன் சற்று சஞ்சலப்பட்டாலும் அவன் கூற வந்த விஷயம் முக்கியமாக யிருக்கவே, பீதாம்பரத்தின் கோபப் பார்வையை அவன் புரிந்து கொள்ளாதவன் போலவே பேசினன்,

"சகாதேவன் என்பவன் உங்களுடன் பேசவேண்டுமென்கிறான்" என்று சற்று பணிவாகக் கூறினான் சுகுமாரன்.

"எந்த சகாதேவன்?" என்று சிடுசிடுப்பாகவே கேட்டார் பீதாம்பரம்.

"தெரியவில்லை. உங்களுடன் தான் பேச வேண்டுமென்று பிடிவாதமாகச் சொல்லுகிறான். எவ்வளவோ சொன்னேன். ஒரேயடியாகச் சாதிக்கிறான்" என்று பயந்தபடி கூறினான் சுகுமாரன்.

"நான் இங்கே இருப்பதாகச் சொல்லியிருப்பாய். அதனால்தான் அவன் அவ்வளவு பிடிவாதமாகச் சொல்லுகிறான். சரி...எதற்காக அவன் என்னைப் பார்க்க வேண்டுமாம்?"

"என்னிடம் எதுவுமே சொல்ல மறுக்கிறான். உங்களுடன்தான் பேச வேண்டுமென்கிறான்" என்றான் சுகுமாரன்.

ஆத்திரத்துடன் 'டப்'பென்று புத்தகத்தை மூடி வைத்து விட்டு, டெலிபோன் இருந்த அறைக்குள் சென்ற பீதாம்பரம், ஒரு சில நிமிஷங்களுக்கெல்லாம் திரும்பி வந்தார். இப்போது அவர் முகத்தில், சற்று முன்பு இருந்த கோபத்தின் சாயலைக் காணோம். மாறாக பரபரப்புத்தான் தெரிந்தது. அவசர அவசரமாக அறையைவிட்டு வெளியே வந்த அவர், "சுகுமாரா! கார் ரெடியாக இருக்கிறது அல்லவா?" என்று கேட்டார்.

'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான் சுகுமாரன்.

"இப்போது நாம் மைலாப்பூருக்குச் செல்ல வேண்டும். அங்கே உள்ள நளினா ஹோட்டலுக்குச் சென்று ஏதாவது வயிற்றுக்குப் போட்டால்தான் எனக்கு நிம்மதி ஏற்படும்" என்று சொல்லிவிட்டு உடுப்புகளை மாற்றினார் பீதாம்பரம். சுகுமாரனுக்கு இது ஆச்சரியமாகவே இருந்தது; 'காலை பதினொரு மணிதான் ஆகிறது. ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் காலை ஆகாரம் உண்டோம். அதற்குள் பீதாம்பரத்துக்கு ஏன் பசித்தது? அதிலும் வீட்டில் கூட இல்லாமல்

பக்கத்தில் உள்ள ஹோட்டல்களையெல்லாம் விட்டுவிட்டு மைலாப்பூரில் ஏதோ ஒரு ஹோட்டலுக்கு ஏன் செல்ல வேண்டும்' என்று அதிசயப்பட்டான். அப்போது காரணம் ஏதும் கேட்பது அவ்வளவு உசிதமாகப் படவில்லை அவனுக்கு. ஆகவே, விறுவிறு வென்று உடைகளை மாற்றிக் கொண்டு பீதாம்பரத்தைப் பின்தொடர்ந்து சென்று காரில் ஏறிக் கொண்டான். தாஞக விவரம் சொல்லுவார் என்று தெரிந்து கொண்டிருந்த சுகுமாரன், பீதாம்பரத்திடம் ஒன்றும் பேசாமல் காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்தான்.

சுகுமாரன் எதிர்பார்த்தபடியே பீதாம்பரம் பேச்சை ஆரம்பித்தார். "சுகுமாரா! சகாதேவன் என்று அதிகமாகப் பெயர் வைப்பதில்லை அல்லவா?" என்று யோசனையோடு கேட்டார்.

"ரொம்ப அபூர்வம். நல்ல பெயர்களை வைக்கத்தான் நம் ஜனங்களுக்குப் பிடிக்காதே!" என்று சிரித்தவாறு கூறினுன் சுகுமாரன்.

"நமக்கு டெலிபோன் செய்தானே, சகாதேவன். அவனை இதற்குமுன் எங்காவது பார்த்திருக்கிருயா?"

— இதைக் கேட்டதும் ஒரு விஞடி திகைத்து விட்டான் சுகுமாரன். சகாதேவன் என்று பெயர் உள்ள யாரோ ஒரு மனிதன் டெலிபோனில் பேசிஞன் என்பதுதான் அவனுக்குத் தெரியுமேயன்றி, பேசிய மனிதன் எங்கிருக்கிருன், எப்படியிருப்பான் என்று அவனுக்குத் தெரியாது. ஆகவே, அவன் பீதாம்பரத்தின் கேள்விக்கு விடையளிக்காமலிருந்ததில் ஒன்றும் ஆச்சரியமில்லை. மீண்டும் பீதாம்பரமே பேசிஞர்.

"உனக்குத் தெரியாது; இல்லையா? எனக்கும் அப்படித்தான்! இதற்காக நீ வருத்தப்படாதே. இப்போது அவனுக்கு என்ன என்று கேட்கிருயா? நான் சொல்லப் போவதைக் கேட்டால் நீ திடுக்கிட்டுப் போவாய்! ஒரு பெண்ணின் உயிருக்கு ஆபத்து என்று அவன் நமக்கு முன்னெச்சரிக்கை கொடுத்திருக்கிருன். ஆஞல், அவளுக்கு முன் அவன் சாகப் போகிருன் என்பது அவனுக்குத் தெரியுமா 'என்ன?" என்று சொல்லிவிட்டு சுகுமாரனை நோக்கிஞர்.

இதைக் கேட்டதும், உடலில் ஊசியைக் கொண்டு 'நறுக்'கென்று குத்துவது போலிருந்தது சுகுமாரனுக்கு. சகா தேவன் இறக்கப் போகிறான், அதுவும் கொலைப்பட்டு மரண மடையப்போகிறான் என்ற விஷயத்தை எவ்வளவு சாதாரண மாகச் சொல்லுகிறார் என்பதை நினைத்தபோது அவனுடைய திகைப்பு பெருகிக்கொண்டே சென்றது.

" சகாதேவன் சாகப்போகிறான் என்று உங்களுக்கு எப் படித் தெரியும்?" என்று வியப்போடு கேட்டான் சுகு மாரன்.

" நாம் வீட்டை விட்டிறங்கி வரும்போது, வாசலி லிருந்து ஒரு கார் வேகமாகச் சென்றது. அதை நீ கவனிக்க வில்லை என்று நினைக்கிறேன். சில முடிச்சுமாறிப் பயல்கள் வேலை பார்க்க ஆரம்பித்தால் இப்படித்தான் மூன்றாவது மனி தனுக்குத் தெரியும்படி விழுந்தடித்துக் கொண்டு ஓடுவார் கள் " என்றார் பீதாம்பரம்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாகவே இருந்தனர். பீதாம்பரத்தின் திட்டம் என்ன, அவர் எதற்காக நளினா ஹோட்டலுக்குச் செல்ல வேண்டுமென்றார், அங்குபோய் சகாதேவனையோ, அவன் காப்பாற்றச் சொல்லிய பெண் ணையோ எப்படித் தேடப் போகிறார் என்பதைச் சுற்றியே வளைய வந்து கொண்டிருந்தான் சுகுமாரன்.

" நளினா ஹோட்டலுக்குத் தான் நம்மை வரச் சொல்லி யிருக்கிறான் சகாதேவன். அங்கு போனால் எல்லாம் வெளிச் சமாகிவிடும்" என்றார் பீதாம்பரம். இதைக் கேட்டுவிட்டுச் சிறிது நேரம் யோசனையிலாழ்ந்து விட்ட சுகுமாரன்,

" நாம் சகாதேவனைப் பார்த்ததேயில்லை. அவன் மட்டும் நம்மைப் பார்த்திருக்கப் போகிறானா, என்ன? இந்த நிலையில் நாம் நளினா ஹோட்டலுக்குச் சென்று என்ன சாதித்து விட முடியும்?" என்று சந்தேகத்தோடு கூறினான்.

" அதில் தானிருக்கிறது மர்மம். ஒரு பெண்ணுக்கு ஆபத்தென்று கூறினானே, அதை நம்மிடம் சொல்லாமல் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கே நேரில் சென்று சொல்லி யிருக்கலாம். ஆனால், அவன் நம்மை நன்றாகத் தெரிந்திருக்கப்

போய்த்தான் குறிப்பாக என்னைக் கூப்பிட்டுச் சொல்லியிருக்கிறுன்" என்றூர் பீதாம்பரம்.

"அவன் நேரே வந்து கூடச் சொல்லியிருக்கலாம்" என்று சந்தேகம் தீராதவனுகவே கூறினுன் சுகுமாரன்.

இதைக்கேட்டதும் கடகடவென்று சிரித்து விட்டார் பீதாம்பரம். "இன்னும் நீ நிலைமையை உணரவேயில்லை, சுகுமாரா! அவனுக்கு ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது என்றுதான் முன்னமே சொன்னேனே. ஆகையால்தான் அவன் வெளியே எங்கும் செல்வதற்குப் பயந்துபோய் டெலிபோன் மூலம் விவரத்தைச் சொல்லியிருக்கிறுன்" என்றூர் பீதாம்பரம்.

"நம் வீட்டுக்கு முன்னுலிருந்து காரைக் கிளப்பிக் கொண்டு போனவனை நீங்கள் நன்ருகப் பார்த்தீர்களா?"

"அவனைப் பார்க்க முடியவில்லை. ஆனுல் கார் புறப்பட்ட தோரணையைப் பார்த்தால், நிச்சயமாக அவன் நம் வீட்டைச் சுற்றி மோப்பம் பிடித்திருக்கிறுன், நம்மைக் கண்டதும் ஓடிவிட்டான் என்று மட்டும் என்னுல் யூகிக்க முடிகிறது."

இதற்குள் மைலாப்பூர் பகுதிக்குள் துப்பறியும் நிபுணர்களின் கார் வந்து விட்டது. இதற்குமேல் பேசிக்கொண்டே காரை ஓட்டினுல், சேர்ந்தாற்போல அரை டஜன் உயிருக்காவது ஆபத்து நேர்ந்து விடும் என்பதை உணர்ந்து கொண்ட சுகுமாரன், பேசாமல் காரை ஓட்டுவதிலேயே கவனமாயிருந்தான்!

நளினு ஹோட்டலுக்குள் இரு துப்பறியும் நிபுணர்களும் நுழையும்போது அங்கு எந்தவிதமான பரபரப்பும் இல்லை. சகஜமாகவே இருந்தது நிலைமை. ஹோட்டலில் கூட்டம் நிறைந்திருந்தாலும், விஸ்தாரமான அந்த இடத்தில் இருக்கும் ஒவ்வொருவரையும் சட்டென்று தெரிந்து கொள்ளலாம். பீதாம்பரம் கடைசியில் கிடந்த மேஜைக்குச் சென்றூர். அங்கு அதிகமாகக் கூட்டமில்லை. இடது பக்கம் போடப்பட்டிருந்த மேஜை ஒன்றிற்குப் பின்னுல் ஒரே ஒருவர் மட்டுமே உட்கார்ந்திருந்தார். சிறிது நேரத்தில்

'சப்ளையர்' ஒருவன் துப்பறியும் நிபுணர்கள் இருவரின் அருகில் வந்தான். பிஸ்கட் ஏதாவது கொண்டு வருமாறு கூறினார் பீதாம்பரம். ஹோட்டலில் என்னென்னவோ தின்பதற்கு இருக்கின்றன, பீதாம்பரம் குறிப்பாக, பிஸ்கட்டை எதற்காகக் கொண்டுவரச் சொல்ல வேண்டுமென்று தான் புரியவில்லை சுகுமாரனுக்கு.

சப்ளையர் பிஸ்கட்டைக் கொண்டுவந்து வைத்ததும், இருவரும் இரண்டை எடுத்துத் தின்ன ஆரம்பித்தனர். காலைத்தேய்த்துத் தேய்த்து அங்கேயே நின்று கொண்டிருந்த சப்ளையரை எப்படியும் அப்புறப்படுத்துவதற்காக, காபி கொண்டு வரும்படி அவனிடம் கூறினார் பீதாம்பரம். தங்கள் அருகில் யாரும் இல்லாமலிருந்தால் தான் சகாதேவனால் தங்களைச் 'சட்'டென்று அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்றே பீதாம்பரம் இவ்வாறு செய்தார். இவர்களிருவரையும், இடது புறமிருந்த மனிதர் ஏனோ அடிக்கொருமுறை பார்த்துக்கொண்டே யிருந்தார். எந்த வகையிலும் சம்சயப்பட முடியாதபடி அவர் அவ்வளவு பதவிசாக இருந்தார் பார்ப்பதற்கு. பெரிய அதிகாரியைப் போன்ற உயர்தரமான ஆடைகளோடு முகக் களையும் மிடுக்குப் பார்வையும் இருந்தன. மூக்கின் ஓரத்தில் இருந்த ஒரு கருப்பு மச்சமும் அழகிய இளந்தாடியும் கூட அவருடைய கவுரவத்தை இன்னும் உயர்த்துவதாயிருந்தன. ஒன்றிரண்டு முறை அந்த மனிதரை அசப்பில் பார்த்துக் கொண்டிருந்த பீதாம்பரம், சகாதேவனைத் தேடிக் கண்டு பிடிப்பதிலேயே தம் கவனத்தைப் பூராவும் செலுத்தியிருந்தார். சிறிது நேரத்தில் புதிய ஆள் ஒருவன், கையில் ஒரு காகிதப் பொட்டலத்துடன் அவர்களை நோக்கி வந்தவன், "இது ஸ்பெஷல் பிஸ்கட்" என்று சொல்லிவிட்டுத் தன் கையிலிருந்த காகிதப் பொட்டலத்தைத் தட்டில் வைத்தான். பீதாம்பரம் அந்தப் புதிய நபரை நன்றாகப் பார்ப்பதற்குள், அவன் அப்பால் நகர்ந்து விட்டான்.

ஏமாற்றத்தோடு, காகிதப் பொட்டலத்தைப் பிரித்தார் பீதாம்பரம், ஆனால், அந்தப் பொட்டலம் அவருடைய ஏமாற்றத்தை நொடி நேரத்தில் போக்கிவிட்டது. அவருடைய முகங்கூட பளிச்சென்று மகிழ்ச்சியால் மலர்ந்து விட்டது.

இதற்குள் பரிமாறுபவன் காபியைக் கொண்டு வந்து வைத்தான்.

"சுகுமார்! நாம் இப்போது "கனகா கபே"க்குச் செல்லவேண்டும்" என்று காபியைக் குடித்துக் கொண்டே கூறினார் பீதாம்பரம்.

"ஏன்? அங்கேயும் சாப்பிடவா?" என்று பதறிய படி கேட்டான் சுகுமாரன்.

பீதாம்பரம் இலேசாகச் சிரித்தார். "பயப்படாதே சுகுமாரா! இதோ, இதைப்பார்" என்று தம் கையில் வைத்திருந்த காகிதத்தைக் கொடுத்தார் பீதாம்பரம்.

கடிதத்தை வாங்கிப் படித்த சுகுமாரனுக்கு ஒரே ஆச்சரியமாகிவிட்டது. "இதென்ன கண்கட்டி வித்தை போலல்லவா இருக்கிறது? இந்தக் காகிதம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது ஸார்?" என்று வியப்போடு கேட்டான் சுகுமாரன்.

"சற்று முன் 'ஸ்பெஷல் பிஸ்கட்' கொண்டு வந்தானே அவன்தான் இந்தக் கடிதத்தையும் கொடுத்தான். பிஸ்கட்டைச் சுற்றியிருந்தது இந்தக் காகிதம் தான்" என்று விளக்கமாகக் கூறினார் பீதாம்பரம். சுகுமாரன் மீண்டும் ஒருமுறை அந்தக் கடிதத்தைப் படித்தான். அதன் வாசகம் இதுதான்.

> **"இங்கு உங்களிடம் பேச வாய்ப்பில்லை. என்னைக் கவனிக்கிறார்கள். ஆகையால், சிந்தாதிரிப்பேட்டை "கனகா கபே"க்குச் செல்லுங்கள். அங்கு உங்களைப் பார்க்கிறேன்."**

— பீதாம்பரமும் சுகுமாரனும் சிறிது நேரம் பேசாமலே இருந்தனர். இடது புறமிருந்த இளந்தாடிக்காரர் பொறுமையற்று அங்குமிங்கும் நகர்ந்து உட்கார்ந்து கொண்டேயிருந்தார்.

"சுகுமாரா! என்ன அப்படி இருந்து விட்டாய்? கிளம்பு போகலாம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து

சென்றார் பீதாம்பரம். இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வரும்போது மணி பனிரெண்டு ஆகிவிட்டது.

'கனகா கபே'க்குள் சென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்தனர் துப்பறியும் நிபுணர்கள் இருவரும். சிறிது நேரத்தில் ஒரு சிறுவன் வெளியேயிருந்து வேகமாக உள்ளே நுழைந்தவன், பீதாம்பரத்திடம் அன்றைய தினசரி ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு நகர்ந்தான். இதைச் சற்றும் எதிர்பாராத அவர், 'படக்'கென்று சிறுவனின் கையைப் பிடித்துக் கொண்டார்.

"காசு வாங்காமலே ஓடப் பார்க்கிறாயே தம்பி! நான் இப்போது உன்னிடம் பேப்பர் வேண்டுமென்று கேட்டேனா?" என்று சற்று மிடுக்குடனே கேட்டார் பீதாம்பரம்.

சிறுவன் பதில் சொல்லத் தயங்கினான், பயத்தால் பேதலித்திருந்த அவன் முகத்தைக் கண்டதும் ஏதோ அவனிடம் விஷயம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட பீதாம்பரம், சிறுவனை இலேசில் விடுவதாக இல்லை. அவருடைய கெடுபிடி அதிகமாகி விடவே, சிறுவன் பதில் சொல்ல வாயெடுத்தான். இதற்குள் அவர்களைக் கடந்து ஒரு மனிதன் சென்று கொண்டிருந்தான். அவனை ஏறிட்டுப்பார்த்த பீதாம்பரம் அவனுடைய திருட்டு முழியைக் கவனித்துக் கொண்டு, சிறுவனைப் பேச விடாது, அவனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். அந்த மனிதன் அப்பால் நகர்ந்ததும் சிறுவனைப் பேசச் சொன்னார்.

"வெளியே யிருக்கிறது பாருங்கள் பஸ் நிற்குமிடம். அங்கு நான் பத்திரிகை விற்பது வழக்கம். கம்பத்தில் சாய்ந்து கொண்டிருந்த மனிதர் ஒருவர் என்னிடம் ஒரு ரூபாயைக் கொடுத்து, இந்தப் பேப்பரை உங்களிடம் கொடுத்துவிட்டேனென்றால், ரூபாய் எனக்கே எனக்குத்தான் என்று சொன்னார். அதோ பாருங்கள். இன்னும் அவர் கம்பத்தில்தான் சாய்ந்து கொண்டிருக்கிறார்" என்று கையைத் தெருப் பக்கமாக நீட்டினான். அவன் கையைச் சட்டென்று கீழே மடக்கி விட்டுத் தெருவை நோக்கினார் பீதாம்பரம். அங்கு பஸ் நிற்குமிடத்திலுள்ள கம்பத்தில் ஒரு மனிதன் சாய்ந்தபடி, முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு நின்று கொண்டிருந்தான். ஒல்லியாக, உயரமாக இருந்த அவன் அவ்வளவு

உயர்த்தியான உடைகள் எதையும் அணிந்து கொண்டிருக்க வில்லை. சற்று கறுப்பானவன். அவன் வேட்டிக்கட்டையும் சட்டையையும் பார்த்தால் அவன் அவ்வளவாகப் படித் திருக்கமாட்டான் என்றும் யூகிக்க முடிந்தது. அவனுடைய முகத்தைப் பார்க்கமுடியாமலிருந்ததுதான் பீதாம்பரத்துக்கு ஒரே ஏமாற்றமாயிருந்தது.

அந்த மனிதன் திடீரென்று நடக்க ஆரம்பித்தான். ஆனால் இப்போதுகூட அவன், தன் முகத்தைத் திருப்பாமல் நடந்ததுதான் பீதாம்பரத்துக்குச் 'சப்' பென்ருகி விட்டது. அவன் நடையிலிருந்து ஒன்றைமட்டும் நன்ருகத் தெரிந்து கொண்டார். நளினு ஹோட்டலில் 'ஸ்பெஷல் பிஸ்கட்' கொண்டுவந்து கொடுத்தவனும், இப்போது பத்திரிகை கொண்டுவந்து கொடுக்கச் செய்தவனும் வெவ்வேறு ஆள் என்று தெரிந்துகொண்டார்.

"உன்னிடம் அவர் என்ன சொல்லிப் பேப்பரைக் கொடுத்தார்?" என்று சிறுவனிடம் வெகு பக்குவமாகக் கேட்டார் பீதாம்பரம்.

"முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டே அவர் என்னிடம் பேசினுர். நான் அவர் முகத்தைப் பார்க்க எப்படியெல்லாமோ முயற்சி செய்தேன். ஒன்றும் நடக்க வில்லை. உங்கள் அடையாளத்தைச் சொல்லி, இந்தப் பேப்பரை உங்களிடம் கொடுக்கச் சொன்னுர்" என்று கூறி ஞன் சிறுவன்.

பீதாம்பரம் அந்தச் சிறுவனின் முதுகைத்தட்டிக் கொடுத்துக் கொண்டே, "நீ ரொம்பக் கெட்டிக்காரன். இந்தா, இந்த ஓரணுவை வைத்துக்கொள். பேப்பருக்கு நீ காசு வாங்காமல் போவதைப் பார்த்துச் சிரிக்கப்போகிருர்கள்" என்று சொல்லிவிட்டு, ஓரணுவை அந்தச் சிறுவனிடம் கொடுத்தார். காசை வாங்கிக்கொண்டு சிறுவன் அப்பால் நகர்ந்ததும், மெதுவாகப் பத்திரிகையை விரித்தார். அதில் அவர் எதிர்பார்த்தபடி, நான்காவது பக்கத்தில் மேலே உள்ள வெள்ளைப் பகுதியில் பென்சிலால் எழுதப்பட்டிருந்தது.

"இங்கும் நாம் சந்திக்க முடியாமலிருக்கிறது. என்னை விட்டு அவர்கள் விலகவே மாட்டேனென்கிறார்கள். தயவு செய்து சிரமத்தைப் பாராமல், முனுசாமி தெருவில் இருக்கும் கருணா ஹோட்டலுக்கு வாருங்கள். நான் இப்படி அலைக்கழிப்பதால் நீங்கள் சலிப்படைந்து போய்விடக் கூடாது. ஏனென்றால், ஒரு பெண்ணின் உயிர் உங்கள் கையில்தான் இருக்கிறது."

என்று எழுதப்பட்டிருந்தது. படித்து முடித்த பீதாம்பரம், முகத்தில் எந்தவிதமான பரபரப்பையும் காட்டிக் கொள்ளாமல், பத்திரிகையை சுகுமாரனிடம் கொடுத்து, நான்காவது பக்கத்தைப் பார்க்கும்படி ஜாடை செய்தார். சுகுமாரன், பென்ஸிலால் எழுதியிருக்கும் வாசகத்தைக் கவனிக்கப் போகையில், முதலில் இவர்களைக் கடந்து சென்ற மனிதன் அவர்களருகில் வந்து கொண்டிருந்தான். உடனே பீதாம்பரம், பத்திரிகையை சுகுமாரனிடமிருந்து வாங்கிக் கொண்டு தாம் படிப்பதுபோல் பாவனை செய்தார். அந்த மனிதன் ஹோட்டலை விட்டு வெளியேறிவிட்டான் என்று தெரிந்தவுடன்தான் சுகுமாரனிடம் பத்திரிகையைக் கொடுத்தார்.

சுகுமாரனுக்கு ஒன்றும் புரியவில்லை. பேசாமல் எழுந்து சென்றான். இருவரும் காரில் ஏறிக் கொண்டு, கருணா ஹோட்டலை நோக்கிச் சென்றனர்.

துப்பறியும் நிபுணர்கள் இருவரும் ஹோட்டல் முன்பு காரை நிறுத்திவிட்டு அதிலிருந்து இறங்கிப் படிகளில் ஏறிக் கொண்டிருக்கும்போது, ஒரு மனிதன் திடுபுடுவென்று படிகளிலிறங்கியவன், பீதாம்பரத்தை உராய்ந்தபடி சென்றான். அதோடு வெகு ரகசியமாக, "**இங்கே வேண்டாம். எழும்பூரிலுள்ள மின்சார ரயில் வண்டி பிளாட்பாரத்துக்கு வாருங்கள். அங்கு பேசிக் கொள்ளலாம். இன்னும் பதினைந்து நிமிஷம் பொறுத்து வாருங்கள்**" என்று சொல்லிக்கொண்டே வேகமாக இறங்கி நடந்து சென்றுவிட்டான். இவற்றை ஒன்று விடாமல் கேட்ட பீதாம்பரம், ஏதும் நடக்காதது போல, தலையை இலேசாக உயர்த்தி, தம்மிடம் பேசிவிட்டுச் செல்பவனை அரைக்கண் பார்வையில் நோக்கினார். அவன் வேகமாக நடந்து கொண்டிருந்தான். இல்லை; ஓட்டமும் நடையுமாக சென்று

கொண்டிருந்தான் என்று தான் சொல்லவேண்டும். அவனு டைய பின்புறத் தோற்றத்தைக் கொண்டே, அவனை யாரென்று கண்டு கொள்ளமுடிந்தது, 'கனகா கபே'க்கு முன் னுலிருந்த பஸ் ஸ்டாப்பிலிருந்து சிறுவனிடம் பத்திரிகை கொடுத்து அனுப்பிய அதே நபர்தான்.

இதற்குமேல் பீதாம்பரம் ஒன்றுமே யோசிக்கவில்லை. விறு விறுவென்று படிகளில் இறங்கிச் சென்று காரில் ஏறிக் கொண்டே, "சுகுமாரா! நேரே ஸ்டேஷனுக்கு ஓட்டு. ஸ்டேஷனுக்குச்சென்று இன்ஸ்பெக்டர்பால்ராஜைப் பார்த்து விட்டு இன்னும் கால் மணி நேரத்துக்குள் நாம் எழும்பூர் மின்சார ரயில் பிளாட்பாரத்தில் இருக்கவேண்டும்" என்று கூறினார்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ், துப்பறியும் நிபுணர்கள் இரு வரையும் வெகு உற்சாகத்தோடு வரவேற்றார். அந்த நேரத் தில் சாவகாசமாக உட்கார்ந்து எதையும் பேச பீதாம்பரம் தயாராகயில்லை. ஆகவே, நின்ற நிலையிலேயே, இரண்டொரு வார்த்தைகள் கூறினார்.

"எந்த நேரத்திலும் நான் உங்களுக்கு 'போன்' செய்ய நேரிடும். தயாராக இருங்கள். உங்கள் துப்பாக்கியும் தயாரி லிருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு வேறு விளக்கம் எதுவும் கூறாமலே கண நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனை விட்டு இருவரும் வெளியேறினர்.

அடித்து வைத்த சிலையைப் போல உட்கார்ந்து விட்டார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ். "ஏன், எதற்கு?" என்று எதிர்க் கேள்வி கேட்பதற்குள் பீதாம்பரம் சென்று விட்டது அவரை உணர்வற்றுப் போகும்படி செய்துவிட்டது. எந்த விஷயமாயிருந்தாலும் தம்மிடம் சொல்லி, அதைப் பற்றி விவாதிக்கும் பீதாம்பரமா இன்று இப்படி வெடுக்கென்று ஒரே மூச்சில் பேசிவிட்டுப் போய் விட்டார்?

"பீதாம்பரம் எங்கே போகிறார்? என்ன காரணத்துக் காகப் போகிறார்?" என்று தெரிந்து கொள்ள பால்ராஜுக்கு ஆவலாயிருந்தது. விறுவிறு வென்று எழுந்து சென்று, சுவர்ப் பீரோவில் இருந்த தம்முடைய கைத்துப்பாக்கியை எடுத்துப் பார்த்தார். அதில் ஒன்றிரண்டு ரவைகள் உபயோகிக்கப்

பட்டிருந்ததால், அந்த இடங்கள் காலியாயிருந்தன. ஆகவே, புது ரவைகளை வைத்துக் கெட்டிப்படுத்தி, துப்பாக்கியைக் கால் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு டெலிபோன் அருகில் உட்கார்ந்து கொண்டார்.

துப்பறியும் பீதாம்பரம் அவ்வளவு பரபரப்புடன் சொல்லியபடி, பால்ராஜுடைய துப்பாக்கிக்கோ, அல்லது அங்கிருந்த டெலிபோனுக்கோ, அன்று ஒரு வேலையுமிருக்காது என்று பால்ராஜுக்கு முன்கூட்டியே தெரியுமானால், கரிசனையாக இவ்வளவையும் செய்யமாட்டார். ஆனால், பின்னால் நடக்கும் விஷயங்களை ஆரூடம் பார்த்து முன்பே சொல்லிவிட, மனிதப் பிறவிகளால் முடியுமா? இறைவன் அப்படிப்பட்ட ஒரு சக்தியைக் கொடுத்திருந்தானானால், உலகம் இப்படியா இயங்கும்? மனிதனுக்கு வயிறு என்று ஒன்றில்லாவிட்டால் உலகம் எப்படியிருக்குமோ அதே விதத்தில் தான், பின்னால் நிகழப்போவதை முன்கூட்டியே தெரிந்து கொள்ளும் சக்தியிருந்தால், உலகம் தலைகீழாக மாறிப் போய்விடும்.

2

கொலையா? தற்கொலையா?

துப்பறியும் நிபுணர்களிருவரும் எழும்பூர் ரயில் நிலையத்துக்கு முன்னால் தங்கள் காரை நிறுத்திவிட்டு அவசர அவசரமாக மேம்பாலத்துப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னால் பலர் இரைக்கப் பதைக்கப் படிகளில் குதித்து ஏறி ஓடினர். இதிலிருந்து மின்சார ரயில் ஒன்று வந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த பீதாம்பரம் சட்டென்று தம்முடைய கைக் கடிகாரத்தைப் பார்த்தார். சகாதேவன் சொல்லியபடி, இன்னும் ஒரு நிமிஷத்தில் அவர்களிருவரும் மின்சார ரயில் பிளாட்பாரத்தில் இருக்க வேண்டும். எனவே, சுகுமாரனைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு ஓடினார்.

பீதாம்பரமும் சுகுமாரனும் பிளாட்பாரத்தை அடைவதற்கும் தாம்பரத்திலிருந்து வந்து கொண்டிருந்த மின்சார

ரயில் ஒன்று ஸ்டேஷனுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. முன்பக்கத்தில் கும்பலாக நின்று கொண்டிருந்தவர்கள், வண்டியில் ஏறுவதற்காகத் திடுதிடு வென்று ஓடினர். அந்தக் கூட்டத்தை ஒரு முறை கூர்ந்து கவனித்தார் பீதாம்பரம். அவ்வளவு பேரிலும் ஒரு மனிதன் எதிர்த்திசையைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். அவன்....? சட்டென்று அவன் யார் என்று தெரிந்து கொண்டார் பீதாம்பரம். அவன்தான் செய்திப் பத்திரிகையில், தங்களை அங்கு வரும்படி எழுதிக்கொடுத்தவன். நிச்சயமாக அவன் சகாதேவனே தான். பீதாம்பரத்துக்கு இதயத்தில் பாலை வார்த்தது போலிருந்தது. ஆனால்...? ஆனால்....?

ரயில் நிலையத்துக்குள் நுழைந்த வண்டி இன்னும் நிலைக்கு வரவில்லை. அச்சமயம் திடீரென்று ஒரு மனிதன் வண்டிக்கு முன்னால் விழுந்து விட்டான். பீதாம்பரத்துக்கு இதயம் திருகியெறியப் பட்டது போலிருந்தது. திணறிப் போன அவர், விழுந்த மனிதனை ஒரு முறை நினைத்துப் பார்த்தார். நிச்சயமாக அவன் சகாதேவனே தான்! விநாடி நேரத்துக்குள் நடந்து விட்ட இந்த அசம்பாவிதத்தை அவர் நம்பத் தயாராகயில்லை. முன்னால் ஓடிச் சென்று கூட்டத்தை இடித்து விலக்கிக் கொண்டு பார்த்தார். சின்னாபின்னமாகச் சிதைந்து கிடந்த அந்த உருவம் சந்தேகமில்லாமல் சகாதேவனுடையது தான். ஆனால் அவன் எப்படி விழுந்தான்? திகைப்பு நீங்கித் தன் நிலைக்கு வந்த பீதாம்பரம் அருகில் நின்று கொண்டிருந்த சுகுமாரனைப் பார்த்தார். அவனும் ரயிலுக்கு முன்னால் விழுந்த நபர் யாரென்று தெரிந்து கொண்டான்; பீதாம்பரம் காட்டிய ஜாடையைப் புரிந்து கொண்ட சுகுமாரன், அவரைத் தொடர்ந்து கூட்டத்தை விட்டு வெளியேறினான். இதற்குள் இரண்டொரு போலீஸ்காரர்கள் ஓடிவந்தனர். அவர்களை அந்நேரத்தில் சந்தித்து விஷயத்தை விளக்குவதற்குப் போதுமான அவகாசமில்லை. வேகமாகப் படிகளில் ஏறினர். பின்னால் இருவர் பேசிக் கொண்டது அவர்களுக்குத் தெளிவாகக் கேட்டது. "பாவம்! என்ன கஷ்டமோ? அவன் உயிரை அவனே மாய்த்துக் கொண்டான்' — இதைக் கேட்டதும், பீதாம்பரம் மேல்படியிலிருந்து பின்னால் வருபவர்களை ஒரு முறை ஏளனமாகப் பார்த்துவிட்டு வேகமாகச் சென்று விட்டார்.

காரில் ஏறிக்கொண்ட பிறகு தான் பீதாம்பரம் பேச ஆரம்பித்தார். "சுகுமார்! இப்போது நாம் ஹோட்டல் நளினுவுக்குச் செல்லவேண்டும். காரை வேகமாக ஓட்டு..." என்று பரபரப்போடு கூறினர்.

சுகுமாரன் துடிப்பு மிக்க இளைஞனுகையால், காரை அதி வேகமாகச் செலுத்தினன். துப்பறியும் தொழிலில் அவனுக்கிருந்த ஆர்வம் தான் அவனை இராப்பகலென்று தூங்க விடாமல் செய்து கொண்டிருக்கிறது. இல்லையென்ருல், வக்கீலுக்குப் படித்துக் கொண்டிருந்தவன், துப்பறியும் பீதாம்பரத்துடன் சேர்ந்துகொண்டு இப்படி உயிரைத் திரணமாக மதித்துக் கார் ஓட்டுவாஞ?

திடீரென்று பீதாம்பரம் "சகாதேவன் தாஞக ரயிலுக்கு முன்ஞல் விழுந்தான் என்று நம்புகிருயா, சுகுமாரா?" என்று கேட்டார். இதற்கு அவ்வளவு சீக்கிரத்தில் சுகுமாரஞல் பதில் சொல்ல முடியவில்லை. மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

"ரயில் வரும்போது, கும்பலாக எல்லோரும் ரயிலை நோக்கித் தான் ஓடிஞர்கள். ஆஞல் சகாதேவன் மட்டும் நம்மையே எதிர்பார்த்துக் காத்திருப்பவன் போல எதிர்த்திசையைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான். ஆகவே, அவன் விழுவதற்கு நியாயமில்லை."

"அப்படியாஞல்? ..." சுகுமாரன் இழுத்தாற்போல் கேட்டான்.

"அப்படியாஞல் என்ன? அவனை யாரோ வேண்டுமென்றே ரயிலுக்கு முன்ஞல் பிடித்துத் தள்ளியிருக்கிருர்கள்."

"இதை நீங்களும் நானும்தான் நம்பமுடியும். ஆஞல் அங்கேயிருந்த கூட்டம் ஒப்புக்கொள்ள வேண்டுமே. மேலும் சூழ்நிலையைப் பார்த்தால், உண்மையில் சகாதேவன் தற்கொலை செய்துகொண்டான் என்று தான் எண்ணத் தோன்றும்."

"அதனால் தான் நானும் பேசாமல் வந்துவிட்டேன். உண்மையில், நாம் யாரையும் அங்கே குறிப்பாகச் சந்தேகம் கொள்ளமுடியாது. தீர்ப்பு என்ன ஆகும் தெரியுமா? 'சகாதேவன் தற்கொலை செய்துகொண்டான்' என்பதுதான். நம் எதிரே ஓடிய போலீஸ் சிப்பாய்கள்கூட அப்படியேதான் நம்புகிறார்கள்."

"இப்பொழுது நளினா ஹோட்டலுக்கு ஏன் போக வேண்டும்?".

"சகாதேவனைப் பற்றி விசாரிக்க. அவனைப் பற்றிய தகவல் கிடைத்துவிட்டால், அவன் சொல்லிய பெண் யார் என்று கண்டுபிடித்து விடலாம்."

"வேடிக்கைதான். அவனைப் பற்றித் தெரியவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்புறம் அந்தப் பெண்ணை எப்படித் தேடிக் கண்டுபிடிப்பது? சென்னையில் பெண்கள் தொகை ஏறக்குறைய ஏழு லட்சமாவது இருக்கும். இவர்களில் எவளுக்கு அபாயம் என்று தெரிந்து கொள்வது? அவளை எப்படிக் காப்பாற்றுவது?"

"பேசாமல் வா, சுகுமாரா! நீ சொல்லும் விஷயம் பிறகு யோசிக்கவேண்டியது."

இதற்குள் நளினா ஹோட்டல் முன்னால் துப்பறியும் நிபுணர்களின் கார் வந்து நின்றது. காரிலிருந்து இறங்கி இருவரும் முதலாளி அருகில் சென்றனர். நின்ற நிலையிலேயே, உள்ளங்கையில் ஒரு காகிதத்தை வைத்து எதையோ எழுதினார் பீதாம்பரம். பின்னர், ஜாடையாக நாலாபுறமும் பார்த்தார். உடனே, அந்தக் காகிதத்தைக் கடை முதலாளியிடம் கொடுத்தார்.

"பதட்டப்படவேண்டாம். என்னுடன், நீங்கள் உங்கள் தனியறைக்கு வரவேண்டும்—துப்பறியும் பீதாம்பரம்" என்று அந்தக் காகிதத்தில் எழுதியிருந்தது. துப்பறியும் பீதாம்பரம் என்னும் இடம் வந்ததும், வியப்பு மேலீட்டால், கண்களை விரித்துப் பார்த்தார் முதலாளி. பீதாம்பரத்துக்கு அந்நேரத்தில் அது பிடிக்கவில்லை. பொறுமையற்று உதட்டைக் கடித்தார். மறு நிமிஷம், முதலாளி தம் இடத்தை

விட்டு எழுந்து, துப்பறியும் நிபுணர்கள் இருவருடனும் தம் முடைய தனி அறைக்குக் கிளம்பினர்.

அறைக்குள் வந்து மூவரும் உட்கார்ந்து கொண்டதும், பீதாம்பரம் பேச ஆரம்பித்தார். "நான் அந்தத் துண்டுக் காகிதத்தில் குறிப்பிட்டபடியே தான் இப்போதும் சொல்லப் போகிறேன். அதாவது, நீங்கள் எதைக்கேட்டும் பதட்டப்படக் கூடாது" என்ற பீடிகையுடன் பேச்சைத் துவக்கினர். பதட்டம் என்ற வார்த்தையைப் பீதாம்பரமே இரண்டுமுறை அழுத்திச் சொல்லிவிட்டதால், முதலாளிக்கு உடலெல்லாம் பயத்தால் ஆட ஆரம்பித்து விட்டது. இன்னொரு முறையும், அந்த வார்த்தையைத் துப்பறியும் நிபுணரின் மூலமாகவே கேட்டாரானல், நிச்சயம் மூர்ச்சையடைந்திருப்பார். அந்த அளவுக்குப் பீதாம்பரம் வைத்துக் கொள்ளவில்லை.

"உங்கள் கடைச் சிப்பந்தி சகாதேவன்......" என்று பீதாம்பரம் பேச்சை ஆரம்பிப்பதற்குள் திடீரென்று குறுக்கிட்டார் முதலாளி.

"இப்போது அவனுக்கு என்ன?" என்று பயத்துடன் கேட்டார்.

"ஒன்றுமில்லை. அவன்......ஆள் எப்படி?"

இதைக் கேட்டதும் தான் முதலாளிக்கு மனம் இலேசாகச் சமாதானம் அடைந்தது. "அவனுக்கென்ன? நல்ல பிள்ளை' என்று ரத்தினச் சுருக்கமாக, சகாதேவனைப் பற்றிக் கூறினர் முதலாளி.

"அது சரி......அவன் இன்று கடைக்கு வந்திருக்கிருனல்லவா?"

"இல்லை...... பதினொன்றரை மணிக்கெல்லாம், லீவு வேண்டுமென்று கேட்டுக்கொண்டு போய்விட்டான்."

"எதற்காக லீவு வேண்டுமென்று கேட்டான்?"

"முக்கியமான வேலையென்று சொன்னன்."

" இப்படி அடிக்கடி லீவ் எடுத்துக் கொள்வானோ?"

" கிடையாது ".

" அவன் ஹோட்டலிலேயே தங்கிக் கொள்கிறான்; இல்லையா ?"

" நீங்கள் இவ்வளவு தூரம் சகாதேவனைப்பற்றி விசாரிப்பது எதற்கு என்று எனக்குப் புரியவில்லை. எனக்கும் கொஞ்சம் சொன்னீர்களானால் ரொம்ப நலமாக இருக்கும்."

" உங்களுக்குச் சொல்லாமல் போகமாட்டோம். அது சரி......ஹோட்டலிலேயே தங்கிக் கொள்ளுகிறானா ?"

" இல்லை. வெளியே வேறு எங்கேயோ அறையெடுத்து வசிக்கிறான்."

" வெளியே யென்றால் ?"

" எந்த இடத்தில் என்று எனக்குத் தெரியாது. எனக்கு மட்டும் என்ன ? இந்த ஹோட்டலில் வேலை செய்யும் என் சிப்பந்திகள் யாருக்குமே தெரியாது."

" ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறது. எதனால் அவன் அந்த மாதிரி நடந்து கொள்ளவேண்டும் ?"

" அதுதான் தெரியவில்லை. அவன் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க என் சிப்பந்திகள் எவ்வளவோ முயற்சி செய்தார்கள். முடியவில்லை."

" அப்படியானால் அவன் இரவில் வீட்டுக்கு எந்த வழியாகப் போவான் ?"

" வீட்டுக்கு அவன் எப்போதுமே நடந்து சென்றதில்லை. நம்முடைய ஹோட்டலுக்கு முன்னால் ஒரு டாக்ஸிக்காரன் இருக்கிறான். அவன் பகலெல்லாம் கார் ஓட்டிவிட்டு, இரவில் வீட்டுக்குச் செல்லும்போது, அவனுடன், சகாதேவன் காரில் ஏறிக்கொண்டு சென்று விடுவான்."

" அப்படியானால், அந்த டாக்ஸிக்காரன் மூலம் நீங்கள் சகாதேவனுடைய வீட்டைக் கண்டுபிடித்திருக்கலாமே!"

"அதுவும் முடியவில்லை. தெரு முனையிலேயே டாக்ஸியி லிருந்து இறங்கிக் கொள்வானும் சகாதேவன். டாக்ஸிக்காரன் வேறு ஒரு தெரு வழியாகச் செல்லவேண்டியிருந்ததாலேயே சகாதேவன் இப்படி நடந்து கொள்வான். ஒன்றிரண்டு முறை டாக்ஸி டிரைவர், சகாதேவனின் வீட்டிலேயே கொண்டு விட்டுவிடுவதாகக் கூறியும் அவன் ஒத்துக் கொள்ளவில்லை. இதெல்லாமாகச் சேர்ந்து, சகாதேவனை ஒரு மர்ம மனித னுகவே எண்ணச் செய்கிறது."

"அவன் மர்ம மனிதன் என்பதில் சந்தேகமில்லை. அந்த மர்ம மனிதனைக் கொஞ்ச நேரத்துக்கு முந்தி யாரோ கொலை செய்து விட்டார்கள்"—வெகு நிதானமாக, சிறிதும் கலவரமில்லாமல் விஷயத்தைக் கூறினுர் பீதாம்பரம். இதைக் கேட்டதும், 'படக்'கென்று தம் ஆசனத்தை விட்டு எழுந்து நின்ருர் ஹோட்டல் முதலாளி. அவருடைய முகம் பயம் நிரம்பி விகாரமாகக் காட்சியளித்தது. துப்பறியும் பீதாம் பரத்தை நம்பாதவர் போலப் பார்த்தார். ஆனுல் அவரால் ஒன்றுமே பேசமுடியவில்லை, தொண்டை முடிச்சை யாரோ பலவந்தமாகப் பிடித்து அழுத்துவது போலிருந்தது. அவரு டைய நிலைமையை உணர்ந்து கொண்ட துப்பறியும் பீதாம் பரம், வெகு உரிமையோடு முதலாளியின் தோள்களைப் பிடித்து உட்காரவைத்தார்.

பீதாம்பரம் மீண்டும் பேச ஆரம்பித்தபோதுதான் ஹோட்டல் முதலாளிக்கு இந்த உலகத்து உணர்வே வந்தது. "நீங்கள் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து விட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையென்றும் தெரியும். ஆனுல், நான் சொல் வது எல்லாம் உண்மை. சகாதேவன் சாகும்போது என் கண்ணுலேயே பார்த்தேன் ......" இதற்குள் அந்த அறையி லிருந்த டெலிபோன் மணி அடித்தது. எழுந்து சென்று, 'ரிஸீவரை'க் கையிலெடுத்துக்கொண்டு கேட்டார் முதலாளி. அவர் பதில் சொல்லிய தோரணையிலிருந்தும், மறுமுனையி லிருந்து பேசப்படுபவற்றை அவர் கேட்கும் மாதிரியிலிருந்தும் விவரத்தை ஊகித்து உணர்ந்து கொண்டார் பீதாம்பரம். டெலிபோன் தொடர்பை முடித்துக் கொண்டு, மீண்டும் துப்பறியும் நிபுணர்களிடம் வந்தார் முதலாளி.

"சகாதேவன் ரயிலுக்கு முன்னால் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாகச் சொன்னார்களோ?" என்று அமைதியாகக் கேட்டார் பீதாம்பரம்.

இதைக் கேட்டதும், ஹோட்டல் முதலாளிக்கு ஒரே வியப்பாகிவிட்டது. "உங்களுக்கு அது எப்படித் தெரிந்தது?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

"அதெல்லாம் உங்களுக்கு எதற்கு? இப்போது நீங்கள் என் பேச்சை நம்பவேண்டுமென்று நான் கட்டாயப்படுத்தவில்லை. எனக்கு இப்போது வேண்டியதெல்லாம், சகாதேவனைப் பற்றிய விவரம். அவன் எப்படி உங்கள் கடைக்கு வந்து சேர்ந்தான், இதற்குமுன்னால் எங்கே வேலை செய்தான் என்ற விவரங்களை எனக்கு நீங்கள் சொல்லவேண்டும்" என்றார் பீதாம்பரம்.

"சகாதேவனைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அதாவது இதற்கு முன் எங்கு வேலை பார்த்தான், அவன் சொந்த ஊர் எது என்றெல்லாம் நான் அவனிடம் விசாரிக்கவில்லை. என்னிடம் வந்து வேலை கேட்டான். அவனைப் பார்த்ததும் எனக்கு ஒரு நல்ல எண்ணம் ஏற்பட்டு விட்டது. உடனே அவனுக்கு வேலை கொடுத்து விட்டேன்" என்றார் முதலாளி.

அவரிடமிருந்து மேற்கொண்டும் ஒன்றும் கிரகித்துக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பீதாம்பரம் எழுந்து நின்றார். அப்போது அந்த அறையைத் தாண்டிக் கொண்டு சென்றான் ஒரு மனிதன். அவனைப் பார்த்ததும், சட்டென்று அடையாளம் கண்டு கொண்டார். காலையில் ஸ்பெஷல் பிஸ்கட் கொண்டு வந்து கொடுத்தவன் அவன்தான். அவனிடமிருந்து ஏதாவது விஷயம் சேகரிக்கலாம் என்று உணர்ந்த பீதாம்பரம், அவனை, அறைக்குள் அழைத்து வரவேண்டுமென்று ஹோட்டல் முதலாளியிடம் கேட்டுக் கொண்டார்.

சிறிது நேரத்தில் 'ஸ்பெஷல் பிஸ்கட்' ஆசாமி அறைக்குள் நுழைந்தான். அவனிடம் சுற்றிவளைக்காமல் பேச்சை

ஆரம்பித்தார் பீதாம்பரம். "காலையில் எங்களுக்கு ஸ்பெஷல் பிஸ்கட் கொண்டுவந்து கொடுத்தாயே, ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

அந்த மனிதன் பதில் சொல்லச் சிறிது தயங்கினன். சற்று நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டான். "நீங்கள் யார் என்று எனக்குத் தெரிந்தால் நான் அதைப் பற்றிச் சொல்வதில் ஒன்றும் ஆட்சேபம் இல்லை" என்ருன்.

"உனக்கு எங்களால் ஒன்றும் ஆபத்து வராது. தயங்காமல் சொல்."

"எனக்கு ஆபத்து வரும் என்பதற்காக நான் கவலைப் படவில்லை. சகாதேவனுக்குத் தான் கஷ்டம் வரும் என்று பயப்படுகிறேன்."

"அவனுக்கு இந்த மாதிரிச் சில்லறைக் கஷ்டங்களைக் கொடுத்து அவனைச் சித்ரவதைப் படுத்தாமல் ஒரே யடியாகக் கொன்று தீர்த்து விட்டார்கள். ஆகையால், நீ இப்போது விவரமாக எல்லாவற்றையும் சொல்லலாம்" என்று, கண் இமைக்காமல் 'பிஸ்கட்' ஆசாமியைப் பார்த்தபடியே கூறிஞர் பீதாம்பரம். இதைக் கேட்டதும், அவன் வாய் உளறி விட்டான். உண்மையில் அவன், பீதாம்பரம் சொல்லியவற்றை எதிர்பார்க்கவேயில்லை போலிருக்கிறது; "என்ன சொன்னீர்கள்? சகாதேவனைக் கொன்று விட்டார்களா?" என்று பதட்டத்துடன் கேட்டான். பீதாம்பரம் ஒன்றும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

"நீங்கள் சொல்வதை என்னல் நம்பமுடியவில்லை. யாரோ ஒரு பெண்ணுடைய உயிருக்குத்தான் அபாயம் வருவதாகச் சொன்னுன். தனக்கு அதனுல் ஒன்றும் கஷ்டம் வராது என்றும் சொன்னுனே" என்ருன் சிப்பந்தி.

"சங்கு! உன் அபிப்பிராயத்தை அவர் கேட்கவில்லை. சகாதேவன் உன்னிடம் என்னென்ன சொன்னுன் என்பதை மட்டும் சொல்" என்று அதட்டும் பாவனையில் கூறினுர் ஹோட்டல் முதலாளி.

“இல்லை. சங்கு தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சொல்லட்டும், சரி சங்கு! யாரோ பெண் ஒருத்திக்கு ஆபத்து என்று சகாதேவன் உன்னிடம் சொன்னானே, அவள் பெயர் என்ன, அவள் யார் என்பதைச் சொன்னானா?” என்று ஆவலோடு கேட்டார் பீதாம்பரம்.

“இல்லை. அவளைப்பற்றி நான் அவனிடம் அவ்வளவாக வற்புறுத்திக் கேட்கவேயில்லை. ஏனென்றால், அவளைப்பற்றி அவன் சொல்லும்போதெல்லாம் அவன் முகம் ரொம்ப வாட்டமாயிருக்கும். அவளை எப்படியாவது காப்பாற்றி யாக வேண்டுமென்ற அக்கரை அவனுக்கு அதிகமாக இருந்தது.”

“ஒரு வேளை அவள் சகாதேவனுடைய மனைவியாயிருப் பாளோ?” என்று கேட்டார் பீதாம்பரம்.

“அவனுக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லையே?”

“அவனுக்கு இப்போது முப்பது வயதிருக்குமே! இன்னுமா கல்யாணம் செய்து கொள்ளாமலிருக்கிறான்? அவன் யாராவது ஒரு பெண்ணைக் காதலித்து அவளுக்கு எதிரிடையாக எவனாவது கிளம்பி யிருப்பானோ?” என்று யோசனையுடன் கேட்டார்.

“அப்படியும் சொல்வதற்கில்லை. பெண்களைக் கண் டாலே ரொம்ப சங்கோஜப்படுவான். யாரையும் காதலித்த தாக அவன் என்னிடம் சொல்லவேயில்லை.”

“உன்னிடம் அவன் எல்லா அந்தரங்கத்தையும் சொல்லிவிடுவானோ?”

“அநேகமாகச் சொல்லுவான்.”

இதைக் கேட்டதும் பீதாம்பரமும் சுகுமாரனும் மகிழ்ச்சி யடைந்தனர். சகாதேவனைப் பற்றிய பூர்வீகங்களைத் தெரிந்து கொண்டால் மற்ற எல்லாமே சுலபமாகிவிடும் என்று முடிவு செய்திருந்தார்களல்லவா? ஆகையால், பீதாம் பரம் மீண்டும் சகாதேவனைப் பற்றிய கேள்விகளையே கேட்க ஆரம்பித்தார்.

"கல்யாணம் செய்து கொள்ளாமல் ஒற்றைக்கட்டை யாக அப்படி எங்கே வசிக்கிறான்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. தன்னைப் பற்றியோ, தன் முன்கால வாழ்க்கையைப் பற்றியோ அவன் யாரிடமும் சொல்வதில்லை."

"உன்னிடம் அவன் அந்தரங்கம் எல்லாவற்றையும் சொல்வான் என்று சொன்னாயே?"

"அந்தரங்கம் என்றால், இங்கு ஹோட்டலுக்குள் நடக்கும் விஷயங்களை என்னுடன் அந்தரங்கமாகப் பேசு வான்."

— இதைக் கேட்டதும் ஒரே ஏமாற்றமாகிவிட்டது துப்பறியும் நிபுணர்கள் இருவருக்கும். அதைத் தொடர்ந்து, சென்னையில் உள்ள ஏழு லட்சம் பெண்களில் யாருக்கு ஆபத்து என்று தெரிந்து கொள்ளும் பிரச்னை திடீரென்று எழுந்து விட்டது. அவளை எங்கே தேடுவது? வருடம் பூராவும் தேடினால் கூட அகப்படமாட்டாள். மேலும் தகவல் தந்த சகாதேவனையே சில மணி நேரங்களுக்குள் சாகடித்து விட்டார்கள், அந்தப் பெண்ணை அதிக காலம் விட்டு வைக்கமாட்டார்கள்,.. பீதாம்பரத்துக்கு ஒரே குழப்ப மாயிருந்தது. சங்கு மூலம் வேறு ஒன்றும் கிரகிக்க முடியா தென்பதும் தெளிவாகி விட்டது.

"ஸ்பெஷல் பிஸ்கட்டைக் கொடுத்தனுப்பும்போது உன்னிடம் சகாதேவன் என்ன சொன்னான்?" என்று கேட்டார் பீதாம்பரம்.

"அதை உங்களிடம் கொடுத்தால் நிச்சயம் அந்தப் பெண் பிழைத்துக் கொள்வாள் என்று மட்டும் கூறினான். ஆனால், அதை நான் வேண்டுமென்றே உங்களிடம் கொடுப்ப தாக யாருக்கும் தெரியக்கூடாது என்றும் சொன்னான்" என்றான் சங்கு.

இனியும் அங்கிருப்பதில் பயனில்லை என்று உணர்ந்து கொண்ட இருவரும் ஹோட்டல் முதலாளியிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினர். ஹோட்டலைக் கடப்பதற்குள் முதலாளி அவர்களைக் கைதட்டி அழைத்தார்.

பீதாம்பரம் அவர் அருகில் நெருங்கியதும், அவர் வெளியே நின்று கொண்டிருந்த டாக்ஸி கார் ஒன்றைச் சுட்டிக்காட்டி, "அதோ நிற்கிற டாக்ஸியில் உட்கார்ந்திருக்கிருனே, அவனுடன் தான் சகாதேவன் தினமும் இரவில் வீட்டுக்குப் போவான்" என்ருர். பீதாம்பரத்துக்கு இந்தச் செய்தி பிரமாதமான உற்சாகத்தைக் கொடுத்து விட்டது. தங்கள் கார் ஹோட்டல் முன்னுல் நிற்கட்டும் என்றும், அதைக் கவனித்துக் கொள்ளுமாறும் ஹோட்டல் முதலாளியிடம் கூறிவிட்டு டாக்ஸியை நோக்கி ஓடினுர்.

சுகுமாரனும் பீதாம்பரமும் டாக்ஸியில் ஏறிக்கொண்டதும் டிரைவர் காரைக் கிளப்பினுன். "எங்கே போகவேண்டும்?" என்று தலையைத் திருப்பாமல் கேட்டான்.

"சகாதேவன் வீட்டுக்கு?" என்று நிதானமாகக் கூறினுர் பீதாம்பரம்.

சட்டென்று பின்னுல் திரும்பிப் பார்த்த டாக்ஸி டிரைவர், "எந்த சகாதேவன் வீட்டுக்கு?" என்று புரியாதவனைப் போலக் கேட்டான்.

"நளினு ஹோட்டலில் வேலைபார்க்கிருனே சகாதேவன்; அவன் வீட்டுக்குத் தான். உன்னுடன் தான் அவன் தினமும் வீட்டுக்குச் செல்வானும். அதனுல்தான்..." என்று இழுத்தார் பீதாம்பரம்.

"ஐயோ! அவன் வீடே எனக்குத் தெரியாதே. இப்போது போனீர்கள் என்ருல் அவன் வீட்டில் இருக்கமாட்டானே. ஹோட்டலிலிருந்துதானே வந்தீர்கள்; அவனை அங்கேயே பார்த்திருக்கலாமே" என்ருன் டிரைவர்.

"இன்றைக்கு லீவ் வாங்கியிருக்கிருனும். அவனை நாங்கள் உடனே பார்க்கவேண்டும்" என்று தம்முடைய பரபரப்பைக் காட்டினுர் பீதாம்பரம்.

"சகாதேவனுடைய வீடு எனக்குத் தெரியாது. தெருமுனையில் இறங்கிக் கொண்டுவிடுவான். நான் நேராகக் காரை ஓட்டிக் கொண்டு போய் விடுவேன்" என்ருன் டிரைவர்.

“ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறதே, இவ்வளவு அன்னியோன்யமாகப் பழகியும் அவன் வீடு உனக்குத் தெரியாமலிருப்பது ஆச்சரியம்தான்.”

“சகாதேவனே ஒரு அதிசயப் பேர்வழி, அவன் வீட்டைத் தெரிந்து கொள்வதற்காக அவனுடன் நான் இரண்டு மூன்று தடவை தகராறு செய்தேன். அவன் அதற்கு இசையவில்லை.”

---இதற்குள் கார் படே சாகிப் தெரு முனையில் வந்து நின்றது.

“இங்கே இறங்கி, அந்த ஓரமாக நடந்து போவான் சகாதேவன்” என்று இடது புறத்தைச் சுட்டிக் காட்டினான் டிரைவர்.

டிரைவருக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டு தம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார் பீதாம்பரம். மூன்று மணியாகியிருந்தது. இதுவரை இயந்திரத்தைப் போல இயங்கிக் கொண்டே வந்த சுகுமாரன் ஒருவார்த்தை கூடப் பேசவில்லை. அவன் எப்போதுமே அப்படித்தான். ஏதாவது விஷயமிருந்தால் தான் பேசுவான். இல்லாவிட்டால், நடப்பவற்றை ஊமை போல கவனித்துக் கொண்டிருப்பான்.

இருவரும் டாக்ஸி டிரைவர் சொன்னபடி, படே சாகிப் தெருவுக்குள் நுழைந்து இடது பக்கமாக நடந்து கொண்டிருந்தனர். சிறிது தூரம் தான் சென்றிருப்பார்கள். இவர்களுக்குப் பின்னால் கார் ஒன்று வேகமாக வந்து ‘சக்’ கென்று நின்றது. சட்டென்று இருவரும் திரும்பிப் பார்த்தனர், பழைய டாக்ஸி டிரைவரே தான். அவனைப் பார்த்ததும் பீதாம்பரத்துக்கு ஏனோ ஒரு மாதிரியாக இருந்தது. அவனிடம் அவர் ஏதும் பேசுவதற்கு முன்பு அவனே ஆரம்பித்தான்.

“ஸார்! ஒன்று கேட்க மறந்து விட்டேன்; நீங்கள் இவ்வளவு தூரம் சகாதேவனைத் தேடுவது எதற்காக என்று தெரியவில்லை. நீங்கள் யார்? அவன் உங்களிடம் ஏதாவது கடன் வாங்கியிருந்தானோ?” என்று கேட்டான்.

“ஏன்? சகாதேவன் எல்லோரிடமும் கடன் வாங்குவானோ?” என்று எதிர்க்கேள்வி கேட்டார் பீதாம்பரம்.

"அப்படியில்லை. சமீப காலமாகத்தான் அவன் கடன் வாங்க ஆரம்பித்திருக்கிறான். அவனுக்கு யாரோ மாதா மாதம் கொஞ்சம் பணம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஹோட்டலில் கிடைக்கும் சம்பளமும், அந்தப் பணமுமாக அவனுக்குச் செலவுக்குச் சரியாக இருந்தது. இப்போது, மாதா மாதம் தவறாமல் வந்து கொண்டிருந்த பணம் வர வில்லை. அதனால், கடன் வாங்க ஆரம்பித்து விட்டான். அதுவும் ஆறுமாதமாகத்தான்" என்றான் டிரைவர்.

"யாரப்பா அது, மா தா மா த ம் தண்டச்சம்பளம் கொடுப்பது?" என்று நையாண்டியோடு கேட்டார் பீதாம் பரம்.

"அவன் என்னிடம் இதையெல்லாம் விளக்கமாகச் சொல்லமாட்டான். இரண்டு மூன்று தடவை வற்புறுத்திக் கேட்டேன். யாரோ நன்றிக் கடன் கழிக்கிறாராம், பணம் கொடுத்து. அவன் அதைச் சொல்லும்போது சற்று பய பக்தியுடன் தான் சொல்லுகிறான். அது சரி, நீங்கள் யார் என்றே சொல்லவில்லையே!"

"நான் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவன். பனி ரெண்டு மணிக்கெல்லாம் சகாதேவனை யாரோ கொலை செய்து விட்டார்கள். அதனால் தான்...." என்று இழுத்து நிறுத்திவிட்டு டிரைவரின் முகத்தை நோக்கினார். சுகுமாரனும் அவனையே ஊடுருவிப் பார்த்தான். டிரைவரின் கண் பட்டை கள் இரண்டும் தாழ்ந்து உயர்ந்தன. முகத்தில் திடீரென்று ஒரு கலவரம் குடிகொண்டது போலத் தெரிந்தது. அடுத்த கணம் திடுக்கிட்டுப் போய் துப்பறியும் நிபுணர்கள் இரு வரையும் நோக்கினான்.

"நீங்கள் சொல்வதை என்னால் நம்பவே முடியவில்லை. அவனுக்கு இந்த உலகத்தில் யாருமே விரோதி இல்லை. அவனைக் கொல்வதற்கு எவனுக்கும் மனம் வராது?" என்று படபடவென்று பேசினான் டிரைவர்.

"நீ சொல்கிறாய் அப்படி. ஆனால், அவனைக் கொலை செய்யும்போது நானே பார்த்தேனே!" என்று கூறிவிட்டு சகாதேவன் ரயிலுக்கு முன் விழுந்ததை விளக்கிக் கூறினார்

பீதாம்பரம், எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த டிரைவர்,

"என்ன ஸார் இது வேடிக்கை! ரயிலுக்கு முன்னால் விழுந்தான் என்றால், அவனாக விழுந்தான் என்று நாம் ஏன் எண்ணக்கூடாது?" என்றான்.

இதைக் கேட்டதும், 'பளிச்' சென்று, பீதாம்பரத்துக்கு என்னவோ தோன்றியது. "சரி, இதைப்பற்றி நாம் பிறகு பேசிக்கொள்வோம். உன் விலாசத்தைக் கொஞ்சம் தருகிறாயா?" என்று கேட்டார்.

டிரைவர் சிறிதும் யோசனை செய்யாமல் தன் வீட்டு விலாசத்தை எழுதிக் கொடுத்தான்.

"உன்னைப் பிறகு சந்திக்கிறேன். ஆனால், நீ இதைப் பற்றி யாரிடமும் பேசாதே; தெரிந்ததா? இப்போது நீ எங்களுடன் வரவேண்டாம்" என்று சொல்லிவிட்டு மேலும் நடக்க ஆரம்பித்தார். டாக்ஸி டிரைவர் உடனே காரைக் கிளப்பிக்கொண்டு வந்தவழியே சென்றுவிட்டான்.

"சுகுமார்! டிரைவரின் பேச்சைக் கவனித்தாயா! சகாதேவன் இறந்ததை நான் கொலை என்று சொல்லுகிறேன், அவன் தற்கொலை என்று அடித்துப் பேசுகிறான்" என்று கூறினார் பீதாம்பரம்.

"நானும் கவனித்தேன். சகாதேவன் கொலை செய்யப் பட்டான் என்பதைக் கேட்டதும், அவனுடைய உற்ற நண்பனாயிருந்தால் 'ஆ, ஊ' என்று கத்தியிருப்பான். ஆனால், இவன் உங்களிடம் கேள்விதான் கேட்டான்" என்று ஆமோதித்தான் சுகுமாரன்.

"அதிருக்கட்டும். சகாதேவன் ரயிலுக்கு முன்னால் விழுந்து தற்கொலைதான் செய்துகொண்டான் என்று இவன் எதற்காக உறுதி கூறவேண்டும்?"

இதற்கு சுகுமாரன் பதில் சொல்லவில்லை. இருவரும் சிந்தனையிலாழ்ந்தவாறு நடந்துகொண்டிருந்தனர். சிறிது தூரம் சென்றதும் சுகுமாரனைக் கையமர்த்தி நிறுத்தினார் பீதாம்பரம்.

"சுகுமார்! இந்த வீட்டைக் கவனி" என்று அவர்களுக்கு முன்னுல் இருந்த ஒரு பழைய வீட்டைக் காட்டினுர். அது பழமையான கட்டிடம். முகப்பில் அங்கங்கே காரை பெயர்ந்திருந்தது. கீழ்த்தட்டில் முழுக்க ஒரே குடும்பம் வசிக்க வேண்டும் என்று அங்குள்ள புழக்கத்தை வைத்து முடிவு செய்து கொண்டார்கள். மாடியில் கம்பிக் கொடி கட்டப்பட்டு அங்கங்கே துணிகள் உலர்த்தப் போட்டிருந்த தால், அறைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது என்பதும் சட்டென்று புரிந்துகொள்ள முடிந்தது. பீதாம்பரம் அதிக நேரம் யோசிக்கவில்லை. சுகுமாரனுக்கு ஜாடை செய்துவிட்டு வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழைந்தார். மாடிக்குச் செல்ல, வெளிப்பக்கமாகப் படிக்கட்டு இருந்தது. துப்பறியும் நிபுணர்கள் இருவரும் படிகளில் ஏறி மாடியை அடைந்தனர். அங்கு அவர்கள் சென்றதும் ஒரு வினுடி திணறிவிட்டார்கள். மனிதர்கள் சஞ்சாரமற்ற வனுந்திரத்தில்கூட ஏதாவது ஓசை கேட்கும்; ஆனுல் அந்தப் பழைய வீட்டின் மாடியில் 'மயான அமைதி' என்பார்களே அது குடிகொண்டிருந்தது. முதலில் இருந்த அறை பழைய பூட்டு ஒன்றுல் பூட்டப்பட்டிருந்தது. அந்த அறையைக் கடைசியாகக் கவனித்துக் கொள்ளலாம் என்ற முடிவுடன், மேலே நடக்க ஆரம்பித்தார்கள். அந்த மாடியில் ஏழு அறைகள் இருந்தன. ஒவ்வொன்றின் கதவிலும் அந்தந்த அறைக்காரர்கள் தங்கள் பெயர்களையும், தாங்கள் பணியாற்றும் காரியாலயத்தின் பெயரையும் 'சாக்'கால் எழுதியிருந்தார்கள். அவற்றில் ஒன்றிலாவது சகாதேவனின் பெயரைக் காணேம். தம்முடைய புள்ளி தவருகிவிட்டதோ என்ற சந்தேகத்தில் கடைசி அறையையும் பார்த்துவிடலாம் என்ற முடிவுடன் சுகுமாரனை அழைத்துக் கொண்டு சென்ருர் பீதாம்பரம்.

மாடிப்படிக்கு அருகிலேயே இருந்த அறையின் கதவில் பூட்டப்பட்டிருந்த பூட்டைத் திறப்பதற்கு பீதாம்பரத்துக்கு அதிகமான சிரமம் ஏற்படவில்லை. அடுத்த வீட்டுக்குள் சர்வசாதாரணமாக நுழைந்ததுமல்லாமல் அங்கு பூட்டையும் உடைக்கும் பீதாம்பரத்தின் நெஞ்சுரத்தை எண்ணிய சுகுமாரனுக்கு ஒரே வியப்பாயிருந்தது. கதவு சில நிமிஷங்களில் திறந்துகொண்டது. இருவரும் உள்ளே சென்று அறையை ஆராய்ந்தனர். அங்கு சந்தேகப்படும்படியாக

எதுவும் இல்லை. சகாதேவன் ஷோக்குப் பேர்வழி போலிருக்கிறது; கயிற்றுக் கொடியில் நிறைய அழுக்கு வேஷ்டி சட்டைகள் கிடந்தன. மூலையில் ஒரு டிரங்க் இருந்தது. அதைத் திறந்து பார்க்கவேண்டும் என்ற ஆவலில் அங்கு சென்ருர் பீதாம்பரம். இதற்குள் மாடிப்படிகளில் யாரோ தடதட வென்று வேகமாக ஏறிவரும் ஓசை கேட்கவே, துப்பறியும் நிபுணர்கள் இருவரும் ஸ்தம்பித்துவிட்டனர். மறுகணம், பூதாகாரமான உருவத்துடன்ஒரு ஸ்திரீ அறைவாசலில் வந்து நின்ருள். அவள் கண்களில் அக்கினி பறந்தது. அவ்வளவு பெரிய சரீரத்தைத் தூக்கிக் கொண்டு, மாடிப்படிகளில் வேகமாக ஏறி வந்ததால் அவளுக்கு மூச்சு வாங்கியது. ஆகவே தான் அவளால் உடனே பேசமுடியாமல் போய்விட்டது, ஆத்திரத்தோடு அறைக்குள் நின்று கொண்டிருந்த இருவரையும் பார்த்தாள். நிலைமையை உணர்ந்து கொண்ட பீதாம்பரம் அவள் அருகில் சென்ருர். சுகுமாரனுக்கு இன்னெருபயம் உண்டாகிவிட்டது. அது சகாதேவன் அறையாக இல்லாமல், வேறு யாருடையதாகவாவது இருக்குமோ....?

"நீங்கள் யார்? யாரைக் கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தீர்கள்?" என்று கர்ஜித்தாள் அந்தப் பெண்மணி. வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். இந்த வயதில் ஒரு பெண்ணுக்கு இவ்வளவு கோபம் வருவது ரொம்ப ஆபத்து என்று எண்ணிஞர் பீதாம்பரம்! ஆனால் சுகுமாரன் அதற்கு எதிராக இருந்தான். 'பின் இருக்காதா? மூன்ருவது மனுஷியின் வீட்டுக்குள் அனுமதியில்லாமல் புகுந்ததுமல்லாமல், கதவில் போட்டிருந்த பூட்டையும் உடைத்து உள்ளே சென்ருல் யாருக்குத் தான் ஆத்திரம் வராது?' என்று எண்ணிக் கொண்டான்.

அவர்களிடமிருந்து பதில் வராமல் போகவே, அவளுக்கு இன்னும் கோபம் அதிகமாகி விட்டது. "நீங்கள் யார்? என்ன கேட்கக்கேட்க அசையாமல் நிற்கிறீர்களே?" என்று கத்திஞள். உண்மையில் அவள் உரக்கத்தான் கத்திஞள். ஆனல், கோபத்தால் அவளுடைய குரல் கீச்சுக்குரலாக ஒலித்தது. பீதாம்பரம், தம்முடைய இதழ்க்கடையில் புன்னகையொன்றை அரும்பவிட்டுக் கொண்டு, "சகாதேவனைத் தான் பார்க்க வந்தோம். அவன் என் சிநேகிதன். நீங்கள் யார்?"

என்று நிதானமாகக் கேட்டார், அவர் பேச்சு, அவள் ஆத்திரத்தை இன்னும் கிளறி விட்டது.

"எந்த சகாதேவன்? இங்கு யாரும் இல்லை. என்னையே யார் என்று கேட்கிறீர்களா? ரொம்ப லட்சணம்தான். முதலில், வெளியேறித் தெருவுக்குப் போங்கள், நான் யார் என்று சொல்லுகிறேன்'' என்று அலறினாள். பீதாம்பரம் இதற்குமேல் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. மௌனமாக அறையை விட்டு வெளியேறி மாடிப்படிகளில் இறங்கி நடந்தார். சுகுமாரனும் அவரைப் பின்தொடர்ந்து சென்றான். இருவரும் தெருவில் வந்து நின்று கொண்டு அவளை எதிர் பார்த்தனர். அறையைச் சாத்திக் கொண்டு சிறிது நேரத்திலேயே அவளும் வந்தாள்.

"இப்போது நான் யார் என்று தெரிகிறதா? உங்களை வீட்டை விட்டு வெளியே போகும்படி யார் சொல்லுவார்கள்? நான் இந்த வீட்டுக்காரி'' என்றாள்.

இதைக் கேட்டதும் சிரித்து விட்டார் பீதாம்பரம். "இதை நான் அப்போதே தெரிந்து கொண்டேனே. ஆனால், எனக்கு உங்களைத் தெரிந்து ஆகவேண்டியது ஒன்றுமில்லை. சகாதேவனைப்பற்றித்தான் தெரியவேண்டும்.''

"சகாதேவனைப் பற்றித் தெரியவேண்டுமா? அவன் உங்கள் சிநேகிதன் என்றீர்களே?'' என்று சற்று யோசனையோடு கேட்டாள் அவள். அவளுடைய குரலில் பழைய கோபம் இல்லை. ஆனால் உடனே சற்று கோபத்தை வலிய வரவழைத்துக் கொண்டாள். "உங்களை என்னால் நம்ப முடியவில்லை. சகாதேவன் இங்கிருக்கிறான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் புகுந்த அறை வேறு ஒருவருக்குள்ளது. நல்லவேளை, அவர் வராமலிருந்தார். மேலும், இந்த வீட்டில் சகாதேவன் என்று யாருமே கிடையாது. இனிமேல் இந்த மாதிரி கேட்காமல் கொள்ளாமல் நுழையாதீர்கள்'' என்று படபடவென்று வார்த்தைகளைப் பொரிந்து கொட்டிக் கொண்டே உள்ளே சென்று விட்டாள்.

துப்பறியும் நிபுணர்கள் இருவருக்கும் அப்போது மழை பெய்து ஓய்ந்தது போலிருந்தது. சுகுமாரன் ஏமாற்றத்தோடு பீதாம்பரத்தைப் பார்த்தான். ஆனால் பீதாம்பரத்

தின் முகம் உற்சாகத்தை இழக்காதது போலிருந்தது. சுகுமாரனின் தோளைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே, "சுகுமாரா! ஏழு லட்சம் பெண்களில் எவளுக்கு ஆபத்து என்று இன்னும் ஒருமணி நேரத்தில் சொல்லுகிறேன்" என்று சந்தோஷத்தோடு கூறினார். இவ்வளவு நேரமும் நடந்த கூத்தைப் பார்த்தால் பீதாம்பரம் சொல்லியபடி எதையுமே எதிர்பார்க்க முடியாது என்று நினைத்திருந்த சுகுமாரனுக்கு இது ஆச்சரியமாயிருந்தது.

"இந்த வீட்டில்தான் சகாதேவன் தங்கியிருந்திருக்கிறான். நாம் புகுந்த அறைதான் அவனுடைய அறை. வா, இப்படி ஒரு சுற்றுப்போட்டுவிட்டு வருவோம். அதற்குள் அந்தப் பிடாரியும் எங்கேயாவது தொலைந்து போகும். மறுபடியும் வந்து பார்க்கலாம்" என்றார் பீதாம்பரம்.

"ஸார்! அவள் சொன்னதைப் பார்த்தால்...." என்று இழுத்தான் சுகுமாரன்.

"அவளாகவே வார்த்தையை விட்டு மாட்டிக் கொண்டாள். பார்! இன்னும் ஒரு மணி நேரத்தில் நாம் இங்கு வந்ததும் அந்த அறை சகாதேவனுடையது தான் என்பதை நிரூபிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மெயின் ரோடை நோக்கி நடந்தார் பீதாம்பரம்.

இருவருமாக திருவல்லிக்கேணி ஹைரோடில் அங்குமிங்குமாகச் சுற்றிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். தங்களுக்காக இன்ஸ்பெக்டர் பால்ராஜ் துப்பாக்கியும் கையுமாக டெலிபோனுக்கு அருகில் காத்துக் கொண்டிருப்பார் என்பதை பீதாம்பரமும் மறந்து விட்டார்; சுகுமாரனும் அடியோடு மறந்து விட்டான்.

பீதாம்பரம் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். ஐந்து மணியாகிவிட்டது. சுகுமாரனை அழைத்துக் கொண்டு படேசாகிப் தெருவை நோக்கி விரைந்தார். அவர், அந்தப் பழைய வீட்டைநெருங்கியதும், அங்கு அவர்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. வீட்டுக்காரக் கிழவி அங்கில்லை. வாசலில் வேறு யாரோ ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். இவளைப் பார்த்தால், அப்படியொன்றும் எரிந்து விழமாட்டாள் என்று புரிந்து கொண்ட சுகுமாரன் தைரியமாக பீதாம்பரத்துடன் சென்றான்!

கொடு சூலியா? படு நீலியா?

வாசலில் நின்று கொண்டிருந்த ஸ்திரீயிடம் நெருங்கிய பீதாம்பரம், "மேலே சகாதேவனுடைய அறைக்குச் செல்ல வேண்டும்" என்றார்.

"அங்கு அவர் இப்போது இருப்பாரோ என்னவோ? நான் கீழே குடியிருக்கிறேன். வீட்டுக்காரி கூட இங்கேதான் ஒரு அறையில் இருக்கிருள். வேண்டுமானுல் நீங்கள் மேலே போகலாம்" என்ருள் அந்தப் பெண். இதைக் கேட்டதும் துப்பறிபவர்களுக்கு ஒரே மகிழ்ச்சியாகி விட்டது.

"வீட்டுக்காரி உங்களுடன் கீழேதான் இருக்கிருளா? ஆமாம், அவள் இப்போது எங்கே?" என்று கேட்டார் பீதாம்பரம்.

"எங்கேயோ அவள் அண்ணன் மகளுக்குச் சீமந்தமாம் காலையில் தான் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனுள்".

—மகிழ்ச்சியோடு மாடிப் படிகளில் ஏறி, சகாதேவனின் அறையை அடைந்தனர். கதவு பூட்டப்படாமல் வெறுமனே திறந்து போடப்பட்டிருந்தது. விறுட்டென்று உள்ளே நுழைந்த இருவருக்கும் பெரிய ஏமாற்றமே காத்திருந்தது. அந்த அறை காலியாகக் கிடந்தது. சற்று முன் அவர்கள் வந்தபோது கிடந்த துணிமணிகள், பெட்டி ஒன்றையுமே காணும். உதட்டைப் பிதுக்கியவாறே சுவர் எல்லாம் பார்த்துக் கொண்டு வந்த பீதாம்பரத்துக்குத் திடீரென்று முகத்தில் களைதட்டியது. சுகுமாரனை ஒரு முறை பார்த்து விட்டுச் சுவரை மீண்டும் நோக்கினர். ஒரு தூசு கூட விடாமல் அறையைத் துப்புரவு செய்து விட்டவர்கள், சுவரில் ஒரே ஒரு போட்டோவை மட்டும் விட்டுச் சென்றது தம்முடைய அதிர்ஷ்டம் என்று சந்தோஷப்பட்டுக் கொண்ட பீதாம்பரம் சற்றும் யோசிக்காமல் அந்தப் படத்தை எடுத்து விறு விறுவென்று சட்டத்தைக் கழற்றி எறிந்து விட்டு, படத்தை மட்டும் தம்முடைய கோட்டுப் பைக்குள் வைத்துக் கொண்டார். அவர்களுக்கு மேலும் அங்கு வேலையில்லை. ஆகவே,

இருவரும் அறையை விட்டு வெளியே வந்தனர். மாடியி லிருந்தபடியே, கீழேயிருக்கும் பெண்ணைப் பார்த்தார் பீதாம் பரம். அவள் இவர்களை இலட்சியம் செய்ததாகத் தெரிய வில்லை. தெருவில் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு நின் றிருந்தாள். கீழே இறங்கி அவளருகில் சென்றனர் இருவரும்.

"அம்மா! இங்கு சகாதேவன் இல்லைபோல் தெரி கிறது. அவன் அறையைக் காலிசெய்து விட்டானோ?" என்று கேட்டார் பீதாம்பரம்.

"ஒன்றும் தெரியவில்லை." என்று ஒரே வரியில் பதில் கூறினாள் அந்தப் பெண்.

"அவன் எங்கு சென்றிருப்பானென்று உங்களுக்குத் தெரியாது; இல்லையா?" என்று நாசூக்காகக் கேட்டார் பீதாம்பரம்.

"தெரியாது".

"அது சரி......அவனை யாராவது தேடிக்கொண்டு இங்கு வருவார்களா?"

"ம்......பட்டுசாமி வருவான் எப்போதாவது. அவன் தான் சகாதேவனுக்கு ரொம்பக் கூட்டு. அவனைக் கண்டு கேட்டீர்களானால், சகாதேவனை நீங்கள் உடனே பார்த்து விடலாம்".

—பீதாம்பரத்துக்குத் தங்கள் சிரமம் வீண்போகவில்லை என்ற ஒரு திருப்தி ஏற்பட்டது.

"பட்டுசாமியை உடனே பார்க்க வேண்டுமானால் எங்கே போகவேண்டும்?" என்று ஆவலோடு கேட்டார் பீதாம்பரம்.

"நேரே மாம்பலம் பஸ்லுல்லாஹ் ரோடுக்குப் போங் கள். அங்கே எழுநூத்தி ஒண்ணும் நம்பர் பங்களாவில் பட்டுசாமி வாட்ச்மேனாக இருக்கிறான். அவனுக்கு ஜாகை யெல்லாம் அங்கேதான்" என்றாள்.

நன்றி கலந்த பார்வையில், அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு, நடக்க ஆரம்பித்தார் பீதாம்பரம். உண்மையில், அவருக்கு லட்ச ரூபாயைக் கண்டெடுத்தது போலிருந்தது. சிறிது நேரம் இருவரும் மௌனமாகச் சென்று கொண்டிருந்தனர்.

"சுகுமார்! நாம் நேரே மைலாப்பூருக்குப் போய், நளினா ஹோட்டலில் காட்டமாக ஒரு காப்பி சாப்பிட்டு விட்டுத் தான் மாம்பலத்துக்குப் போக வேண்டும். என்ன?" என்றார் பீதாம்பரம்.

"உங்கள் பேச்சுக்குத் தான் அப்பீலே கிடையாதே!" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் சுகுமாரன்.

இருவரும் நளினா ஹோட்டலுக்குள் நுழையும்போது ஐந்தே முக்கால் மணியாகிவிட்டது. கல்லாவிலிருந்த ஹோட்டல் முதலாளியுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, தனியறை ஒன்றுக்குள் இருவரும் நுழைந்தனர். சப்ளையரிடம் ஒரு காபி கொண்டு வரச் சொல்லி அவனை அப்பால் அனுப்பிவிட்டு, கோட்டுப் பையிலிருந்த புகைப் படத்தை வெளியே எடுத்தார் பீதாம்பரம். சகாதேவனுடைய படம் தான் அது. களையான அவன் முகம் கொஞ்சம் வாலிபத்தோற்றத்தோடு இருந்தது. இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு பிடிக்கப்பட்ட படம் என்று அந்தத் தோற்றத்திலிருந்து உறுதியாகியது.

"என்ன ஸார்! புது மாதிரியாக உடையணிந்திருக்கிறாரே?" என்று கேட்டான் சுகுமாரன்.

"சகாதேவன் இதற்கு முன்பு வேலை பார்த்த இடத்திலுள்ள 'யூனிபாரம்' உடை போலிருக்கிறது. இதோ பார், நெஞ்சில், பாட்ஜ் ஒன்றிருக்கிறது. இந்த மாதிரி குதிரை முகச் சின்னத்தோடு, இங்கே ஏதோ ஒரு தொழிற்சாலை இருப்பதாக எனக்குக் கவனம் இருக்கிறது. ஆனால், திடீரென்று ஞாபகத்துக்கு வரவில்லை......" என்று அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே காபியைக் கொண்டு வந்து வைத்தான் சப்ளையர்.

"சுகுமாரா! நமக்கு இரட்டை வெற்றி. பட்டுசாமி நமக்கு உதவி செய்யாவிட்டால் கூட பரவாயில்லை. இந்த

பாட்ஜை வைத்து நாம் மேலே செல்லலாம்." என்று உற்சாகத்தோடு கூறினர். இருவரும் காபியை அருந்தி விட்டு, வெளியே கிளம்பினர்.

பஸ்லுல்லாஹ் ரோடிலுள்ள எழுநூற்று ஒன்றும் எண் பங்களாவை அவர்கள் அடையும்போது மணி ஆறரையாகிவிட்டது. பூங்கா ஒன்றுக்குள் பார்ப்பதற்கு அழகாக நின்று கொண்டிருந்தது அந்த பங்களா. உள்ளே அதிகமாக விளக்கு ஒன்றும் எரிவதாகத் தெரியவில்லை. போர்டிகோவில் மட்டும் இலேசான ஒளியுடன் ஒரே ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. உள்ளே போகலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருப்பதற்குள் அவர்களுக்கு மிக அருகிலேயே ஒரு குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து, அருகிலிருந்த பூச்செடிகளுக்குள்ளிருந்து ஒரு மனிதன் வந்தான். அவனுடைய உடையைப் பார்த்த பீதாம்பரம் அவன்தான் பட்டுசாமி என்று முடிவு செய்து கொண்டார்.

"நீங்கள்தான் பட்டுசாமி; இல்லையா?" என்று கேட்டார்.

"ஆமாம், நீங்கள்......?" என்று இழுத்தான் அவன்.

"சகாதேவனை எனக்குத் தெரியும். அவன் இப்போது முன்பு இருந்த அறையில் இல்லை. உங்களை விசாரித்தால், அவனுடைய விலாசம் தெரியும் என்று சொன்னர்கள்".

"அப்படியா? சகாதேவன் உங்களுக்கு வேண்டியவனு? எனக்கும் ஆப்தமானவன்தான். வாருங்கள், பங்களாவுக்குள்ளேயே உட்கார்ந்து பேசலாம். வீட்டில் எல்லோரும் சினிமாவுக்குப் போயிருக்கிறர்கள். ஆகையால், தாராளமாக உட்கார்ந்து பேசலாம்" என்று சொல்லி விட்டு, பட்டுசாமி பங்களாவை நோக்கி நடந்தான்.

பங்களாவுக்குள் சென்று இரண்டு மூன்று அறைகள் தாண்டியதும், வலது புறமிருந்த ஒரு தனியறைக்குள் மூவரும் நுழைந்தனர். அங்கு, நாற்காலிகளும் ஸோபாக்களும் வெகு அழகாகப் போடப்பட்டிருந்தன. மூவரும் உட்கார்ந்

தனர். ஆனால், உட்கார்ந்த சூட்டோடு திடீரென்று எழுந்தான் பட்டுசாமி. "காம்பவுண்டுக் கதவைச் சாத்திவிட்டு வருகிறேன், கொஞ்சம் இருங்கள்" என்று சொல்லிவிட்டு, அறையை விட்டு வெளியே சென்றான். மறு நிமிஷம், துப்பறியும் நிபுணர்கள் எதிர்பார்க்காத ஒன்று நடந்து விட்டது. காம்பவுண்டுக் கதவை அடைப்பதாகச் சொல்லி விட்டுச் சென்ற பட்டுசாமி அவர்கள் இருந்த அறைக் கதவையே படாரென்று அடைத்து விட்டான். சிறிது நேரத்தில் பெரிய பூட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து கதவைப் பூட்டி விட்டு சாவியை இடுப்பில் பத்திரமாக வைத்துக்கொண்டான். வெளியே கதவு பூட்டப்படும் சப்தம் பீதாம்பரத்துக்கு இலேசாகக் கேட்டது. அப்போதே அவருக்கு விஷயம் ஒருவாறு புரிந்து விட்டது. காலமும், மனிதர்களும் சேர்ந்து சதி செய்து தங்கள் இருவரையும் ஒரு பெரிய பாதாளத்தில் தள்ளி மூடி விட்டார்கள் என்பதை உணர்ந்ததும் அவருக்கு ஒரே குழப்பமாகிவிட்டது. திடீரென்று விளக்கு வேறு அணைந்து விட்டது. ஜன்னலே இல்லாத அந்த அறையில், எரிந்து கொண்டிருந்த ஒரு விளக்கும் அணைந்து விடவே, பீதாம்பரம் செய்வதறியாமல் சிறிது நேரம் திகைத்தபடி நின்று கொண்டிருந்தார்.

விளக்கை அணைத்து விட்டு, மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு அறைவாசலுக்குப் பாராக் கொடுத்துக் கொண்டிருந்த பட்டுசாமி, "சகாதேவனுக்கு வேண்டியவராமில்ல. போவட்டும், அவனண்டையே போயிப் பேசிக்கிடட்டும்" என்று கருவிக் கொண்டான்.

யோசனையில்லாமல், சிறையிலடைபட்டது போல மாட்டிக் கொண்ட துப்பறியும் நிபுணர்கள் இருவரும், கையைப் பிசைந்தபடி உட்கார்ந்திருந்தனர். ஆனால் சிறிது நேரத்தில் சுகுமாரன் ஏதோ ஒரு நப்பாசையால் எழுந்து சுவர்களைத் தடவிக்கொண்டே வந்தான். காலை நான்கு மணிவரை அப்படியேதான் அறைக்குள் நின்று துழாவினர். பீதாம்பரம் அறையைப் பூராவும் துழாவவில்லை. சுவரோடு ஒட்டினாற்போல இருந்த பெரிய பீரோ ஒன்றையேதான் அவர் ஆராய்ந்து கொண்டிருந்தார். இடையிடையே அவர் சுகுமாரனோடு பேசிக் கொண்டார்.

"சுகுமாரா! இரண்டாவது முறை அந்த வீட்டுக்குச் செல்லும்போது நின்று கொண்டிருந்த பெண்ணை நாம் நம்பியதுதான் தவறாகி விட்டது. வீட்டுக்காரி நாம் முதலில் வந்துவிட்டுப் போனதுமே உஷாராகிவிட்டாள். மீண்டும் நாம் வருவோம் என்றெண்ணி முன்னேற்பாடாகவே அறையைக் காலி செய்துவிட்டு, இங்கு வந்து நம்மை இப்படிச் சிக்கவைக்க ஏற்பாடும் செய்திருக்கிறாள். நாம் இங்கு வருவதற்கு யாராவது வழி காட்ட வேண்டுமல்லவா? அதற்காகத்தான், அந்தப் பெண்ணை அவள் நிறுத்தி வைத்திருக்கிறாள்" என்றார். சுகுமாரன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. பீதாம்பரம் மீண்டும் பேச ஆரம்பித்தார்.

"சுகுமார்! இங்கே என் பக்கத்தில் வா. இந்தப் பீரோவைக் கொஞ்சம் நகர்த்து" என்றார். சுகுமாரனுக்குப் புது உற்சாகம் பிறந்து விட்டது. முழு மூச்சாக பீதாம்பரத்துடன் சேர்ந்து பீரோவை நகர்த்தினான். பீதாம்பரம் நினைத்ததுபோல அந்தப் பீரோவுக்குப் பின்னால், அறையை விட்டு வெளியே செல்ல ஒரு கதவு இருந்தது. கனத்த அந்தப் பீரோவை இருவருமாகச் சேர்ந்து சுவரிலிருந்து இரண்டு மூன்றடி நகர்த்தி விட்டு, உட்புறமாக தாழிட்டிருந்த கதவைத் தடவித் தடவி பூட்டுப் புறத்தைக் கண்டு பிடித்தனர். வெறுமனே தாழிடப் பட்டிருந்தாலும், துருவேறியிருந்ததால் அந்தத் தாழ் சுலபத்தில் அசைந்து கொடுப்பதாயில்லை. ஒருவாறாக அந்தக் கதவு திறந்ததும் வியர்த்து விருவிருக்க வெளியே வந்தனர் இருவரும்.

விடிவதற்கு இரண்டு நாழிகை இருக்கும். உலகம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. பட்டுசாமியை மீண்டும் சந்திப்பது எல்லாக் காரியங்களுக்குமே கெடுதலாக வந்து முடியுமென்று எண்ணியபீதாம்பரம் சுகுமாரனோடு,பூச்செடிகளுக்குள் பதுங்கிப் பதுங்கிப் போய்க்கொண்டிருந்தார். அப்போது, நடைபாதையில் யாரோ இருவர் மெல்லிய குரலில் பேசிக்கொண்டு வருவது காதில் கேட்டது. பீதாம்பரம், அவர்கள் பேசிக்கொள்வதைக் கூர்ந்து கேட்டார். ஒன்று பட்டுசாமியுடைய குரல். "நாளை மறுதினம் காலை பதினொரு மணிக்குள் அவள் இந்த உலகத்திலேயே இருக்கக் கூடாது. அதற்கு மறுநாள் முதல் தான் அவள்......" இதற்குப் பிறகு சரியாகக் கேட்கவில்லை. இதைக் கேட்டதும் பீதாம்பரத்துக்கு

மனதில் ஏதோ ஒரு மாதிரியாக வலித்தது. ஆனல் அதைத் தொடர்ந்து ஓர் உற்சாகமும் பிறக்கத்தான் செய்தது. அதாவது, சகாதேவன், எந்தப் பெண்ணுக்கு ஆபத்து என்று எச்சரித்தானே அவளைச் சுட்டித்தான் பட்டுசாமி சொல்லுகிறன். அவளுக்கு, நாளை மறுதினம் காலை பதினெரு மணிவரைக்கும் ஆபத்துக் கிடையாது என்று பட்டுசாமியே சொல்லும்போது.,... இந்த இடைக்காலத்துக்குள் அந்தப் பெண் யாரென்று கண்டு பிடித்து விடலாம். ஆனல், அவளை எங்கு சென்று விசாரிப்பது?...பட்டுசாமியிடம் விசாரிப்பது வடிகட்டின முட்டாள்தனம் என்பது பீதாம்பரத்துக்குத் தெரியும். இதைப் பற்றியே சிறிது நேரம் மனசைப் போட்டுக் குழப்பியபடி உட்கார்ந்திருந்த பீதாம்பரம் சட்டென்று திரும்பி, பட்டுசாமி சென்ற திக்கைக் கவனித்தார். அவனும், அவனுடன் சென்ற நபரும் இதற்குள் பங்களாவுக்குள் நுழைந்து விட்டனர். அடுத்த நிமிஷம் என்ன நடக்குமென்பதை உணர்ந்து கொண்ட அவர், சுகுமாரனைக் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு வெளியே ஓடினர்.

துப்பறியும் நிபுணர்கள் இருவரும், அந்த அதிகாலை நேரத்தில் பாண்டிபஜார் வரை தங்களைக் கூடுமானவரை மறைத்துக் கொண்டு நடந்து சென்று, டாக்ஸி யொன்றைப் பிடித்து, ஜார்ஜ் டவுனை நோக்கிச் செல்லும் வரை அதிக சிரமப்பட்டு விட்டார்கள். முதல் நாள் காலை பதினெரு மணிக்கு, நளினு ஹோட்டலில் பிஸ்கட் சாப்பிட்டது. அதன் பிறகு இருவரும் அதுவரை வெறும் வயிறுடனேயே இருந்திருக்கின்றனர். ஹோட்டலைப் பார்த்ததும் சுகுமாரனுக்கு பசி அதிகமாகத் தெரிந்தது. அவனுடைய நிலைமையை உணர்ந்து கொண்ட பீதாம்பரம் சிரித்தபடி, ஹோட்டலுக்குள் நுழைந்தார். சிற்றுண்டி கொண்டு வரச் சொல்லி விட்டு, இருவரும் வழக்குப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டனர்.

"சுகுமாரா! இனிமேல்தான் அவர்கள் நமக்கு அதிகமான தொந்தரவைக் கொடுக்கப் போகிறர்கள். பட்டுசாமி இதற்குள், நாம் அடைபட்டிருந்த அறை காலியாகக் கிடப்பதைப் பார்த்திருப்பான். செய்தியும் மற்றவர்களுக்கு

எட்டியிருக்கும். அதோடு நேற்று சகாதேவனுடைய அறையில், அவனுடைய போட்டோவை எடுத்துக்கொண்டு சட்டத்தை மறதியாக அங்கேயே போட்டு விட்டேன். அவர்கள் அதைக் கவனித்திருப்பார்கள். ஆகவே, நாம் சகாதேவனைப் பற்றி விவரம் சேகரிக்கப் போகிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். நம்மை நிச்சயமாகப் பின் தொடர்வார்கள். எனக்கு இப்போது பழையபடியும் குழப்பம் உண்டாகிவிட்டது. ஏழு லட்சம் பெண்களில் எவளுக்கு ஆபத்து என்பதைத் தெரிந்து கொள்வதுதான் அந்தக் குழப்பம்" என்று மூச்சு விடாமல் கூறினார் பீதாம்பரம்.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சுகுமாரன், "சகாதேவனைப் பற்றி நாம் தெரிந்து கொண்டால், அந்தப் பெண் யார் என்றும் கண்டு பிடித்து விடலாம்" என்று கூறினான்.

"அதுதானே இப்போது பிரச்னை! அவனைப் பற்றி நாம் விவரம் சேகரிக்க எங்கே போவது?" என்று ஆழ்ந்து விஷயத்தைப் பேசிக்கொண்டிருந்த பீதாம்பரம், எதிரே எதையோ பார்த்துச் சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு, அந்தத் திக்கையே உற்றுக் கவனித்தார். சுகுமாரனுக்கு 'திக்'கென்றாகி விட்டது. பீதாம்பரம் பார்த்த திசையை நோக்கினான். அங்கு சந்தேகப்படும்படியாக ஒன்றுமேயில்லை.

"சுகுமார்! நீ இங்கேயே இரு, அதோ, அந்தக் காக்கி உடுப்பு ஆசாமியுடன் பேசிவிட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு எழுந்து சென்றார். காக்கி உடுப்பு ஆசாமி கையில் ஒரு பீங்கான் கோப்பையை வைத்துக் கொண்டு காபி வாங்கிக்கொண்டு போவதற்காக அங்கு நின்று கொண்டிருந்தான். அவனுக்குச் சமீபத்தில் போய் நின்றுகொண்ட பீதாம்பரம் ஜாடையாக அவனைக் கவனித்தார், உற்று நோக்கினார். அடுத்த கணம் அவருடைய வதனம் மலர்ந்தது. காற்சட்டைப் பைக்குள் கையைவிட்டு, ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை வெளியே எடுத்தார். இதையெல்லாம் காக்கி உடுப்புக்காரன் பார்க்கவேயில்லை. பீதாம்பரம், பணம் வைத்திருந்த கையை அவனுடைய முகத்துக்கு நேராகக் கொண்டு விரித்தார். இதை எதிர்பாராத அந்த மனிதன், கைக்குரிய

வரைச் 'சட்'டென்று ஏறிட்டுப் பார்த்தான். அவனைப் பேச விடாமல், பீதாம்பரமே பேச்சை ஆரம்பித்து விட்டார்.

"தம்பி! உனக்கு இந்தப் பணத்தைத் தரப் போகிறேன். எனக்கு நீ ஒரே ஒரு உதவி செய்தால் இது உனக்கே தான்" என்று நாடக பாணியில் பேசினார் பீதாம்பரம். காக்கி உடுப்புக்காரனுக்கு அவருடைய இந்தச் செய்கை ஆச்சரியத்தை அளித்திருக்க வேண்டும்; புரியாதவனைப்போல பீதாம்பரத்தை நோக்கினான். அவனுடைய பார்வையை அப்போதே உணர்ந்துகொண்டார் அவர். அவன் தம் விருப்பப்படி எந்தத் தகவலையும் கூறுவான் என்பதும், பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறான் என்பதும் அவருக்குத் தெரிந்து விட்டது.

"வேறு ஒன்றும் பிரமாதமாக நீ உதவி செய்ய வேண்டாம். அதோ, அங்கே உட்கார்ந்து பேசலாம் வா" என்று அவனை அழைத்துச் சென்றார் பீதாம்பரம். காக்கி உடுப்புக்காரனுக்கு எல்லாமே வியப்பாயிருந்தது.

"உனக்கு சகாதேவனைத் தெரியுமல்லவா?" என்று 'சட்'டெனக் கேட்டார் பீதாம்பரம். அவர் எதிர்பார்த்தார், காக்கி உடுப்புக்காரன் மருண்டு விடுவானென்று. ஆனால் இல்லை. அவன் யோசிக்காமல் பேசினான்: "எந்த சகாதேவனைக் கேட்கிறீர்கள்?"

"உங்கள் கம்பெனியில் முன்னால் வேலை பார்த்தானே?"

"நான் அந்தக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருஷம் தான் ஆகிறது. அதற்கு முன் யாராவது சகாதேவன் என்பவர் இருந்திருக்கலாம்."

"அது சரி! உங்கள் கம்பெனி எந்த இடத்திலிருக்கிறது?"

"கொத்தவால் சாவடிக்குப் பக்கத்தில்"

"அங்கிருந்தா இங்கே வருகிறாய்?"

"என்ன செய்வது? எங்கள் எஜமானுக்கு இந்த ஹோட்டல் காபி தான் பிடிக்கிறது."

"ம். . . . அது போகட்டும். உங்கள் கம்பெனியில் அலுமினியப் பாத்திரம் மாத்திரம் தான் செய்கிறார்கள்; இல்லையா ?"

"ஆமாம்."

"உங்கள் கம்பெனியின் பெயர் என்னவென்று சொன்னாய் ?"

"முரளிதரன் அலுமினியம் ஒர்க்ஸ்."

"சபாஷ். இந்தா, நான் சொன்னபடி உனக்குப் பரிசு" என்று சொல்லிக் கொண்டே, பணத்தை அவன் பக்கமாகச் சுண்டினார் பீதாம்பரம். ஆவலோடு அதைக் கையில் பிடித்துக் கொண்ட அவன் விசித்திரமாக பீதாம்பரத்தைப் பார்த்தான். சாதாரணமான ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு ரூபாய் தரும் பிரகஸ்பதியும் இந்த உலகத்தில் இருக்கிறதே என்று அவன் ஆச்சரியப் பட்டானோ என்னவோ ? அவன் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டிருந்த பீதாம்பரம், இதழ்க்கடையில் ஒரு புன்னகையைச் சிதறிவிட்டு சுகுமாரன் பக்கம் திரும்பினார்.

"சுகுமார் ! பாதி வெற்றி ! சகாதேவன் படத்தில் அவன் அணிந்து கொண்டிருந்த குதிரை முக பாட்ஜைப்போல் இந்தக் காக்கி உடுப்புக்காரனும் அணிந்திருந்தான். அதனால் தான். . . ." என்று விஷயத்தைக் கூறி முடிக்கவில்லை, அதற்குள் சுகுமாரன் பேசினான்.

"நான் அதை அப்போதே புரிந்து கொண்டேன்" என்றான்.

"சுகுமார் ! நமக்கு விதிக்கப்பட்டுள்ளது இன்னும் இருபத்தெட்டு மணி நேரம்தான். இதற்குள் நாம் ஒரு அபலைப் பெண்ணைக் காப்பாற்றியாக வேண்டும், இதற்கு மேல் தான் நாம் நியாயமாக வேலையை ஆரம்பிக்கப் போகிறோம். காலம் ஒரு பேய். ராஜநடை போட்டு உல்லாசமாகச் செல்லாது. பேய் வேகத்தில் பறந்து செல்லும் பொல்லாத குணம் காலம் ஒன்றுக்குத் தான் இருக்கிறது. ஆகவே, இந்தக் காலப் பேயை நாம் வெல்ல வேண்டும். ஏழு லட்சம் பெண்களில் எவளோ ஒருத்தியை நாம் காப்பாற்றி

யாக வேண்டும்!" என்று கிடுகிடுவென்று பேசி விட்டு, நன்ருக மூச்சு வாங்கிக் கொண்டார். பீதாம்பரம், கடமையை உணர்ந்து பேசும்போது இம்மாதிரிதான் உணர்ச்சிகரமாகப் பேசிவிடுவது வழக்கம். சுகுமாரனும் அதை மிகுந்த பயபக்தியுடன் கேட்டுக் கொண்டிருப்பான்.

இதற்கு மேல் இருவரும் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. ஆழ்ந்த சிந்தனையிலிருந்தனர். சுகுமாரன் சற்றைக்கொருதரம் தெருவில் போவோர் வருவோரைப் பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். இருந்தாற் போலிருந்து, துள்ளியெழுந்து அவன் உட்கார்ந்தது பீதாம்பரத்துக்கு 'சுருக்'கென்றது, 'வெடுக்'கென்று வாசற்புறத்தைப் பார்த்தார். அவர்கள் சற்று முன்பு ஏறிவந்த பச்சை நிற டாக்ஸி கார் ஹோட்டல் வாசல் முன்பு வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய நபர், டிரைவருடன் ஏதோ பேசினுன். அவன் காட்டிய ஜாடையிலிருந்து விவரத்தைப் புரிந்துகொண்டார் பீதாம்பரம். 'சட்'டென்று சுகுமாரன் பக்கம் திரும்பி, "சுகுமார்! எப்படியாவது பின் பக்கமாகப் போய், முரளிதரன் கம்பெனிக்குச் சென்றுவிடு. அங்கு சகாதேவனைப் பற்றி விசாரி. அதற்குள் இவனுக்குப் போக்குக் காட்டிவிட்டு, நானும் அங்கு வந்து சேருகிறேன். டாக்ஸி டிரைவர் மூலமாக நம்மைக் கண்டுபிடித்து விட்டான், ஓடு" என்று பரபரப்புடன் ஆணையிட்டார் பீதாம்பரம். சுகுமாரன் வெகு சாதுர்யமாக ஹோட்டலில் பின்புறத்துக்குச் சென்று அங்கிருந்து வெளியேறி அடுத்த தெருவை அடைந்து விட்டான். இதற்குள், டாக்ஸியிலிருந்து இறங்கிய மனிதன், நேராக ஹோட்டலுக்குள் நுழைந்தவன், அசப்பில் கண்களால் ஹோட்டலை ஒரு துழாவு துழாவினுன். கடைசியில், பீதாம்பரத்துக்கு மிக மிகச் சமீபமாக உள்ள ஒரு மேஜை அருகே உட்கார்ந்து கொண்டான். சுகுமாரனைக் காணுமல், அவனுடைய முகம் ஏமாற்ற உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் என்று முடிவு செய்த பீதாம்பரம், அவன் முகத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டுவிட்டார். அந்த மனிதன் ஏளனமான ஒரு புன்னகையை மட்டுமே உதிர்த்தான். இதைக் கண்ணுற்றதும் பீதாம்பரத்துக்குப் 'பகீர்' என்றது. சுகுமாரனை இந்நேரம் வேறு ஆட்கள் பின் தொடர்ந்து கொண்டிருப்பார்கள்

என்று அந்த மனிதன் சொல்லாமல் சொன்னதுதான் அவருக்குப் பயத்தை அளித்துவிட்டது. இனி சிந்திப்பதற்கு ஒன்றுமில்லை என்று தெரிந்துகொண்ட பீதாம்பரம், மெல்ல தம் இடத்தைவிட்டு எழுந்தார். அப்போது, புது மனிதன் அவரைப் பார்க்கவில்லை. இதுதான் சமயம் என்று விறு விறுவென்று நடந்து ரஸ்தாவில் இறங்கினர். அவர் பில்லுக்குப் பணம் கொடுக்காமல் போகவே அவர் பின்னேடே ஹோட்டல் சிப்பந்தி ஒருவன் ஓடி வந்தான். அவன் கையில் பில்லையும் பணத்தையும் வைத்துத் திணித்துவிட்டு, திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடந்தார்.

இரண்டு மூன்று தெருக்களைத் தாண்டியதும், பின்னல் திரும்பிப் பார்த்தார் பீதாம்பரம், அப்போதுதான் அவருக்கு நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அடுத்த தெருவுக்குள் நுழைந்து ஒரு முறை பின்னல் திரும்பிப் பார்த்தார். யாரோ ஒரு மனிதன் சைக்கிள் ரிக்ஷாவிலிருந்து இறங்கி வேகமாக நடந்து வருவது அசப்பில் தெரிந்தது. நன்முகப் பார்த்தார். அவனே தான் டாக்ஸியிலிருந்து இறங்கி, ஹோட்டலுக்குள் நுழைந்த அதே மனிதன்தான். பீதாம்பரத்துக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. எப்படியாவது அவன் பார்வையிலிருந்து தப்பி, தன்னை மறைத்துக்கொள்ள வேண்டுமென்ற துடிப்பில் அதி வேகமாக நடந்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய சிந்தனை ஏழு லட்சத்தில் எவளோ ஒரு பெண்ணுக்கு ஆபத்து என்று சகாதேவன் சொல்லிய வார்த்தைகளிலேயே நிலைத்திருந்தது. ஒரு பெண்ணைக் கொல்ல இத்தனை ஆண் பிள்ளைகள் சதி செய்ய வேண்டுமா; நாயாக அலைய வேண்டுமா என்பதை எண்ணும்போது பீதாம்பரத்துக்கு ஆச்சரியமாய்த்தானிருந்தது. அவ்வளவு முக்கியத்வம் வாய்ந்த அந்தப் பெண்தான் யார்? இந்தக் கேள்விக்கு விடை கிடைத்தால், அவர் எப்போதோ அவளைக் காப்பாற்றியிருப்பாரே! அவள் என்ன கொடுசூலியா? எல்லோரையும் ஆட்டி வைக்கும் படுநீலியா? இல்லை, அழகு மிக்க மோகனங்கியா? ஏனென்முல், அழகிய பெண்களைத் தொலைத்துக் கட்ட அநேகர் முயற்சிப்பார்கள். அவர்களால், அநேகர் மதியிழந்து குடும்பத்தைக் கவனியாமல் அவர்களைப் பின்பற்றித் திரிவார்கள். இதைக் கண்டு சிலர், அந்த அழகுப் பதுமைகளை அழிக்கப் பார்ப்பார்கள்!

"நான் செத்தது பொய்!"

ஹோட்டலின் பின்புற வாசல் வழியாக அடுத்த தெருவில் இறங்கி நடந்து கொண்டிருந்த சுகுமாரன், திரும்பிப் பார்க்காமலே சென்று கொண்டிருந்தான். யாரோ ஓர் அபலைப் பெண், படுபாதாளத்தில் விழுந்து, 'என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று ஓலமிடுவது போலவும், தான் அவளைக் காப்பாற்றச் செல்வதாகவும் நினைத்துக் கொண்டான். திடீரென்று யாரோ ஒரு முரடன் அவனைப் பிடித்து நிறுத்துகிறான். 'நான்தான் அவளை அங்கு தள்ளினேன். உனக்கென்ன அவளைப் பற்றி?' என்று கர்ஜிக்கிறான்....... இத்தனையும் சுகுமாரனின் எண்ணம்தான். ஏதோ ஞாபகத்தில் பின்னால் திரும்பிப்பார்த்த சுகுமாரன் ஒரு கணம் என்ன செய்வதென்று புரியாமல் திணறிவிட்டான். ஒரு மனிதன் இவனைப் பார்த்தபடியே வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவனுடைய பார்வையும், நடையும் ஏனோ சுகுமாரனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அடுத்த கணமே மனசைச் சமாதானப்படுத்திக் கொண்டான். தெருவில் எத்தனையோ பேர் எத்தனையோ விதத்தில் செல்வார்கள். எல்லோரையும் சம்சயப்பட்டால் முடியுமா? மேலும் தான் இந்தப் பாதையாக வருவது யாருக்குமே தெரியாதே!

மேலும் இரண்டு தெருக்களைக் கடந்து விட்ட சுகுமாரன் மீண்டும் பின்னால் திரும்பிப்பார்த்தான். இப்போது தான் அவனுக்கு அதிகமாகச் சந்தேகமாகிவிட்டது. சற்று முன்பு பார்த்த அதே ஆசாமி, அதே வேகத்துடனேயே நடந்து கொண்டிருந்தான். அவன் பார்வை சுகுமாரனை விட்டு விலகவேயில்லை. சுகுமாரன் இதற்காகப் பயந்து விடவில்லை. அவனுக்கு எப்படியாவது போக்குக் காட்டிவிட்டு, முரளிதரன் கம்பெனிக்குச் சென்றுவிட வேண்டுமென்ற முடிவுடன், வேறு திசையில் திரும்பினான். சென்னை நகரம் முழுதும் அவனை அலைக்கழித்து, சந்தர்ப்பம் வரும்போது, அவனை ஏமாற்றிவிட்டுச் சென்று விட வேண்டுமென்ற திட்டத்துடன் படுவேகமாக நடந்து கொண்டிருந்தான்.

பின்னால் வந்து கொண்டிருந்தவனும் சுகுமாரனுக்குச் சளைத்தவனாகத் தெரியவில்லை.

சைனா பஜாருக்கு வந்து அங்குள்ள ஜனநெரிசலுக்குள் புகுந்து அதிக தூரம் நடந்து விட்ட சுகுமாரன், சற்றுநேரத் தில் பின்னால் திரும்பிப்பார்த்தான். அவனுக்கு இப்போது தான் அதிக ஆச்சரியமாயிருந்தது, இவ்வளவு தூரம் தாக் காட்டியும் பின்னால் வரும் விடாக்கண்டன் தொடர்ந்து வருவது யாருக்குமே ஆச்சரியமாய்த்தானிருக்கும். சட் டென்று சுகுமாரனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அரு கில் நின்று கொண்டிருந்த டாக்ஸி காரை அமர்த்திக் கொண்டு மௌண்ட் ரோடை நோக்கி விரைந்தான். காரில் செல்லும்போது அவன் பின்னால் திரும்பிப்பார்க்கவே யில்லை. அவன் அவ்வளவு புத்திசாலித்தனமாகத் தன்னைப் பின் தொடர்ந்து வரமாட்டான் என்பது சுகுமாரனுக்குத் தெரியும். எனவே, ரௌண்ட் டானாவில் டாக்ஸி வந்து நின்றதும் சர்வ அலட்சியமாகக் காரைவிட்டு இறங்கினான். அதே நேரத்தில் அவனுக்குப் பின்னால் சிறிது தூரத்தில், கார்க் கதவு ஒன்று 'டப்' பென்று சாத்தப்படும் சப்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தான். அவ்வளவுதான்! உண்மை யில் சுகுமாரன் பயத்தால் ஆடியே போய் விட்டான். அவனை அந்த ஆசாமி இன்னும் பின் தொடர்ந்து கொண்டு தானிருந்தான். சுகுமாரனுக்கு வேறு ஒன்றும் தோன்ற வில்லை. எதிரேயிருந்த பெரிய துணிக் கடைக்குள் சரசர வென்று புகுந்து விட்டான். உள்ளே சென்றதும், கண்ணாடிக் கதவுகள் வழியாக வெளியே பார்த்தான். சிக ரெட் ஒன்றை ரசித்துப் புகைத்தவண்ணம் அந்த ஆள் நின்று கொண்டிருந்தான். கடைக்காரரை யணுகித் தன்னை அறிமுகம் செய்து கொண்டு, அதற்கான அத்தாட்சி யையும் காட்டினான். அவன் வேண்டுகோளின்படி அவ னுக்கு எல்லா ஒத்தாசைகளையும் செய்து கொடுத்தார் கடைக்காரர். அடுத்த பத்து நிமிஷத்துக்கெல்லாம் சுகு மாரன் தன்னை வெகுவாக மாற்றிக் கொண்டு வந்தான். மிக மிக மெல்லிய துணியால் கச்சம் கட்டி, வாயில் ஜிப்பா ஒன்றை அணிந்திருந்தான். வட நாட்டு ஸேட்டுகளைப் போல தலையில் ஒரு குல்லாய் வேறு இருந்தது. அம்சமான கருப்புக் கண்ணாடி இத்யாதி அலங்காரங்களுடன் கடையை

விட்டு வெளியே வந்த சுகுமாரன், விறுவிறுவென்று நடந்து சென்று எதிர் சாரியிலுள்ள நடைபாதையில் ஏறிக் கொண்டான். சுகுமாரனை அடையாளம் கண்டுகொள்ளாமலே அவனைப் பின்தொடர்ந்து வந்த அந்த மனிதன் பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குள் சென்று யாருடனே டெலிபோனில் பேசினன். அவன் பேசுவதை ஜாடையாகக் கவனித்தான் சுகுமாரன்.

" சின்னவனைத்தான் நான் பின்தொடர்ந்தேன். பயல் எங்கேயோ மறைந்து விட்டான். ஆனல் நான் விடப்போவதில்லை. நாளை காலை பதினேரு மணிக்கு......சபாஷ் "— இரண்டாவது முறையாக இந்த விஷயத்தைக் கேட்ட சுகுமாரன் சற்றும் தாமதிக்கவில்லை. டாக்ஸி யொன்றைப் பிடித்துக்கொண்டு கொத்தவால்சாவடியை நோக்கி விரைந்தான்.

முரளிதரன் கம்பெனிக்கு முன்னல் சுகுமாரனின் கார் வந்து நிற்பதற்கும், பீதாம்பரம் அவசர அவசரமாக அந்தக் கட்டிடத்துக்குள் புகுவதற்கும் சரியாக இருந்தது. "என்னை ஒருவன் தொடர்ந்து வந்தான் ஸார்! அவனைக் கழித்து விட்டு வர இவ்வளவு நேரமாகி விட்டது" என்று கம்மிய குரலில் கூறினன் சுகுமாரன்.

" என்னைப் பின்தொடர்ந்து வந்தவன் நான் எதிர்பார்க்காத நேரத்தில் சுட்டு விட்டான். சப்தமின்றி வெடிக்கும் துப்பாக்கி வைத்திருந்தான் அவன். கொஞ்சம் விலகியிருந்தால் விலாவில் பாய்ந்திருக்கும் குண்டு. அவன் இப்போது கூட அதோ வெளியேதான் இருக்கிறன். நாம் அவனைக் கவனிக்கக் கூடிய நிலையில் இல்லை. காலம் நம்மைத் தோற்கடித்து விடாதபடி அதை நாம் பயன்படுத்த வேண்டும். அந்தக் காலப்பேயை முறியடித்து, ஒரு அபலைப் பெண்ணைக் காப்பாற்றுவதுதான் இப்போது நம்முடைய குறிக்கோள் " என்று சொல்லிவிட்டு, கம்பெனிக்குள் சென்றர் பீதாம்பரம்.

முதலாளி மிக நல்ல மனிதர். அன்பொழுகப் பேசினர். ஆனல் துப்பறியும் நிபுணர்களுக்குத் தேவையான தகவல்களைத்தான் அவரால் சொல்ல முடியவில்லை. ஆனல், மனிதர் கொஞ்சமும் வஞ்சகமில்லாமல் சொன்னர்: " எனக்கு சகாதேவனைப்பற்றி அவ்வளவாகத் தெரியாது. ஆனல், அவன்

என்னிடம் வேலை பார்த்தவரைக்கும் ரொம்ப நல்ல பிள்ளை யாக நடந்து கொண்டான். எட்டு வருஷங்களுக்கு முன் நான் இந்தக் கம்பெனியை பொன்னம்பலம் பிள்ளையிட மிருந்து வாங்கினேன். அவர் வீட்டு வேலைக்காரனாக இருந் தான் சகாதேவன். கம்பெனியை விற்றதோடு, அவனையும் கம்பெனியில் ஒரு வேலையாளாகச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார் பொன்னம்பலம் பிள்ளை" என்றார் கம்பெனி முதலாளி.

"அதற்கு முன்பு அவன் எப்படிப்பட்டவன் என்றெல் லாம் உங்களுக்குத் தெரியாது; இல்லையா?" என்று ஆவ லோடு கேட்டார் பீதாம்பரம்.

"தெரியாது. பொன்னம்பலம் பிள்ளையே அவனைச் சிபாரிசு செய்ததால் அவன் பூர்வீகத்தை யெல்லாம் விசாரிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆமாம்... சகா தேவன் தற்கொலை செய்து கொண்டான் என்று இன்று காலைப் பேப்பரில் படித்தேனே... நீங்கள் இப்போது அவனைப் பற்றி எதற்காக விசாரிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நான் போலீஸைச் சேர்ந்தவன். சகாதேவன் தற் கொலை செய்யவில்லை; கொலை செய்யப்பட்டிருக்கிறான் என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம்" என்றார் பீதாம்பரம்.

"சகாதேவன் யாருடனும் விரோதம் பாராட்டமாட் டானே. அவனைக் கொலை செய்யுமளவுக்கு அவனுக்கு விரோதிகள் இருக்க முடியாது" என்று தீர்க்கமாகச் சொன் னார் முதலாளி. இதற்குமேல் விவரம் சொல்ல பீதாம்பரத் துக்கு இஷ்டமில்லை. ஆகவே, பேச்சை வேறு வழியில் திருப்பி விட்டார்.

"பொன்னம்பலம் பிள்ளை உங்களுக்கு எதற்காகக் கம்பெனியை விற்றார்? பணமுடையா?" என்று கேட்டார்.

"அவருக்கென்ன பணமுடை? கோடீஸ்வரனாயிற்றே அவர். அவருக்கு ஒரு அழகான தம்பி வந்து வாய்த்தான். அவன் ஆயிரத்தைக் காலே மாகாணியாக்கும் அசகாய சூரன்! பயல் போன போக்கு அவருக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. ஆகையால், கம்பெனியை விற்று விட்டார். அவருக் கும் வயதாகிவிட்டது. தன்னால் கம்பெனியைக் கவனிக்க முடியாது, தம்பியும் ஒழுங்காக இருக்க மாட்டான் என்று

தெரிந்த பிறகு தான் விற்ருர். தாய் தந்தையர் தம்பிக்காரனுக்கு இரண்டு வயதாயிருக்கும்போதே இறந்து விட்டார்கள். பொன்னம்பலம் தான், அவர் தம்பி சுப்பா மணியைக் கண்ணுக்குக் கண்ணுக வளர்த்தார், படிக்கவைத் தார். பயலுக்கு ஒரு அட்சரம் கூட வரவில்லே. கம்பெனி யில் விட்டுவைத்தார். வளேயாக் கழியாக நாலுபேருடன் சுற்றுவதில் தான் அவன் விருப்பம் கொண்டிருந்தானே தவிர, வேலேயில் அவனுக்குக் கவனம் செல்லவில்லே. வயதும் ஏறிக்கொண்டே சென்றது. கடைசியில் ஒரு பிடாரியைப் பிடித்து அவனுக்குக் கட்டிவைத்தார். இதற்குப் பிறகு தான் பொன்னம்பலம் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டார். தம் மனேவி இறந்தபிறகு, சுடரிலா மனேபோல இருந்த தம் வீடு, தம் தம்பி மனேவி வந்தபிறகு மங்கலமாகக் காட்சியளிக் கும் என்று இறுமாந்திருந்த அவர் எண்ணத்தில் அவள் மண்ணேப்போட்டு விட்டாள். தம்பியும் தம்பி மனேவியும் இப்படி ஊதாரிகளாய்ப் போனதில் அவருக்கு ரொம்ப வெறுப்பாகி விட்டது. தாங்கள் இருந்த வீட்டை மட்டும் தம்பி பெயருக்கு எழுதிவைத்தார். கம்பெனியை விற்ற அடுத்த மாதமே அவரும் இறந்து விட்டார்” என்று பெரிய சரித்திரமே சொன்ஞர் முதலாளி.

“அப்படியாளுல் பொன்னம்பலம் தம் சொத்துக்களே யார் பெயருக்கு எழுதிவைத்தார்?” என்று ஆவலோடு கேட் டார் பீதாம்பரம்.

“அது அவ்வளவாக எனக்குத் தெரியவில்லே.”

“இப்போது சுப்பாமணி அந்த வீட்டில்தானே இருக் கிருன்? அவனேப் பார்க்கலாமா?”

“எமலோகத்தில் தான் அவனேப் பார்க்க முடியும். அந்தக் கண்ணராவியையும் கொஞ்சம் கேட்டு விட்டுப் போங்கள். போனவருஷம் தான் அது நடந்தது. உல்லாசப் படகில் இவன் மட்டும் ஏறி நடு ஆற்றுக்குள் போய்க் குதி போட்டிருக்கிருன். படகு கவிழ்ந்து தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டான். இப்போது அவனுக்கு வந்து வாய்த்த பிடாரிதான் அந்த வீட்டிலிருக்கிருள். கட்டிய புருஷன் இறந்து விட்ட கவலே கூட அவளுக்கு இல்லே, அரபிக் குதிரை மாதிரி கடைத் தெருவில் நடந்து போகிருள்.

நேற்றுக் கூடப் பார்த்தேன்" என்று சொல்லி நிறுத்தினர்.

"சுப்பாமணியின் மனைவி மட்டுமா அந்த வீட்டிலிருக்கிருள்? வருமானமெல்லாம் எப்படி?" என்று கேட்டார் பீதாம்பரம்.

"அவளுடன், அவள் தங்கை ஒருத்தியும் இருக்கிருள். அவளுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை போலிருக்கிறது. சுப்பாமணிமேல் பொன்னம்பலம் இன்ஷ்யூர் பண்ணியிருந்தார். அந்தப் பணம் கிடைத்தது. அதை வைத்துத் தான் அவன் மனைவி ஜீவியம் நடத்துகிருள்" என்று சொல்லி விட்டு, பொன்னம்பலத்தின் வீட்டு விலாசத்தை எழுதிக் கொடுத்தார் முதலாளி. அதைப் பெற்றுக் கொண்ட பீதாம்பரம் எதையோ கம்பெனி முதலாளியிடம் விண்ணப் பிக்கத் தயங்குபவர் போல முகத்தை வைத்துக் கொண்டார். ஆனல் சிறிது நேரத்திலேயே சமாளித்துக் கொண்டு, "உங்கள் கம்பெனியின் பின்வாசல் வழியாக நாங்கள் போகவேண்டும்" என்ருர்.

"இதற்குத்தான இப்படித் தயங்குகிறீர்கள்? தாராள மாகப் போங்களேன்" என்று கூறினர் கம்பெனி முதலாளி.

முரளிதரன் கம்பெனி முதலாளி கொடுத்த முகவரிப் படி பொன்னம்பலம் பிள்ளையின் வீடு இருக்கும் புதுத் தெருவுக்குள் நுழைந்தனர் துப்பறியும் நிபுணர்கள் இருவரும். விசாலமான திறந்தவெளிக்கு நடுவில் கட்டப்பட்டிருந்த பொன்னம்பலம் பிள்ளையின் அந்த வீடு, அவருடைய பண மதிப்பை எடை போட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. காம்பவுண்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே செல்ல முயற்சித்த பீதாம்பரம் ஒருமுறை தெருவில் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டார். சம்சயப்படும்படியாக யாரையும் காணேம். காம்பவுண்டுச் சுவர் ஓரமாக கரிய நிறத்தில் ஒரு மோட்டார் வான் நின்று கொண்டிருந்தது. அது நிச்சயமாக சுப்பாமணியின் மனைவிக்குச் சொந்தமானதாக இருக்காது என்று உணர்ந்துகொண்ட பீதாம்பரம் விறு விறுவென்று உள்ளே சென்று சாத்திக் கிடந்த கதவைத் தட்டினர். சிறிது நேரத்தில் இடப்புறமிருந்த ஜன்னலின் திரையை விலக்கிக் கொண்டு ஒரு பெண் துப்பறியும் நிபுணர்கள் இருவரையும் பார்த்தாள். அடுத்தபடியாக,

"நீங்கள் யார்?" என்று கேட்டாள். அவளுக்குச் சுமார் பதினெட்டு வயதிருக்கும் என்று மதிப்பிட்டார் பீதாம்பரம். அவள்தான் சுப்பாமணி மனைவியின் தங்கை என்றும் புரிந்து கொண்டார்.

"சுப்பாமணியுடைய மனைவியைப் பார்க்க வேண்டும்" என்று அடக்கமாகக் கூறினார் பீதாம்பரம்.

"கொஞ்சம் இருங்கள். அக்கா! அடியே சாரதா! இங்கே ஓடிவா, உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க" என்று அந்த வீடே இரண்டுபடும்படியாகக் கதறினாள் அந்தப் பெண். சிறிது நேரத்தில் ஒரு பெண்மணி கதவுக்கு வெளியே தலையை நீட்டினாள். அவளுக்கு மிஞ்சி மிஞ்சியிருந்தால் இருபத்தாறு வயதிருக்கும். நெற்றியில் திலகமில்லை. கழுத்து வெறுங் கழுத்தாயிருந்தது. இதிலிருந்து அவள்தான் சுப்பாமணியின் மனைவி என்பதை யூகித்துக்கொண்டார்கள் துப்பறியும் நிபுணர்கள்.

"அம்மா! உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்" என்று மிகப்பணிவாக விண்ணப்பித்துக்கொண்டார் பீதாம்பரம்.

"உள்ளே வந்து உட்காருங்களேன்" என்று அரைகுறை மனசோடு வரவேற்றாள் சாரதா.

உள்ளே சென்று உட்கார்ந்து கொண்டதும், "சகாதேவன் நேற்று தற்கொலை செய்து கொண்டான் என்று பேப்பரில் படித்திருப்பீர்கள்......" என்று இழுத்தார் பீதாம்பரம்.

"யாரு, இங்கே வேலை செய்தானே அந்த சகாதேவனா? எனக்குத் தெரியாதே, தற்கொலை செய்துக்கிற அளவுக்கு அந்த ஜடத்துக்கு என்ன வியாகூலம் வந்தது?"

"அவன் தற்கொலை செய்துகொண்டான் என்று தான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் அவனை யாரோ கொலை செய்திருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்."

"அப்படியானால் நீங்கள் போலீஸைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லுங்கள். ஸார்! தயவு செய்து எங்களை இதில் மாட்டி விடாதீர்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம்."

“ அதெல்லாமில்லையம்மா. சகாதேவன் எப்படிப்பட்டவனென்று நீங்கள் சொல்லவேண்டும். அவனைப்பற்றிய விவரம் தெரிந்து கொள்ளத்தான் வந்திருக்கிறோம். இதனால் உங்களுக்கு ஒரு இடைஞ்சலும் வராது.”

“எஜமான விஸ்வாசம் அவனுக்கு ரொம்ப ஜாஸ்தி. அதிலும் என்னையும் என் கணவரையும் பற்றி அத்தானிடம் எவ்வளவு கோள் சொன்னாலும் அவனுக்கு வாய் வலிக்காது.”

“ இதைத் தவிர அவனைப் பற்றி வேறு ஏதாவது தகவல் சொல்ல முடியுமா ?”

“ வேறு எனக்கு ஒன்றும் தெரியாது ”.

“ அது சரி......உங்கள் கணவர்......”

“ அதெல்லாம் உங்களுக்கெதற்கு? அவர் விதி அந்த மாதிரி சாக வேண்டுமென்றிருந்தது. என் விதி நான் இந்த மாதிரியெல்லாம் அழுந்தவேண்டுமென்றிருக்கிறது” என்று படபடவென்று பேசினாள் சாரதா.

“ உன் அத்தான் உன் புருஷனுக்காக ஒன்றும் எழுதி வைக்கவில்லையா என்ன ? ”

“ என்னத்தை எழுதி வைத்தார் ? இந்த வீட்டை எழுதி வைத்தார்.”

“ அப்படியானால் அவர் சொத்தெல்லாம் ?”

“ அதற்குத்தான் அவருக்கு ஒரு பெண் இருக்கிறதே.”

“ அடேடே ! பொன்னம்பலத்துக்குக் குழந்தைகள்கூட உண்டா என்ன ?”

“ ஒரே ஒரு பெண் இருக்கிறாளாம். ”

“ என்ன ‘ இருக்கிறாளாம் ’ என்கிறாய் அம்மா ?”

“ நான் அவளை இதுவரை பார்த்ததேயில்லை. அவளுடைய நாலாவது வயசிலேயே தாயைத் தூக்கி முழுங்கி விட்டாள். அதோடு ஏதோ ஒரு கான்வென்டில் படிப்பதற்குச் சேர்த்தார்கள். அதிலிருந்து அவள் அடிக்கடி இங்கு வருவதில்லை. நான் இந்த வீட்டுக்கு வந்த பிறகு அவள் வரவேயில்லை ”.

“ அப்படியா ? அவள் இப்போது எங்கே யிருக்கிறாள் தெரியுமா ?”

"படித்து விட்டு நர்ஸாகி வடநாட்டுக்குப்போயிருந்தாள். இப்போது இங்கேதான் வேலை பார்க்கிருளாம். அவளுக்கு நாளை மறுதினத்தோடு மைனர்காலம் முடிகிறதாம். சொத்து கூட நாளை மறுதினம் அவள் ஆட்சிக்கு வருகிறதாம்" என்று வெறுப்புத் தொனிக்கக் கூறினுள் சாரதா.

இந்தச் செய்தியைக் கேட்டதும் ஏனே, பீதாம்பரத்தின் இதயம் ஆனந்தக் கூத்தாடியது. சுகுமாரனுக்குக்கூட நம்பிக்கை துளிர்த்தது. மேற்கொண்டும் அதைப்பற்றிப் பேச்சைக் கிளப்பினுல், சந்தேகத்துக்கிடமாகும் என்று எண்ணிய பீதாம்பரம், பேச்சை வேறு புறம் திருப்பினுர்.

"அம்மா! இன்னும் ஒரு விஷயத்தை நீ சொல்ல வேண்டும். சகாதேவன் இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்னுல் வேறு எங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்தானென்று சொல்ல முடியுமா?" என்று அமரிக்கையாகக் கேட்டார் பீதாம்பரம்.

"ஏன்? சுருட்டு முத்துசாமி பிள்ளையிடம் தான் வேலை பார்த்தான்" என்ருள் சாரதா.

"யார்? சுருட்டு வியாபாரி முத்துசாமிப் பிள்ளையிடமா?" என்று கேட்டார் பீதாம்பரம். ஆமாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினுள் சாரதா. அதற்குமேல், சாரதா இலைபோட்டுச் சாப்பிடச் சொன்னுலும் பீதாம்பரம் தங்குவாரா என்ன? விடை பெற்றுக் கொண்டு சுகுமாரனுடன் கிளம்பினுர்!

ஐந்தாறு வருடங்களுக்கு முன் பீதாம்பரம் லட்சாதிபதி முத்துசாமி பிள்ளையைப் பார்த்திருக்கிருர். அப்போதிருந்ததைவிட அதிகமாக மாறியிருந்தார் முத்துசாமி. கிழட்டு முத்திரை அவருடைய மேனியெங்கும் பலமாக விழுந்திருந்தது. அடர்ந்த புருவ மயிர்களுக்குள்ளே இரண்டு கோலிக் குழிகள் போல விழிப்பள்ளம் தெரிந்தது. அதற்குள்ளிருந்த முத்துசாமியின் சக்தியற்ற கண்ணின் கருமணிகள் வந்திருந்தவர்களைக் கூர்ந்து கவனித்தன.

பீதாம்பரம் பேச்சை ஆரம்பித்தார்: "நான் இப்போது வந்திருப்பது சகாதேவனைப் பற்றி உங்களிடம் ஏதாவது விஷயம் தெரிந்து போகலாம் என்றுதான்" என்ருர்.

இதைக் கேட்டதும் ஒருமாதிரியாக முகத்தை வைத்துக் கொண்ட கிழவர், சிறிது நேரத்திற்குப் பிறகு "பிறவி நொண்டிக்கு மட்டை வைத்துக் கட்டினுல் சரியாகுமா? அவன் என்ருவது இப்படிப்பட்ட கதிக்கு வருவான் என்று எனக்குத் தெரியும். இன்று பேப்பரில் படித்ததும் அதைத் தான் நினைத்தேன்" என்று பீதாம்பரத்திடம் கூறினுர்.

—இந்தத் தகவல் துப்பறியும் நிபுணர்கள் இருவருக் குமே ஆச்சரியத்தைக் கொடுத்து விட்டது,

"என்ன சொல்கிறீர்கள்?" என்று புரியாதது போலவே கேட்டார் பீதாம்பரம்.

"என்ன சொல்ல? என்னிடம் தான் அவன் முதலில் வேலைக்குச் சேர்ந்தான். மனிதனுக்கு என்னென்ன குணமெல் லாம் இருக்கக் கூடாதோ, அதையெல்லாம் அவன் வலியச் சென்று படித்துக்கொண்டான். அவனை எவ்வளவோ கட்டுப் படுத்திப் பார்த்தேன். முடியவில்லை, கடைசியில், பொன்னம் பலம் வந்து, தன்னிடம் அவனை ஒப்படைத்து விடும்படியும், தான் அவனைத் திருத்தி விடுவதாகவும் கூறினுர். அவரிடம் போனபிறகு கொஞ்சநாள் கிறுக்குத்தனம் பண்ணினுன். அப்போது மதுவிலக்கு இல்லாத காலம். கண்மண் தெரியா மல் குடித்து விட்டு ஊர்ச் சண்டை யெல்லாம் வாங்கிக் கொண்டு பொன்னம்பலத்திடம் வந்து சேருவான். சில சம யங்களில் போலீஸாரிடம் சிக்கிக்கொண்டு ஜெயிலில் கிடப் பான். அப்போதெல்லாம் பொன்னம்பலத்தின் வக்கீல் அனந்தராமன் அவனுக்காக வாதாடி அழைத்துக் கொண்டு வருவார். அனந்தராமனுக்கு சகாதேவன் மேல் எப்படியோ ஒரு பிரியம் இருந்தது. அவனும் வக்கீலுக்கு ஒரு தனி மரி யாதை வைப்பான். நாளடைவில் சகாதேவனைப் பரம யோக்கியனுகத் திருத்தி விட்டார் அனந்தராமன். கடைசி வரை அப்படியே நல்லவனுக இருப்பான் என்று எண்ணி னேன். இப்போது இப்படியாகிவிட்டது" என்று சொல்லி விட்டு நிறுத்தினுர் கிழவர். பழுத்த உடல்; ஆகவே தொடர்ந்து பேசியதால் மூச்சு வாங்கியது. இதற்குள் அவ ருடைய மனைவி மங்களம்மாள் அங்கு வந்தாள். அந்தச் சமயம் பார்த்து பீதாம்பரம் பேச்சைத் திருப்பினுர்.

"பொன்னம்பலம் பிள்ளை குடும்பத்துக்கு அவன் ரொம்ப விஸ்வாசமாக உழைத்திருக்கிறுன் இல்லையா?

அவன் உயிரோடு இருந்தால், நாளை மறுதினம், எஜமான் மகளுக்குக் கிடைக்கும் சொத்தில் அவனுக்கும் கொஞ்சமாவது கிடைக்கும் '' என்றுர் பீதாம்பரம்.

" அடடே ! இவ்வளவு விஷயம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே ! பேஷ் !" என்றுர் கிழவர்.

" சாந்தா காலையிலே இங்கே வருகிறதாக இருந்தாள். ஏதோ அவசரமாக ஆஸ்பத்திரியிலே வேலை வந்துவிட்டதாம், சாயங்காலம் வர்ரதாக கொஞ்சம் முந்தித்தான் போன் பண்ணிஞ" என்று வாத்ஸல்யத்தோடு கூறிஞள் முத்துசாமி பிள்ளையின் மனைவி. கணவனும் மனைவியும் எதிராளியைப் பேசவிடக் கூடாது என்று முடிவு செய்து விட்டார்களோ, என்னவோ, மங்களம்மாளைத் தொடர்ந்து அவள் கணவர் பேச ஆரம்பித்தார். பீதாம்பரமும் அதைத் தானே எதிர் பார்க்கிறுர் !

" பாருங்கள், குழந்தை நேற்று மயிரிழையில் தப்பிஞள் " என்று பயந்தபடி கூறிஞர் கிழவர்.

" யார் ? " என்று கேட்டார் பீதாம்பரம்.

" சாந்தாவைத்தான் சொல்லுகிறேன். பஜாரில் ஏதோ சாமான் வாங்கப் போயிருந்தாளாம். தெருவைக் கடக்கும்போது வேகமாக ஒரு கார் வந்து அவள் மீது ஏறிக் கொன்றுவிடப் பார்த்ததாம்."

" காரா ?".

" அது கார் கூட இல்லை. மோட்டார் வாஞம்."

" என்ன நிறம் ?"

" கருப்பு நிறம் என்று சொன்ஞள்."

— இதைக் கேட்டதும் 'சுருக்' கென்றது பீதாம்பரத்துக்கு. சாரதாவைப் பார்க்கப் போகும்போது, வாசலில் வெளிச் சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்த கரிய நிற மோட்டார் வான்தான் உடனே அவர் கவனத்துக்கு எழுந்தது. அதைத் தொடர்ந்து இன்ஞெரு சந்தேகமும் வந்தது. இந்நேரத்தில் எதையும் போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாமென்ற எண்ணத்தில் கிழவரின் பேச்சைக் கவனிக்க ஆரம்பித்தார்.

“கடவுள் புண்ணியத்தில் எவனாவது நல்ல பையன் அவளுக்குக் கணவனாக வரவேண்டும், இந்த மாதிரியெல்லாம் ஆபத்து வராமல் அவளைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றக்கூடியவனாகவும் இருக்க வேண்டும்” என்று கிழவரின் மனம் பேராசைப்பட்டது.

“இப்போது சொத்துக்குக் கார்டியன் நீங்கள்தானே?” என்று கேட்டார் பீதாம்பரம்.

“இல்லை, இல்லை. அவர்கள் குடும்ப வக்கீல் அனந்தராமன் தான் சாந்தாவுக்கு கார்டியனாக இருக்கிறார். நாளை மறுதினத்தோடு பெரிய பொறுப்பு ஒன்று விடப்போகிறது என்று அவர் இப்போதே சந்தோஷப்பட ஆரம்பித்து விட்டார்.”- பேச்சு ஒரு மாதிரியாக முடிவுக் கட்டத்துக்கு வந்ததும், முத்துசாமி பிள்ளையிடம் விடைபெற்றுக்கொண்ட பீதாம்பரமும் சுகுமாரனும், நேராக வக்கீல் அனந்தராமனின் வீட்டை நோக்கி விரைந்தனர். வழிநெடுக கரிய நிற மோட்டார் வானின் எண்ணம்தான் பீதாம்பரத்தின் மனதில் கிடந்து அழுத்திக் கொண்டேயிருந்தது.

“சுகுமார்! ஒரு விஷயத்தைக் கவனித்தாயா? நேற்று மாலை சாந்தாவைக் கொல்ல முயற்சித்திருக்கிறார்கள். அதுவும் எப்படி? மோட்டார் வானை ஏற்றிக் கொல்லச் சதி செய்யப்பட்டிருக்கிறது. அது முடியாமற் போய்விட்டது. அதே மாதிரி கருப்பு நிற வான் ஒன்று சுப்பாமணியின் மனைவியை நாம் காணப் போகும்போது, அவர்கள் வீட்டுக்கு வெளியே நின்று கொண்டிருந்தது. சாந்தாவைக் கொல்ல யாரோ சதி செய்கிறார்கள் என்று நாம் ஏன் சந்தேகப்படக் கூடாது? அப்படிச் சதி செய்பவன் சுப்பாமணியாகவே இருக்கலாமல்லவா?” என்று கேட்டார் பீதாம்பரம். இதைக் கேட்டதும் சுகுமாரனுக்குத் தூக்கி வாரிப்போட்டு விட்டது.

“சுப்பாமணியா? அவன் தான் படகு கவிழ்ந்து தண்ணீருக்குள் மூழ்கிச் செத்து விட்டானே!” என்றான் சுகுமாரன்.

“அப்படித்தான் சொல்லுகிறார்கள். ஆனால் ஊரார் அப்படி நம்பும்படி செய்து விட்டு அவன் வேறு எங்காவது இதுவரை தலைமறைவாக இருந்திருக்கலாமல்லவா? நான்

எதற்காக இப்படிச் சந்தேகப்படுகிறேனென்ருல், சாந்தாவுக்கு அந்த அதிர்ஷ்டம் வருவது கண்டு மனம் சகியாத உயிர் ஒன்றே ஒன்று தான் இருக்க முடியும். அவன் தான் சுப்பாமணி. ஆகவே அவளைக் கொன்று விட்டு. . .'' என்று சொல்லி முடிப்பதற்குள், சுகுமாரன் ஏதோ பேச வாயெடுத்தான். இதற்குள், வக்கீலின் வீடு வந்து விட்டது. பீதாம்பரம் சொல்ல வந்ததைச் சொல்லிமுடித்து விட்டார். "சாந்தா செத்து விட்டாளானுல், சுப்பாமணி துணிந்து வெளியே வருவான், 'நான் செத்தது பொய். நான் தண்ணீரில் அடித்துப் போகப்பட்டு, இவ்வளவு நாளாக வேறு ஊரிலிருந்தேன்' என்று மழுப்பக் காரணமிருக்கிறது'' என்ருர்.

5

சூழ்ச்சிக்காரர்களின் விருந்து!

வக்கீல் அனந்தராமனுடைய வீட்டை நெருங்கியதும் கைக்கடிகாரத்தைப் பார்த்தார் பீதாம்பரம். மணி சரியாக ஐந்தாகி விட்டது. இதுவரை, அந்த வழக்குக்காக அவர்களிருவரும் செலவிட்ட நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தார். முதல் நாள் காலை பதினெரு மணியிலிருந்து இதுவரை முப்பத்தோரு மணி நேரமாக அவர்கள் உழைத்திருக்கிருர்கள். எதிரிகளால் ஒன்றுக்கு இரண்டு முறை அறிவிக்கப்பட்டபடி மறுநாள் காலை பதினெரு மணி வரை அதாவது இன்னும் பதினேழு மணி நேரம் உழைக்க வேண்டும் என்று நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டார் பீதாம்பரம். அவருடைய வாழ்நாளில் இம்மாதிரி இரண்டு நாள் தவணையைக் கொடுத்து அந்தக் குறுகிய காலத்துக்குள், சமுத்திரம் போல இருக்கும் சென்னை நகருக்குள் யாரோ ஒரு முன்பின் தெரியாத பெண்ணைக் காப்பாற்றும் பொறுப்பு ஏற்பட்டதேயில்லை!

துப்பறியும் நிபுணர்கள் இருவரையும் வாய் நிறைய வரவேற்ருர் வக்கீல் அனந்தராமன். பெரிய மனிதத் தோரணையில் அவருடைய முகக்களை இருந்தது, உயரமாக, அதற்கேற்ற சதைப் பிடிப்போடு இருந்தார். வயது ஏறக்குறைய ஐம்பத்தைந்து இருக்கலாம். என்ருலும் அப்படி மதிப்பிட

முடியாது. அவரை முதலில் யாரும் பார்ப்பவர்கள் நாற்பது வயதுக்குத் தான் மதிப்பார்கள்.

சாந்தாவின் தந்தை ஸ்தானத்தில் இருப்பவர் வக்கீல் அனந்தராமன். அவளுடைய வாழ்வுக்கு வழிவகுக்கப் போவதும் அவர்தான். இவ்வளவு பெரிய பொறுப்புகளை சாந்தாவுக்காக வகித்து வரும் வக்கீலிடம், நடந்தவைகளைச் சொல்லாமலிருந்தால் நன்றாயிருக்காது என்று எண்ணிய பீதாம்பரம், முன்தினம் காலையில் சகாதேவன் தமக்கு போன் செய்ததிலிருந்து எல்லா விவரங்களையும் கூறினார். எல்லாவற்றையும் ஒன்று விடாமல் வெகு அமைதியாகவே கேட்டுக் கொண்டிருந்த வக்கீல் அனந்தராமன், கடைசியில் பேச ஆரம்பித்தார்.

"இதுவரை சாந்தாவுக்கு வராத ஆபத்து இப்போது வரப்போகிறது என்று நீங்கள் கூறுவது எனக்கு ஆச்சரியமாய்த் தானிருக்கிறது. இருந்தாலும் நீங்கள் சொல்லிய விவரங்களைப் பார்த்தால் அதை நம்பவும் வேண்டியிருக்கிறது. ஒன்று கவனித்தீர்களா?" என்று கேட்டு விட்டு கனைத்துக் கொண்டார் அனந்தராமன். வக்கீலல்லவா அவர்! ஆகவே தம்மால் யூகிக்க முடியாத ஏதாவது புது விஷயத்தைக் கூறுவார் என்று ஆவலோடு எதிர்பார்த்தார் பீதாம்பரம்,

"கருப்பு நிறமுள்ள மோட்டார் வான் ஒன்று சாந்தாவைக் கொல்ல முயன்றது. அதே மாதிரி கார் ஒன்று சுப்பாமணியின் வீட்டுக்கு வெளியே தெருவில் நின்று கொண்டிருந்தது. இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது" என்று சொல்லி நிறுத்திவிட்டு துப்பறியும் நிபுணர்கள் இருவரையும் பார்த்தார் வக்கீல். இதைக் கேட்டதும் பீதாம்பரத்தின் முகம் பிரகாசமடைந்தது.

"நானும் அந்த விஷயத்தைத்தான் அதிகமாக யோசித்தேன். சுப்பாமணி படகு கவிழ்ந்து தண்ணீருக்குள் மூழ்கி இறந்து விட்டதாக உலகத்துக்குக் காட்டிக் கொண்டு வேறு எங்கேயோ தான் அவன் ஒளிந்திருக்க வேண்டும். சாந்தாவைத் தீர்த்துக் கட்டிவிட்டால், அவன் வேறு ஏதாவது காரணத்தைச் சொல்லிக் கொண்டு, வெளியே வந்து அவளு

டைய சொத்துக்கு உரியவனுகவும் முடியும்" என்ருர் பீதாம்பரம்.

"அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். சாந்தாவுக்கு ஆபத்து என்று நீங்கள் இவ்வளவு தூரம் முயற்சியெடுத்துக் கொண்டு உழைப்பதாலேயே இதைச் சொல்லுகிறேன். உண்மையிலேயே அவளுக்கு ஆபத்து வரப்போகிறது என்பதை என்னுல் நம்ப முடியவில்லை. எதற்கும் நாம் ஜாக்கிரதையாய் இருப்பது நல்லதுதானே. நானும் சந்தாவிடம் சொல்லுகிறேன்" என்று ஆழ்ந்து பார்த்துக்கொண்டு கூறினுர் அனந்தராமன்.

"பாவம், சகாதேவன் சாந்தாவுக்காகத் தன் உயிரையே இழந்து விட்டதுதான் பரிதாபம். பேப்பரில் பார்த்தீர்களல்லவா ?" என்று கேட்டார் பீதாம்பரம்.

"நீங்கள் தான் அதைப்பற்றிக் கொஞ்சம் முன்னுல் சொன்னீர்களே. அவன் ரொம்ப நல்லவன் மிஸ்டர் பீதாம்பரம். பொன்னம்பலம் பிள்ளை அவனைத் தம் குழந்தையைப் போல பாவித்தார். அவன் தான் சாந்தாவை தோளில் சுமந்து வளர்த்தவன். இருக்காதா பாசம் ?" என்ருர் வக்கீல். இதற்குப் பிறகு மூவரும் ஒன்றும் பேசவில்லை. நிலவியிருந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு வக்கீல்தான் மீண்டும் பேச ஆரம்பித்தார்,

"இந்த விஷயத்தைச் சொல்லத் தான் சகாதேவன் நேற்றுக் காலை இரண்டு மூன்று தடவை என்னைப் பார்க்க வந்திருக்கிருன் போலிருக்கிறது ; துரதிருஷ்டவசமாக நான் அந்த நேரத்தில் வெளியே போயிருந்தேன். என்னிடம் சொல்ல முடியாமல் போகவேதான் உங்களிடம் வந்து சொல்லியிருக்கிருன்" என்ருர். அவனுக்காக அனுதாபப் படுவதைப்போல முகத்தை 'உம்' மென்று வைத்துக் கொண்ட வக்கீல் இதற்குப் பிறகு பேசவில்லை. நேரத்தை வீணுக்க விரும்பாத பீதாம்பரம் வக்கீலிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினுர். நேரே, சாந்தாவைத்தான் போய் பார்க்கப் போவதாகக் கூறினுர் பீதாம்பரம்.

அவர்கள் இருவரும், கேட்டை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள நர்ஸ்களின் விடுதிக்கு வந்து சேரும்போது

மணி ஆறு ஆகி விட்டது. 'இன்னும் பதினாறு மணி நேரம்' என்று அவர் மனம் ஏகமாக அலறியது.

உள்ளே ஒரு வேலைக்காரி நின்று கொண்டிருந்தாள். அவளிடம் சாந்தாவின் அறையை விசாரித்துத் தெரிந்து கொண்டனர். அந்நேரத்தில் சாந்தா அறையில் இருக்கிறாள் என்று வேலைக்காரி கூறியதும் பீதாம்பரத்துக்கு உற்சாகம் கரைபுரண்டது.

வெகு உல்லாசமாக, சாந்தாவின் அறைக்குள் நுழைந்தார்கள் துப்பறியும் நிபுணர்கள் இருவரும். அங்கு ஒரு பெண், அப்போது தான் உடைகளை மாற்றிக் கொண்டு, சிறிய கைப் பெட்டி ஒன்றில் துணிகளை அடுக்கிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் அவள் சாந்தாவே தான் என்று முடிவு செய்துகொண்டார் பீதாம்பரம். அப்போது அவருக்கு லட்ச ரூபாய் லாட்டரிப் பரிசு கிடைத்தது போலிருந்தது. புதியவர்கள் அறைக்குள் வந்ததைக் கண்டதும் திடுக்கிட்டுப் போன அந்தப் பெண், அவர்களை ஏற இறங்கப் பார்த்தாள். அவள் மேற்கொண்டும் தங்களைப்பற்றி மோசமாகக் கற்பனை செய்து கொள்ளவேண்டாம் என்று எண்ணிய பீதாம்பரம் தங்கள் இருவரையும் அறிமுகம் செய்து கொண்டார். அவள் எங்கேயோ அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அதனால் தான் அவள் தன்னுடைய பதிலை இரண்டொரு வார்த்தைகளிலேயே முடித்துக் கொண்டு வெளியே கிளம்பத் தயாரானாள்.

"நான்தான் சாந்தா. நாளை காலை நீங்கள் வந்தீர்களானால், உங்களுடன் நான் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக்கொண்டிருக்க முடியும். இப்போது நான் அவசரமாக ஒரு இடத்துக்குப் போகிறேன்."

தாம் வந்த காரியத்தைக் கேட்காமல் அவள் வெளியே செல்வது பீதாம்பரத்துக்குப் பிடிக்கவில்லை. பொறுமையாகக் கேட்பாளானால், அவள் நிச்சயமாக வெளியே செல்லவே மாட்டாள் என்று எண்ணிக்கொண்டு பேச்சை ஆரம்பித்தார் பீதாம்பரம்.

"அதற்கில்லையம்மா, உன்னிடம் இந்த விஷயத்தை நான் சொல்லித்தானாக வேண்டும்" என்று பீடிகை போட்டார்.

"நீங்கள் என்ன சொன்னாலும் நான் இப்போது ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்க முடியாது. விருந்துக்கு வருவதாக நான் வாக்குக் கொடுத்து விட்டேன். போகாமலிருந்தால் நன்ருயிருக்காது" என்று சொல்லிக்கொண்டே அறையை விட்டு வெளியே வந்தாள் சாந்தா. அவளை, விட்டுத்தான் பிடிக்கவேண்டும் என்று உணர்ந்துகொண்ட பீதாம்பரம் சுகுமாரனுடன் அறையைவிட்டு வெளியேறினுர். எதிரிகள் ஏதோ ஒரு தந்திரம் செய்து தான் சாந்தாவை அழைக்கிருர்கள் என்பது அவருக்கு எளிதில் புரிந்துவிட்டது. சாந்தாவை அந்நேரத்தில் நிறுத்தி வைக்கவும் முடியாது; அவளிடம் விஷயத்தை எடுத்துக் கூறவும் முடியாது. ஆகவே, அவளைப் பின் தொடர வேண்டியதைத் தவிர அவருக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை.

விடுதியை விட்டு வெளியே வந்த சாந்தா சிறிது தூரம் நடந்து சென்ருள். பிறகு எதிரே வந்த, டாக்ஸி ஒன்றை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டாள். உடனே சுகுமாரன் தாவிச் சென்று டாக்ஸி ஓரமாக மறைவாக நின்றுகொண்டு சாந்தா எங்கே போகும்படி டிரைவரிடம் கூறுகிருள் என்று ஒத்துக் கேட்டான். "எக்மோர் ஸ்டேஷனுக்கு" என்று அவள் கூறியது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. இதன் பிறகு இருவரும் சிறிதும் தாமதிக்கவில்லை. தாங்களும் டாக்ஸி ஒன்றைப் பிடித்துக்கொண்டு எழும்பூர் ரயில் நிலையத்தை நோக்கி விரைந்தனர். காரில் உட்கார்ந்திருக்கும் போது பீதாம்பரத்தின் சிந்தனை எங்கெங்கெல்லாமோ சுற்றிச் சுழன்றது. முதல் நாள் சகாதேவன் அதே எழும்பூர் நிலயத்துக்குத்தான் வரச் சொன்னுன். ஆனுல், நடந்ததை இப்போது நினைத்தாலும் இதயத்தை என்னவோ செய்வது போலிருந்தது. மறுநாளும் அதே இடத்துக்கே தாம் செல்ல வேண்டி வரும் என்பதை அவர் எதிர்பார்க்கவேயில்லை. சகாதேவனுக்கு நேர்ந்த கதி சாந்தாவுக்கு ஏற்பட்டுவிடக் கூடாதே என்று அவருடைய இதயம் பிரார்த்தித்துக் கொண்டது.

டாக்ஸியை விட்டிறங்கிய இருவரும், மின்சார ரயில் நிலைய பிளாட்பாரத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றனர். மேம்பாலப் படிகளில் தாவித் தாவி ஏறும் போது, முதல் நாளும் தாங்கள் அம்மாதிரி ஏறியது பீதாம்

பரத்துக்குச் சட்டென்று கவனம் வந்தது. ஒரு மாதிரியாக பிளாட்பாரத்துக்கு வந்து சேர்ந்தனர். பீதாம்பரத்தின் கண்கள் கூட்டத்துக்குள் சாந்தா எங்கே நிற்கிருள் என்று துழாவின. தாம்பரத்திற்கு செல்லும் ரயில் நிற்கும் பிளாட்பாரத்தில் சாந்தா கைப் பெட்டியுடன் நின்று கொண்டிருந்தாள். நல்ல வேளை அந்தப் பக்கம் அதிகமாகக் கூட்டம் இல்லை என்று எண்ணிச் சந்தோஷப்பட்டுக் கொண்டார். இருந்தாலும் அவள் மேல் ஒரு கண்ணுகவே அவர் இருக்கத் தவறவில்லை. கொலை செய்வதற்கு என்று வருபவன், கூட்டத்தையெல்லாமா பார்த்துக்கொண்டிருக்கப் போகிருன் ?

சிறிது நேரத்தில் ரயில் வந்து நின்றது. சாந்தா பெண்கள் பெட்டியில் ஏருமலிருந்தது பீதாம்பரத்துக்கு ரொம்பத் திருப்தியாகிவிட்டது. வேறு ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்ட துப்பறியும் நிபுணர்கள் இருவரும் சாந்தாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி உட்கார்ந்திருந்தனர். சாந்தாவின் அழகிய தோற்றத்தையும்,அவளுடைய குழந்தை வதனத்தையும் அனுதாபத்துடனும் அக்கறையோடும் பார்த்துக்கொண்டிருந்த பீதாம்பரம் தற்செயலாகத் தம்முடைய பார்வையை வேறு பக்கம் திருப்பினுர். அவ்வளவுதான் ! அவருக்குத் தலை சுற்றியது. கண்கள் இருண்டுகொண்டு வந்தன. சாந்தாவுக்கு இடப்புறத்துப் பெஞ்சியிலிருந்த மனிதன் எதற்காக அவளை அப்படிப் பார்க்க வேண்டும் ? சேச்சே ! நல்ல பார்வையா அது? சுகுமாரனுக்கு மெதுவாக ஜாடை காட்டினுர். அவர் காட்டிய திக்கை நோக்கியதும் சுகுமாரன் தீயை மிதித்தவன் போலாகி விட்டான்.

" ஸார் ! இவன்தான் காலையில் என்னை விடாமல் தொடர்ந்து வந்துகொண்டிருந்தவன் " என்று கலவரத்தோடு கூறினுன் சுகுமாரன்.

" ஒரு வேளை நம்மைத்தான் பின் தொடருகிருஞே இப்போது? ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழத்தட்டியதைப் போல, நம்மைத் தொடர்ந்து வந்தவன், சாந்தாவையும் பார்த்துக்கொண்டான். இப்போதுதான் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும், சுகுமாரா !" என்று பீதாம்பரம் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே இவர்கள் எதிர்பாராத ஒன்று நடந்துவிட்டது. அந்த மனிதன் சுகுமாரனையும்

பீதாம்பரத்தையும் ஓரக் கண்களால் பார்த்துவிட்டு, சர்வ அலட்சியமாக சாந்தாவின் அருகில் உட்கார்ந்துகொண்டான். வெளியே லயிக்கவிட்டிருந்த தன் பார்வையைத் திருப்பி, தன் அருகில் உட்கார்ந்த நபரைப் பார்த்தாள் சாந்தா. உடனே அவளுடைய வதனம் மலர்ந்தது. இதழ்கள் புன்னகையால் விரிந்தன. துப்பறியும் நிபுணர்கள் இருவருமே இதைக் கண்டதும் திடுக்கிட்டுவிட்டனர். அந்த மனிதனும், சாந்தாவும் ஏதோ பேசிக்கொண்டார்கள். அதிக நேரமாகப் பேசினார்கள். அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது பீதாம்பரத்துக்கோ சுகுமாரனுக்கோ கேட்கவில்லை.

"விருந்து என்று சொல்லி ஏமாற்றித்தான் சாந்தாவை அழைத்துச் செல்லுகிறார்கள் சுகுமாரா? இனிமேல்தான் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்றார் பீதாம்பரம்.

"ஏன் சாந்தாவிடம் நேரில் சென்று விவரத்தைச் சொல்லிவிடலாமே."

"சேச்சே! சுத்த அபத்தம்."

"அப்படியானால் அவள் இறங்குமிடத்தில், நாம் போலீஸில் எச்சரிக்கை செய்யலாம்."

"அதற்கெல்லாம் நமக்கு அவகாசம் கொடுக்க மாட்டார்கள். நீதான் பார்த்துக்கொண்டிருந்தாயே, நேற்றிலிருந்து மூச்சு விடுவதற்கு அவகாசம் கொடுத்தார்களா?"

இதற்குமேல் இருவருமே பேசிக்கொள்ளவில்லை. ஆனால் சாந்தாவும் அந்த மனிதனும் பேசிக்கொண்டிருப்பதை வெகு கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

ரயில் தாம்பரம் நிலையத்தில் வந்து நின்றது. சாந்தாவும் அந்த மனிதனும் வண்டியை விட்டு இறங்கினர். அவர்களைத் தொடர்ந்து இறங்கிய துப்பறியும் நிபுணர்களிருவரும் கூட்டத்துக்குள் மறைந்து வெளியே வந்தனர். ஆனால் அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது ஒரு சம்பவம். ரயில் நிலையத்துக்கு வெளியே வந்த சாந்தாவும் அந்த மனிதனும் அவர்களுக்காகக் காத்துக்கொண்டு நின்ற ஒரு காரில் ஏறிக்கொண்டனர். அடுத்த கணம் அந்தக் கார் புழுதியைக் கிளப்பிக்கொண்டு வேகமாகச் சென்றுவிட்டது. இரண்டொரு நிமிஷங்களில் அவர்களின் பார்வையை விட்டும்

மறைந்து விட்டது. இன்னது செய்வது என்று அறியாமல் கையைப் பிசைந்துகொண்டு நின்றனர் சுகுமாரனும் பீதாம் பரமும். சென்னை நகரத்தைப்போல கூப்பிட்ட குரலுக்கு டாக்ஸி கார் கிடைக்குமிடமில்லை தாம்பரம். ஆகவே, சாந் தாவை ஏற்றிச்செல்லும் காரை அவர்களால் அவ்வளவு எளிதில் பின்பற்ற முடியாது. பீதாம்பரம் ஏதோ ஒரு முடி வுடன் சுகுமாரனை அழைத்துக் கொண்டு நடந்தார். கார் சென்ற திக்கிலேயே முடிந்தவரை நடப்பது என்ற மன உறுதி மட்டும் பீதாம்பரத்துக்கு இருந்தது. கடைசியில் வெற்றியும் கண்டுவிட்டார். அரை மைல் தூரம், தாம்பரத் துக்கு மேற்கே செல்லும் காட்டுப் பாதை வழியாக நடந்து கொண்டிருந்தனர். அந்த ரஸ்தாவில்தான் கார் சென்றது. எதிரில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான். அந்த ரஸ்தா ஐந்தாறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு சிறிய கிரா மத்துக்குச் செல்லுகிறதென்றும், இன்னும் அரை மைல் கழித்தால் ஒரு பங்களா இருக்கிறதென்றும் கூறினன். அதோடு அந்தப் பங்களா வாசலில் ஒரு கார் நிற்கிறது என்றும் கூறினன். அவன் சொன்னதைக் கேட்டதும் பீதாம்பரத்துக்கு இதயத்தில் பாலை வார்த்ததுபோலிருந்தது.

இருவரும் நடையை வேகமாகப் போட்டனர். பதி னைந்து நிமிஷங்களில் வழிப்போக்கன் சொன்ன பங்களாவை அடைந்து விட்டனர். வழியெல்லாம் சாந்தாவுக்கு ஏதும் ஆபத்து நேரிட்டுவிடக்கூடாதே என்று மனம் வாதித்துக் கொண்டு வந்த பீதாம்பரத்துக்கு, அந்த பங்களாவுக்குள் ளிருந்து ஒரு பெண்ணின் சிரிப்பொலியைக் கேட்டதும் தான் மனம் சமாதானம் அடைந்தது.

தலை வாசல் கதவை இரண்டு மூன்று முறை தட்டினர் பீதாம்பரம். சிறிது நேரத்தில், வேலைக்காரன் ஒருவன் வந்தான். அவனைத் தொடர்ந்து நடுத்தர வயதுள்ள ஒரு வரும் வந்தார். அவர்தான் பங்களாவின் சொந்தக்காரரா யிருக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்ட பீதாம்பரம், தங்களை அறிமுகம் செய்து கொண்டார். வீட்டுக்காரர் மலர்ந்த முகத்துடன் அவர்களை உள்ளே அழைத்துச் சென் ருர். தாம் சாந்தாவிற்கு ஒன்று விட்ட மாமா என்றும், தமக்கு அந்தச் சுற்று வட்டாரத்தில் நிலபுலன்கள் இருப்ப

தால் அங்கேயே வசிக்க வேண்டியேற்பட்டு விட்டதாகவும் அவர் கூறினர்.

பீதாம்பரம் சுற்றி வளைக்காமல் பேசினர். சாந்தாவுக்கு ஆபத்து என்று அவர் சொல்லக் கேட்டதும் சாந்தாவின் மாமாவுக்குத் தூக்கி வாரிப்போட்டு விட்டது.

“ என்ன ? சாந்தாவுக்கு ஆபத்தா ? அப்படியென்று யார் சொன்னர்கள் ? அவளுக்கு எதிராக ஒரு பயலும் ஒரு துரும்பைக்கூட இந்தக் கனகலிங்கம் இருக்கிற வரை அசைக்க முடியாது, தெரிந்து கொள்ளுங்கள். அது போகட்டும். . . . சாந்தாவைப் பின்தொடர்ந்து இங்கு வந்திருப்பதாகச் சொன்னீர்களே, சாந்தா இங்கே வந்திருக்கிருளா என்ன ?” என்று புரியாதவர் போலக் கேட்டார் அவர்.

பீதாம்பரத்துக்கு பகீரென்றது. ‘சாந்தா இங்கே வந்தாளா ?’ என்று கனகலிங்கம் தம்மிடமே எதிர்க் கேள்வி போடுவதைக் கேட்டதும் அவருக்குத் தாம் செய்து விட்ட ஒரு மகத்தான தவறு தெரிந்தது. இந்த மனிதர் சாந்தாவின் மாமா என்று இவரைத் தவிர வேறு யார் சொன்னர்கள் ? அவர் சொல்லித்தானே பீதாம்பரம் தெரிந்து கொண்டார் ? சாந்தாவையும் அவர்களிடம் சிக்க வைத்து விட்டு தாங்களும் வகை தெரியாமல் எதிரிகளிடமே மாட்டிக் கொண்டது அவருக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்து விட்டது. நளினமாகப் பேசியேதான் காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்று உணர்ந்து கொண்ட பீதாம்பரம்,

“ சாந்தா இங்கேதான் வந்தாள் என்பது என் யூகம் தான். அவள் இங்கே இருக்கிருள் என்று சொல்லவில்லையே !” என்று சொல்லிச் சமாளித்தார். அவருக்கு நன்ருகத் தெரியும், சாந்தா அந்த மாளிகைக்குள் தான் எங்கேயோ மறைத்து வைக்கப்பட்டிருக்கிருள் என்று. ஏனென்ருல், அவர் அந்த பங்களாவுக்குள் நுழையும்போது ஒரு பெண்ணின் சிரிப்பொலி கேட்டது.

“ அதுதானே பார்த்தேன். இங்கு மருந்துக்குக் கூட ஒரு பெண் கிடையாதே......நீங்கள் என்னடா என்ருல்

இப்படிச் சொல்கிறீர்களே என்று பார்த்தேன், . . . சாந்தாவைத் தேடி வந்த நீங்கள் வேறு எங்காவது முயற்சி செய்யலாமே. . . .” என்று பேச்சை இழுத்தார் கனகலிங்கம்.

“இதற்கு மேல் நாங்கள் எங்கே போய்த் தேடுவது? நாங்கள் இரவு இங்கேயே தங்கிவிடுவதில் உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபமில்லையே?”

—இதைக் கேட்டுக் கனகலிங்கம் சிறிது தயங்குவது போலிருந்தார். உடனே சமாளித்துக்கொண்டு, “பேஷாகச் செய்யுங்கள். இது உங்கள் வீடு, இதோ கொஞ்ச நேரத்தில் எல்லோருமாகச் சாப்பிடலாம். பிறகு ஹாய்யாகத் தூங்குங்கள். விடிந்ததும் சாந்தாவைத் தேடிக் கண்டு பிடியுங்கள், நானும் உங்களுடன் வருகிறேன்” என்று வாசாலகமாகப் பேசினார் கனகலிங்கம்.

சிறிது நேரத்தில் மூவரும் உணவருந்தினர். பீதாம்பரத்துக்கு மனம் ஒரு நிலையிலில்லை. ‘சாந்தா இங்குதான் ஏதோ ஓர் அறையில் அடைக்கப்பட்டிருக்கிறாள், அவளுடன் ரயிலில் வந்த முரடனும் இங்கேதான் இருக்க வேண்டும். அவன் மட்டுமென்ன, ஒரு பட்டாளமே இங்கே இருக்கலாம். யார் கண்டார்கள்?’ என்று நினைத்துக் கொண்டார்.

சாப்பிட்டானதும் தங்கள் அறைக்குச் சென்றனர் துப்பறியும் நிபுணர்கள் இருவரும். பீதாம்பரம் கதவை உட்பக்கமாகத் தாளிட்டு விட்டு தங்களுக்கு வைக்கப்பட்டிருந்த பாலைக் குடிப்பதற்காக கிளாசை வாயருகில் கொண்டு சென்றார். ஏதோ ஒரு நெடி குடலைப் புரட்டியது. உடனே கிளாசைக் கீழே வைத்துவிட்டு, சுகுமாரனைப் பார்த்தார். இதற்குள் சுகுமாரன் பாலைக் குடித்துவிட்டான்.

“சுகுமார்! பாலைப் பூராவும் குடித்துவிட்டாயே. மயக்க மருந்தையல்லவா கலந்திருக்கிறார்கள்” என்று கலவரத்தோடு கூறினார் பீதாம்பரம். அந்த நிமிஷமே கீழே சென்று கனகலிங்கத்திடம் சண்டை போடவேண்டுமென்று ஆவேசத்துடன் தாழைத் திறந்தார். ஆனால் கதவு திறக்கவில்லை. வெளிப்பக்கமாகக் கதவை யாரோ பூட்டியிருக்கிறார்கள் என்பது அவருக்கு உடனே புரிந்துவிட்டது. பின்னால் ஏதோ சப்தம் கேட்கவே, திடுக்கிட்டுப்போய்த் திரும்பிப் பார்த்தார் பீதாம்பரம். சுகுமாரனுக்கு அப்போதுதான் மயக்க மருந்து வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது.

நாற்காலியில் உட்கார்ந்தபடி தலையை இலேசாகச் சாய்த்தான். உடனே அவனருகில் ஓடி அவனுடைய தலையைத் தாங்கிக்கொண்டார் பீதாம்பரம்.

"சுகுமார்! என்னைப்பார்! நாம் சாந்தாவைக் காப்பாற்ற வந்திருக்கிறோம். கண்ணை விழித்துப் பார், சுகுமாரா! சாந்தா இங்கேதான் இருக்கிறாள்" என்று ஏதேதோ, கலவரம் கலந்த குரலில் கூறினார் பீதாம்பரம். சுகுமாரன் கண் விழித்துப் பார்க்கவேயில்லை. பச்சைக் குழந்தையைப்போல தலையைச் சொளக்கென்று சாய்த்துவிட்டான், என்ன செய்வது என்று புரியாமல் சிறிது நேரம் விழித்துக்கொண்டிருந்தார் பீதாம்பரம். திடீரென்று அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. உடனே ஜன்னல் கம்பிகளை வளைத்து வெளியே செல்லத் தமக்கு வழியை உண்டாக்கிக்கொண்டு அந்தர்த்யானமானார்! அரை மணி நேரத்தில் மீண்டும் அறைக்குள் வந்தார். சாந்தாவைக் கண்டுவிட்ட மகிழ்ச்சி அவருக்கு. சுகுமாரன் இன்னும் பழைய நிலையிலேயேதான் இருந்தான். அவனருகிலேயே உட்கார்ந்து விடுவதென்று முடிவு செய்தார் பீதாம்பரம். தம் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். சரியாக பனிரெண்டு ஆகியிருந்தது.

6

ஜாலக்காரி

திடுக்கிட்டுப்போய்க் கண்விழித்துப் பார்த்தார் பீதாம்பரம். தாம் தூங்கியது எவ்வளவு பெரிய தவறு என்று தம்மையே கடிந்துகொண்டு, கைக்கடிகாரத்தைப் பார்த்ததும் தான் அவருக்குச் சற்று ஆறுதலாயிருந்தது. அப்போது தான் மணி மூன்று ஆகியிருந்தது. சுகுமாரனைத் தட்டியெழுப்பினார். அவன் வெடுக்கென்று எழுந்து நின்றான். அவனும் மயக்கம் தெளிந்து எழுந்தவன், தூக்கம் மேலீட்டால் சாய்ந்து விட்டான் போலிருக்கிறது.

"சுகுமார்! இனி நாம் ஒரு கணம்கூட இங்கே இருக்கக் கூடாது. சாந்தா கீழே ஒரு அறையில் அடைக்கப்பட்டிருக்கிறாள். அவளை அழைத்துக்கொண்டு நாம் எங்காவது

பதுங்கிச் சென்று, எப்படியும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றுவிட வேண்டும்" என்று அவசர அவசரமாகக் கூறினர் பீதாம்பரம். எல்லாவற்றுக்கும் பலமாகத் தலை யசைத்த சுகுமாரன், ஜன்னல் பக்கமாகச் சென்று வெளியே பார்த்தான். கீழே உள்ள பூஞ்செடியருகில் ஒரு மனித உருவம் நிற்பது நன்கு தெரிந்தது. பீதாம்பரத்திடம் கூறினன். அவரும் அந்த உருவத்தைப் பார்த்தார்.

"சரி சுகுமாரா! இவனை நான் கவனித்துக் கொள்ளுகி றேன். நீ கீழே சென்று, இடது பக்கமாகவுள்ள ஐந்தாவது அறையிலிருக்கும் சாந்தாவை வெளியே அழைத்துக்கொண்டு போ. கார் ஷெட்டில் மறைந்து நில்லுங்கள். அதற்குள் நான் வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு ஜன்னல் வழியாக வெளியே போக முயன்ற பீதாம்பரம் மீண்டும் அறைக்குள் வந்தார். தம் கால்சட்டைப் பைக்குள்ளிருந்த ஒரு கொத்துச் சாவியை சுகுமாரனிடம் கொடுத்து, "இதில் ஏதாவது ஒன்று அவள் அறையிலுள்ள பூட்டுக்குச் சரியாக இருக்கும். கவன மாக நடந்து கொள்" என்று சொல்லிவிட்டு வெளியேறி, தண் ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு விர்ரென்று இறங்கி ஞர். சுகுமாரன் ஏக மகிழ்ச்சியோடு மாடிப்படிகளில் இறங் கிச் சென்று, பீதாம்பரம் சொல்லியபடி, இடப்பக்கமாக ஐந்தாவதிருந்த அறையைத் திறக்க முயன்றான். கொத்தி லுள்ள மூன்றாவது சாவி அவனுக்குக் கைகொடுத்தது. கத வைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். இதற்குள் விழித்துக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்த சாந்தா பதறிப்போய், எழுந்து நின்றாள். அவளருகில் சென்ற சுகுமாரன், அவளைச் சப்தம் செய்யாமலிருக்கும்படி சைகை காட்டிவிட்டு,

"இப்போது நாம் உடனே போயாகவேண்டும். நானும் பீதாம்பரம் ஸாரும் உன்னைத் தொடர்ந்து நீ இங்கு வந்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் இங்கே வந்து விட்டோம். இங்கிருந்தால் உன்னுடைய உயிருக்கு எந்நேரமும் ஆபத்து தான். என்னுடன் வா. வெளியே அவர் நமக்காகக் காத்துக் கொண்டு நிற்பார்" என்று அவசரப் படுத்தினன். இவை களெல்லாவற்றையும் கேட்டும்கூட பதிலொன்றும் சொல்லா மல் சாந்தா கற்சிலையைப்போலவே நின்று கொண்டிருந்தாள். சுகுமாரனுக்குக் காலம் வீணுகக் கரைவது கொஞ்சம்கூடப்

பிடிக்கவில்லை. அறையின் மூலையிலிருந்த சாந்தாவின் கைப் பெட்டியை எடுத்து வந்து அவளிடம் கொடுத்து விட்டுச் சற்று கோபமாகவே பேசினான்.

"உனக்காக நாங்கள் இரண்டு பேரும் உயிரைத் திரண மாக மதித்து வந்திருக்கிறோம். நீ இப்படி பேசாமடந்தை யாக நிற்கிறாயே. உம், புறப்படு" என்று துரிதப்படுத்தினான். சாந்தா மெதுவாக அசைந்து கொடுத்தாள். சுகுமார னுக்கு இப்போதுதான் மகிழ்ச்சி பிறந்தது. இருவரும் அறைக்கு வெளியே வந்தனர். தனக்கு முன்னே இருளில் பதுங்கிச் செல்லும் சுகுமாரனையே பின்பற்றிச் சென்றாள் சாந்தா. இருவரும் பங்களாவை விட்டு வெளியேறி, கார் ஷெட்டை அடைவதற்குள் போதும் போதுமென்றாகி விட் டது. கார் ஷெட்டை அந்த இருட்டிலும் நோட்டம் விட் டான் சுகுமாரன். வெறும் ஓலைக் கீற்றுகளால் குடிசைபோல கட்டப்பட்டிருந்தது.

அமைதியாக உட்கார்ந்திருந்த சுகுமாரனுக்கு அதிக நேரமாக, பீதாம்பரத்தைக் காணாமல் போகவே, மனம் வாதிக்க ஆரம்பித்து விட்டது. ஏதாவது அசம்பா விதமாக நடந்து விட்டதோ என்று கூட சந்தேகப் பட்டு விட்டான். ஆனால், அந்தமாதிரியெல்லாம் ஒன்றும் நடக்க வேண்டாம் என்று பிரார்த்தித்தது அவனுடைய மனம். தனக்குள்ளாகவே "என்ன, இதுவரை காணோம். நமக்கு முன்னால் வந்து நிற்பதாகச் சொன்னாரே" என்று வெளிப்படையாக முனகினான்.

திடீரென்று சாந்தா பேசினாள். "அவர் எப்படி வரப் போகிறார்? அவர் தான் இதற்குள் யமலோகத்தையே ஒரு சுற்றுச் சுற்றியிருப்பாரே" என்று ஏளனமாகக் கூறி னாள். திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப்பார்த்தான் சுகுமாரன். சாந்தா கையில் பிடித்த துப்பாக்கியை, சுகுமாரனுடைய நெஞ்சுக்கு நேராகக் குறி வைத்துப் பிடித்துக் கொண்டு எக்களிப்போடு நிற்பது அந்த இருட்டிலும் மிக நன்றாகத் தெரிந்தது. தான் காண்பது நிஜமா என்று ஒரு கணம் திணறினான் சுகுமாரன். சாந்தாவா தன்னைக் கொல்லத் துப்பாக்கியை நீட்டுகிறாள்....? திடீரென்று யாரோ அவன் இதயத்தில் சவுக்கைக் கொண்டு அடிப்பது போலி ருந்தது. 'முட்டாளே! இவள் தான் சாந்தா என்று

உனக்கு எப்படித் தெரியும்? சாந்தாவின் அறையில் எவளாவது பெண் இருந்தால் அவள் தான் சாந்தா என்று முடிவு செய்து விடுவதுதான் புத்திசாலித்தனமா?" என்று சுகுமாரனுடைய காதுக்குள் யாரோ உரத்த குரலில் கத்துவது போலிருந்தது. சுகுமாரனுக்குக் கணநேரத்தில் வியர்த்துக் கொட்டியது. தாங்கள் செய்துவிட்ட மகத்தான தவறு எவ்வளவு பெரிய ஆபத்தில் கொண்டு வந்து விட்டது என்பதை எண்ணுகையில் அவனுக்கு அழவேண்டும் போலிருந்தது. வீணுகத் தங்கள் தவருல், ஒரு பெண்—உண்மைச் சாந்தா—சாகப் போகிருள்; ஒரு வேளை செத்திருப்பாள். எதிரே நிற்கும் பெண்பேய் சொல்கிறபடி இதற்குள் பீதாம்பரமும் இறந்திருக்கவேண்டும், இதோ நானும் இன்னும் சிறிதுநேரத்தில்.... இவைகளையெல்லாம் நினைக்கும்போது தலையில் பலமாக அடித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது சுகுமாரனுக்கு. மீண்டும் அந்தக் கிராதகி பேச ஆரம்பித்தாள். செயலிழந்து நின்று கொண்டிருந்த சுகுமாரன் வெறுப்போடு அவள் சொல்வதைக் கவனித்தான்.

"உனக்கு மன்னிப்பே கிடையாது. உன் குரு போன வழிக்கே நீயும் போவதைத் தவிர வேறு வழியேயில்லை. இதோ....". துப்பாக்கியின் குதிரையைப் பிடித்து அழுத்தப் போனுள். சுகுமாரன் படக்கென்று கண்களை மூடிக்கொண்டான். ஆனல் துப்பாக்கி வெடிக்கவில்லை. பதிலாக, அவளுடைய துப்பாக்கி பிடித்த கையைத் திருகிக் கொண்டு, இன்னொரு கையால் யாரோ அவளுடைய வாயைப் பலவந்தமாக மூடிஞர்கள்.

இதுவரை துப்பாக்கி வெடிக்காமல்போகவே, கண் விழித்துப் பார்த்தான் சுகுமாரன். நடப்பது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"சுகுமாரா! கூரையில் தூணைப்பிணைத்துக் கயிறு கட்டியிருப்பார்கள். சீக்கிரம் அவிழ்த்துக் கொண்டுவா" என்று சொல்லிக்கொண்டே தம் சட்டைப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து அவளுடைய வாயில் திணித்தார். இதற்குள் சுகுமாரன் எங்கிருந்தோ கயிறு சம்பாதித்துக் கொண்டு வந்து விட்டான். பெண்ணென்றும் இரக்கம் பாராமல் அருகில் கிடந்த ஓட்டை மேஜை ஒன்றின் காலில் அவளைப் பிடித்து வரிந்து வரிந்து கட்டிஞர் பீதாம்பரம். ஓர் அறியாப்

பெண்ணைக் கொலை செய்ய பத்து இருபது ஆண்கள் தான் அலைகிறார்கள் என்றால், மெல்லிய மனம் படைத்த ஒரு பெண்ணே அவர்களுக்கு ஒத்தாசையா யிருந்தால்?

சோர்ந்த உள்ளத்தோடு துப்பறியும் நிபுணர்கள் இருவரும் பாதை யோரமாக இருந்த செடிகளுக்குள் மறைந்து மறைந்து நடந்து கொண்டிருந்தார்கள். "சுகுமாரா! சாந்தாவுக்குப் பதிலாக வேறு ஒரு பெண்ணை அவளுடைய அறையில் வைத்துவிட்டு, இவள் பக்கமாக நம் கவனத்தைத் திருப்பிவிட்டு விட்டார்கள்" என்று ஏமாற்றத்தோடு கூறினார் பீதாம்பரம்,

"இதற்குள் சாந்தாவுக்கு ஒரு ஆபத்தும் நேர்ந்திருக்காதே?" என்று கவலையோடு கேட்டான் சுகுமாரன்.

"எனக்கும் அதுதான் பெரிய கவலையாயிருக்கிறது. இருந்தாலும் பதினொரு மணிவரை கெடு விதித்திருக்கிறார்களே. அந்த நம்பிக்கையில் தான் நாம் பாடுபட வேண்டும்" என்று சொல்லி விட்டுச் சிறிது தூரம் மௌனமாகவே நடந்து கொண்டிருந்த பீதாம்பரம், "சுகுமாரா! இந்த டூப்ளிகேட் சாந்தா ரொம்பக் கெட்டிக்காரிதான். எவ்வளவு ஜாலக்காகத் தன்னை நம்பும்படி செய்து விட்டாள் பார்த்தாயா? அவளுடன் ரயிலில் வந்தான் பார் ஒரு தடியன், அவன் தான் பங்களாவில் செடிமறைவில் நின்று கொண்டிருந்தவன். நான் கீழே இறங்கியதும் என்மீது முரட்டுத்தனமாகப் பாய்ந்துவிட்டான். அப்போது என் அஹிம்சைக் கொள்கையெல்லாம் எங்கோ பறந்து விட்டது. வெறியோடு, அவனைத் தரையில் தூக்கி அடித்து விட்டேன். அவ்வளவுதான்! அவன் அப்புறம் எழுந்திருக்கவில்லை. செத்திருப்பான் என்று பயப்படாதே" என்று சொல்லிச் சிரித்தார் பீதாம்பரம்.

இருவரும் தாம்பரம் ரயில் நிலையத்தை அடையும் போது மணி ஐந்தாகிவிட்டது. ஐந்தரைக்குப் புறப்படத் தயாராயிருந்த ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். திடீரென்று பீதாம்பரத்துக்கு ஒரு ஞாபகம் வந்தது. ரயிலை விட்டு இறங்கிச் சென்று, பிளாட்பாரத்திலிருந்த பொது டெலிபோன் பெட்டிக்குள் நுழைந்து ஏதோ ஒரு நம்பரைச் சுழற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு

வெளியே வந்து சுகுமாரனுடன் உட்கார்ந்து கொண்டார். அவர் 'டெலிபோன் பூத்தை' விட்டு வெளியே வரும்போது ஒரு மனிதன் விறுட்டென்று அவருக்குக் குறுக்கே நடந்து சென்றான். அதை அவர் அப்போது கவனிக்கவில்லை. ரயில் புறப்பட்டதும் தான் அந்த நபர் யார் என்று அவர் கவனத்துக்கு வந்தது. முதல் நாள் அவரைப் பின் தொடர்ந்து சென்று, அவரைத் துப்பாக்கியால் சுட்டவனே தான். ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிப்பார்த்தார். அந்த மனிதன், டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

"டெலிபோனில் யாருடன் பேசினீர்கள் ஸார்?" என்று மெதுவாக விசாரித்தான் சுகுமாரன்.

"சுருட்டு வியாபாரி முத்துசாமியுடன் பேசினேன்"

"என்ன பேசினீர்கள்?"

"பிறகு சொல்லுகிறேன். ஆனால் நம் காரியம் வெற்றி என்பதை மட்டும் தெரிந்து கொள். நாம் இப்போது சாந்தாவைப் போய்ப் பார்க்கப் போகிறோம். அவளைத்தேடிப் பிடித்துக் காப்பாற்றி விட்டோமானால், அடுத்தபடியாக நம்முடைய வேலை என்ன தெரியுமா?" என்று உற்சாகத் தோடு கூறிய பீதாம்பரம் கண்களைச் சிமிட்டிக் கொண்டு, "குற்றவாளியைப்பிடிக்கவேண்டியது தான்" என்று கூறினார். சுகுமாரன் வியப்போடு பீதாம்பரத்தை நோக்கினான். இரண்டு நாட்களாக இல்லாத ஒரு களை அவர் முகத்தில் அப்போது குடிகொண்டிருந்தது. பீதாம்பரத்தின் முகம் நிறைந்து காணப்பட்டதைப் பார்த்த பிறகுதான் சுகுமாரனுக்குத் திருப்தியாயிருந்தது.

பீதாம்பரம் சட்டைப் பையிலிருந்து காகிதத்தையும் பேனாவையும் எடுத்து இதுவரை நடந்தவைகளைப் பூராவும் எழுதினார். பிறகு தாம் எழுதிய எல்லாவற்றையும் ஒரு முறை படித்துப் பார்த்தார். ஏதாவது விட்டுப் போயிருக் கிறதா என்று ஒரு முறை யோசித்துப் பார்த்தார். டாக்ஸி டிரைவர், சகாதேவனைப் பற்றிச் சொல்லிய ஒரு விஷயத்தை எழுத மறந்து விட்டார். அது மிகவும் முக்கியமானது. ஆகவே அதையும் எழுதிக் கொண்டார். இப்போது

மீண்டும் தாம் எழுதியதைப் படித்துப் பார்த்தார் பீதாம்பரம். படித்து முடிந்ததும் அந்தக் காகிதத்தைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். அவருடைய இதழ்கள் மகிழ்ச்சியால் மலர்ந்தன.

7

வாழக் கூடாதவர்கள்

பீதாம்பரமும் சுகுமாரனும் ரயிலை விட்டிறங்கும்போது மணி ஏழு ஆகிவிட்டது. அவர்கள் மதிப்பிட்டதைவிட கால்மணி நேரம் பிந்தியே ரயில் வந்து சேர்ந்தது. "சுகுமார்! இன்னும் நான்கு மணி நேரம் தான் இருக்கிறது. அதாவது, சாந்தாவின் உயிரைக் காப்பாற்ற நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அவகாசம் இன்னும் நான்கு மணி நேரங்களே தான். அதோடு நாம் இந்த வழக்கில் ஈடுபட்டு இரண்டு நாட்கள் பூர்த்தியாக இன்னும் நான்கு மணி நேரங்கள் தானிருக்கின்றன" என்று சொல்லிக் கொண்டே ரயில் நிலையத்தைவிட்டு, சுகுமாரனுடன் வெளியே வந்தார் பீதாம்பரம்.

சாந்தாவின் அறைக்கு முன்னால், முதல் நாள் கண்ட அதே வேலைக்காரியே நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் பீதாம்பரத்துக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டுவந்தது. அவளை அப்படியே எரித்து விடலாமா என்றுகூட அவர் உள்ளம் துடித்தது. கோபத்தோடு அவளை நெருங்கினார்.

"நீ நேற்று எங்களை ஏமாற்றியதற்கு என்ன பரிசு தரப் போகிறேன் என்பதைப் பார்! உண்மையைச் சொல். நேற்று இந்த அறையில் ஒருத்தி இருந்தாளே; அவள் தான் தன்னைச் சாந்தா என்று என்னிடம் சொல்லும்படி உனக்குச் சொன்னாளா?" என்று கேட்டார். பயந்து நடுங்கிவிட்ட அந்த வேலைக்காரி, கலவரம் படர்ந்த தன் முகத்தை, ஆமாம் என்பதற்கு அடையாளமாக ஆட்டினாள்.

"சரி, இப்போது உள்ளே சாந்தா இருக்கிறாளா?" என்று இன்னும் கோபமாகவே கேட்டார் பீதாம்பரம்.

'இல்லே. கொஞ்சம் முந்தித்தான் வெளியே போனுங்க."

"எங்கே போயிருக்கிருள் என்று தெரியுமா?"

யாரோ சாந்தாவுடன் டெலிபோனில் பேசியதாகவும், உடனே அவள் எழும்பூர் ரயில் நிலேயத்துக்குச் சென்றதாகவும் கூறினுள். முதல் நாள் அறையில் இருந்தவள் சாந்தாவின் உயிர்த் தோழியான துளசி என்றும் கூறினுள் வேலேக்காரி. சாந்தா ஊதா நிறப் புடவையும் சிவப்பு நிற ஜாக்கெட்டும் அணிந்து கொண்டு சென்றிருக்கிருள் என்பதையும் தெரிந்து கொண்டார் பீதாம்பரம்.

இருவரும் விறு விறு வென்று வெளியே வந்தனர். "சுகுமார்! தாம்பரம் ஸ்டேஷனில் எனக்குப் பின்னுல் டெலிபோன் பூத்துக்குள் சென்ருன் பார்; அவன்தான் ஏதோ சூழ்ச்சியாகப் பேசி, சாந்தாவை எழும்பூர் ஸ்டேஷனுக்குச் செல்ல வைத்திருக்கிருன்" என்று கூறினுர் பீதாம்பரம். சுகுமாரனுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லே.

இருவரும் எழும்பூர் மின்சார ரயில் பிளாட்பாரத்துக்குள் வந்து சேரும்போது எட்டரைமணியாகி விட்டது. நாலு புறமும் நோட்டம் விட்டார் பீதாம்பரம். கடைசியில் கிடந்த பெஞ்சு ஒன்றில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. கூர்ந்து கவனித்தார். நிச்சயமாக அவள் சாந்தாவே தான். வேலேக்காரி சொன்ன அத்தனே அடையாளமும் அவளிடம் இருந்தது. சுகுமாரனே அழைத்துக் கொண்டு அந்தப் பெண்ணருகில் சென்ருர். புதியவர்களேக் கண்டதும் புரியாமல் விழித்தாள் அவள். பீதாம்பரம் தங்கள் இருவரையும் அறிமுகம் செய்து கொண்டார்.

"அம்மா! உன் பெயர் சாந்தா தானே?" என்று அடக்கமாகக் கேட்டார்.

"அடடே! அதெப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

"நல்ல வேளே! கொஞ்சம் கவனக்குறைவாயிருந்தால், அந்த மோட்டார் வான்..." என்று இழுத்தார் பீதாம்பரம்.

"எனக்கு அது ஒரு கண்டம்தான். தப்பித்து விட்டேன்" என்று உற்சாகமாகக் கூறினுள் சாந்தா.

"இன்னும் ஒரு கண்டம் இருக்கிறது. அது மிகப் பெரிய கண்டம். பதினெரு மணிக்குள் தான் அந்தக்கண்டம்

தீரவேண்டும். அதைப் பிறகு சொல்லுகிறேன். இப்போது நீ இங்கே எதற்காக உட்கார்ந்திருக்கிறாய்?"

"துளசி வருகிறாள். தன் தாயார் தாம்பரத்தில் அவளுடைய மாமா வீட்டில் தங்கியிருப்பதாகவும் அவளைக் கூட்டிக் கொண்டு வருவதாகவும் சொன்னாள்."

"அதனால் உன்னை ஸ்டேஷனுக்கு வரச் சொன்னாளாக்கும். அதற்காக நீ இங்கு ஏன் வரவேண்டும்? கோட்டை ஸ்டேஷனிலேயே அவர்களை வரவேற்கலாமே!"

"அவள் கூட போன் பண்ணவில்லை, அவள் மாமா தான் என்னை இங்கு வந்து காத்திருக்கும்படி டெலிபோனில் கூறினார்."

"இதில் தானிருக்கிறது உன் உயிர் போவதும் போகாததும். சரி, நீ இங்கு ஒரு நிமிஷம் கூடத் தங்கக்கூடாது. இப்போது நாம் சுருட்டு வியாபாரி முத்துசாமி பிள்ளை வீட்டுக்குப் போகவேண்டும். அங்கு போய் எல்லாம் சொல்லுகிறேன்," என்று சொல்லிவிட்டு நடந்தார். ஒன்றும் புரியாமல் சாந்தா துப்பறியும் நிபுணர்கள் இருவரையும் பின் தொடர்ந்தாள்.

மூவருமாக முத்துசாமியின் வீட்டை அடையும்போது ஒன்பதரை மணியாகி விட்டது. பீதாம்பரம் சிறிது நேரம் எல்லோருடனும் பேசிக் கொண்டிருந்து விட்டு, சாந்தாவை மட்டும் தனியாக அழைத்துச் சென்று அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தார். பேசிமுடித்து இருவரும் ஹாலுக்கு வந்தனர். அப்போது சாந்தாவின் முகம் ஏனோ வாட்டமடைந்திருந்தது. எல்லோரையும் அப்பால் நகரச் சொல்லிவிட்டு டெலிபோனில் யாருடனோ சிறிது நேரம் பேசினார் பீதாம்பரம். இதெல்லாம் ஏதோ நாடகத்துக்கு ஒத்திகை பார்ப்பது போலிருந்தது சுகுமாரனுக்கு. சிறிது நேரத்தில் முத்துசாமியிடம் சென்று "சாந்தாவுக்கு இன்றே சொத்துக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். வக்கீல் நம்முடையவர்தானே; சொன்னால் செய்யமாட்டாரா? அதனால் நாங்கள் இப்போது சாந்தாவை வக்கீலிடம் அழைத்துக் கொண்டு போகிறோம். உங்கள் டிரைவரைக் காரை எடுக்கச் சொல்லுங்கள்" என்றார் பீதாம்பரம். ' அவர் பேசுவது அங்கு நின்று கொண்டிருந்த எல்லோருக்குமே ஆச்சரியமாயிருந்தது.

பீதாம்பரமும் சுகுமாரனும் சாந்தாவை வழி நடத்திக் கொண்டு, வக்கீல் அனந்தராமன் இருக்கும் மாடி அறைக்குச் சென்றனர்.

"வக்கீல் ஸார்! சாந்தாவை நான் சொன்னபடி காப்பாற்றி விட்டேன். ஆனாலும் இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. ஏனென்றால், இப்போது பத்தரை மணிதானே ஆகிறது?" என்றார்.

"நான் சொன்னால் கேட்டீர்களா? சாந்தாவுக்கு ஒரு ஆபத்தும் வராது. அவளுக்கு யார் விரோதி இருக்கப்போகிறார்கள்?" என்று சாந்தாவைப் பார்த்துக் குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டே கூறினார் வக்கீல்.

"அதெப்படிச் சொல்ல முடியும்? இரணியனைக் கொல்வதற்கு நரசிம்மாவதாரமெடுக்கவில்லையா? அந்தமாதிரி நீங்கள் திடீரென்று தாடி வைத்துக் கொண்டு, துப்பாக்கியால் சாந்தாவைச் சுடவும் செய்யலாமே" என்று எக்காளத்தோடு கூறினார் பீதாம்பரம்.

இதைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போன வக்கீல், பீதாம்பரத்தை உன்னிப்பாகப் பார்த்தார்.

"பயப்படாதீர்கள் வக்கீல் ஸார்! நேற்று முன்தினம் காலை பதினொரு மணிக்கு இளம்தாடியுடன் நளினா ஹோட்டலுக்கு வந்திருந்தீர்களே ஞாபகம் இருக்கிறதா? நேற்று நான் உங்களைப் பார்த்து விட்டு, சாந்தாவைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனேனே, அப்போது நீங்கள் உடனே சாந்தாவுக்கு போன் செய்து இங்கு வரவழைத்தீர்கள். சாந்தாவுக்குப் பதிலாக துளசியை அவள் அறையில் உட்கார வைத்து எங்களை ஏமாற்றினீர்கள்."

"பொய்! சுத்தப் பொய்! சாந்தா, இவன் உளறுவதை நீ நம்புகிறாயா?" என்று கூச்சலிட்டார் வக்கீல் அனந்தராமன்.

"மோட்டார் வானை சாந்தாவின் மீது ஏற்றப் பார்த்தீர்கள். அது முடியாமற் போகவே, என் கண்ணில் படும்படியாக சுப்பாமணியின் வீட்டுக்கு முன்னால் அந்த மோட்டார் வானை நிறுத்தி வைத்திருந்தீர்கள். நான் உங்களைச் சந்தித்தபோது, நீங்கள் அந்தக் காரணத்தைக் காட்டி, என் கவனத்தை சுப்பாமணி பக்கம் திருப்பப் பார்த்தீர்கள். அது போகட்டும், சகாதேவன் உங்களிடம் சாந்தாவுக்கு

ஆபத்து என்பதைத் தெரிவிக்க இரண்டு மூன்று முறை வந் தான் என்று சொன்னீர்களே ; அது சுத்தப் பொய்: ஏனென் ருல், சாந்தாவின் அப்பா, சகாதேவனுக்கு மாதம் இருபது ரூபாய் கொடுக்கும்படி உங்களுக்குச் சொல்லி யிருந்தார். அந்தப் பணத்தை ஆறு மாத காலமாக நீங்கள் கொடுக்கவே யில்லே. அதனுல் அவன் நிறைய கடன் வாங்கி யிருக்கிருன். சாந்தாவை நீங்கள் கொல்லப்போவதை உணர்ந்து தான் சகாதேவன் என்னிடம் சொன்னுன். அவனே பூராத் தகவலே யும் சொல்லவிடாதபடி ரயிலுக்கு முன் தள்ளிக் கொன்று விட்டீர்கள்" என்று பெரிய குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தார் பீதாம்பரம்.

"பொய் ! சுத்தப் பொய் ! உன்னே என்ன செய்கிறேன் பார் !" என்று கத்திக் கொண்டே அறையை விட்டு வெளி யேறி மாடிப் படிகளில் வேகமாக இறங்கினுர் வக்கீல்.

"தாம்பரத்திலிருந்து, சுருட்டு வியாபாரி முத்துசாமிக் குத்தான் போன் செய்தேன், சுகுமாரா. நேற்று மாலே சாந்தா அவர்கள் வீட்டுக்கு வருவதாகத் தெரிவித்தாள் என்று முத்து சாமியின் மனேவி சொன்னுர்களல்லவா ! அதன்படி சாந்தா மாலேயில் அங்கு வந்தாளா என்றுதான் கேட்டேன்" என் ருர் பீதாம்பரம்.

"அங்கே போவதற்குத் தான் புறப்பட்டுக் கொண் டிருந்தேன். அதற்குள் வக்கீல் என்னேக் கூப்பிட்டார்" என்ருள் சாந்தா.

"நான் அவரைப் பார்த்து விட்டுச் சென்றவுடன் உன்னே ஏன் அழைக்க வேண்டும் ? இதில் தான் என் சந் தேகம் முளேத்தது. ஏனென்ருல் அடுத்தபடியாக உன்னேத் தான் நான் சந்திக்கப்போவதாக அவரிடம் கூறிவிட்டுச் சென்றேன். அப்படி யிருக்கும்போது அவர் எதற்காக உன் னேக் கூப்பிடவேண்டும்? இதை வைத்துக்கொண்டு மற்றவை களுடன் இணேத்துப் பார்த்தேன். சாந்தாவின் லட்சக்கணக் கான சொத்துக்கு ஆசைப்பட்டு, அவளேக்கொன்று தீர்க் கவே வக்கீல் திட்டம் போட்டு வேலே செய்கிருர் என்று எல்லாச் சம்பவங்களும் எனக்குக் கூறின" என்ருர் பீதாம் பரம்.

“அவரைக் குற்றவாளி என்கிறீர்கள்; கீழே இறங்கி
போக விட்டு விட்டீர்களே?” என்று அச்சத்தோடு கேட
டாள் சாந்தா.

“முத்துசாமியின் வீட்டிலிருக்கும்போது நான் போ
செய்தேனே கவனம் இருக்கிறதா? இந்நேரம் என் நண்ட
இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கீழே இருப்பார். இதே நேரத்தி
வக்கீலின் கையாட்கள் எல்லோரையுமே சுற்றி வளைத்திரு
பார்கள். வாருங்கள், நாமும் போவோம்” என்று சொல
விட்டு, சுகுமாரனையும் சாந்தாவையும் கீழ்த்தட்டுக்கு அ
துச் சென்றார். இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஏற்கெனவே நா
கைந்து சிப்பாய்களுடன் அங்கு நின்று கொண்டிருந்த
அவர்களுக்கு மத்தியில் வக்கீல் அனந்தராமன், பொறியிலக
பட்ட எலியைப் போல விழித்துக் கொண்டு நின்றிருந்தா

“என்ன பீதாம்பரம் ஸார்! இரண்டு நாளாக என் க
ணிலேயே அகப்படாமல் போய் விட்டீர்கள்? உங்களை நம்
துப்பாக்கியை வைத்துக் கொண்டு டெலிபோனடியிலே கா
திருந்தேன்” என்றார் பால்ராஜ்.

“நான் என்ன செய்வது? நம் வக்கீல் ஸார், எங்கள் இ
வருடைய திறமையையும் சோதித்துப் பார்த்தார். அதுவு
இரண்டே நாள் தவணையில் எங்கள் திறமையைச் சோதிக்
விரும்பினார்” என்று சொல்லிக் கொண்டே வக்கீல் பக்க
திரும்பிய பீதாம்பரம் “மிஸ்டர் அனந்தராமன்! கு
கெடுப்பவர்கள் எப்போதுமே வாழமுடியாது” என்றார்.

முற்றும்

Printed at Rajah Power Press, Madras-14